

40 நாள்

உபவாசம் & ஜெபம்

ஆகஸ்டு7-செப்.15 2024

# அசைவில்லாத ராஜ்யம்

எபிரெயர் 26-29

NECF MALAYSIA

# பொருளடக்கம்

## முகவுரை


அசைவில்லாத ராஜ்யம் நமக்குரியது

அசைவில்லாத ராஜ்யம்

ஒரு உறுதியான மறுசீரமைக்கப்பட்ட
ஆவிக்குரிய வாழ்க்கைமுறை

NECFன் பொது நிதிக்கு உதவுங்கள்


## தியானம் & ஜெபம்


| | |
|---|---|
| நாள் 1 - 5 | அசைவில்லாத ராஜ்யம் |
| நாள் 6 - 10 | அசைவில்லாத செய்தி |
| நாள் 11 - 15 | அசைவில்லாத உறவு |
| நாள் 16 - 20 | அசைவில்லாத நடை |
| நாள் 21 - 25 | அசைவில்லாத நம்பிக்கை |
| நாள் 26 - 30 | அசைவில்லாத அன்பு |
| நாள் 31 - 35 | அசைவில்லாத விசுவாசம் |
| நாள் 36 - 40 | அசைவில்லாத ஊழியம் |


## நன்றி நவில்தல்



# அசைவில்லாத ராஜ்யம் நமக்குரியது

ரெவ். டாக்டர். யூ ஹாங் செங்,
NECF சேர்மன்

அசைவில்லாத வாழ்க்கையில் பாதுகாப்பாக இளைப்பாற வேண்டுமென்பது நம் எல்லாருடைய வாஞ்சையாயிருக்கிறது. நாம் அனுபவிக்கிற நல்ல காரியங்கள் நீடித்திருக்க வேண்டுமென்று நாம் விரும்புகிறோம்.

ஆனால் வாழ்க்கையோ, பலவிதமான கஷ்டங்களை நம் வழியில் தூக்கி எறிவதால், நம்மை பாதுகாப்பற்றவர்களாகவும் பயமுள்ளவர்களாகவும் மாற்றி விடுகிறது. இப்படிப்பட்ட கஷ்டங்களில் சில, நம்மை நடுங்கச் செய்து விடுகிறது. எனவே நாம் இப்படிப்பட்ட நிச்சயமற்ற தன்மைகள் ஒவ்வொன்றையும் களைந்து, பாதுகாப்பை உருவாக்க முயற்சிக்கிறோம். ஆனால் அதற்குத் தேவையான சக்தி, வளங்கள் மற்றும் முன்னறிவிலே நாம் குறைவுபட்டிருப்பதால், பாதுகாப்பை உருவாக்க நாம் எடுக்கிற முயற்சி வேலை செய்யாது என்பதை கண்டறிகிறோம்.

உடைந்துபோன இவ்வுலகம் தொடர்ந்து நம்மை முகத்தில் குத்துகிறது. அரசாங்கங்கள் ஏமாற்றம் அளிக்கிறது. முதலாளிகள் ஆட்குறைப்பு செய்கிறார்கள். பொருளாதாரங்கள் சீர்குலைகிறது. சரீரங்கள் பெலவீனமடைகிறது. உறவுகள் பிரிகின்றன. கள்ளர்கள் திருடுகிறார்கள். நம்மால் நேசிக்கப்படுகிறவர்கள் மரிக்கிறார்கள்.

எனவே, மெய்யான பாதுகாப்புக்காக ஏங்குகிற நாம் அசைக்கப்பட்டுப் போகிறோம். தேவனுடைய பிரசன்னத்தில் மாத்திரமே உள்ள அந்த மெய்யான பாதுகாப்பை விட்டு பாவம் நம்மை பிரித்து விட்டதால், அதற்கான ஏக்கம் தொடருகிறது. தேவன் இல்லாத பட்சத்தில் இந்த உலகத்தின் ராஜ்யங்கள் அசையக்கூடியதாவும், நிச்சயமற்றதாகவும், பாதுகாப்பற்றதாகவும் மற்றும் உடையக்கூடியதாகவும் இருக்கிறது. அசைவில்லாத ராஜ்யத்தில் தேவனுடன் இருப்பதால் மாத்திரமே ஒருவர் மெய்யான பாதுகாப்பை காண முடியும்.

இயேசு நமக்கு அசைவில்லாத ராஜ்யத்தைக் கொடுக்க விரும்புகிறார். இயேசுவை விட்டுவிடாதபடி எபி 12:18-29 கிறிஸ்தவர்களை ஊக்குவிக்கிறது. இயேசுவை விட்டுவிடுதல் என்பது அசைவில்லாத ராஜ்யத்தை விட்டுவிடுவதாகும்.

இயேசுவுக்கு தங்களை ஒப்புக்கொடுத்தலில் நிலையற்றிருந்த யூத கிறிஸ்தவர்களுக்கு எபிரேய நிருபம் எழுதப்பட்டது. அவர்களுடைய செயலற்ற தன்மை மற்றும் உபத்திரவத்தின் நிமித்தமாக இப்படிப்பட்ட நிலையில் அவர்கள் இருந்தார்கள். இயேசுவைப் பின்பற்றுவதற்கு அதிக தியாகம் செய்ய வேண்டியிருப்பதால் யூத கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்தை விட்டுவிடுவதைப் பற்றி யோசித்திருக்கலாம். இன்றைக்கு விசுவாசிகளாகிய நாம் அனுபவிக்கிற சூழ்நிலையும் கூட இப்படி இருக்கலாம்.

சீனாய் மலையின் மகிமைக்குப் பதிலாக சீயோன் மலையின் மகிமையில் களிகூரும்படியும், தேவனுடைய அசைவில்லாத ராஜ்யத்தில் நம்பிக்கை வைக்கும்படியும் எபி 12:18-29ல் எபிரேயர் புத்தகம் யூத விசுவாசிகளை அறிவுறுத்துகிறது.

சீனாய் என்பது பழைய முறைமைகள் ஒழிந்து போவதைக் குறிக்கிறது. சீனாய் என்பது நாம் தேவனிடத்திலிருந்து பிரிந்திருக்கிறதைக் குறிக்கிறது. சீனாய் என்பது தேவனுடைய பரிசுத்தத்தைக் குறித்த பயம் மற்றும் அதை குலைப்பதால் வரும் நியாயத்தீர்ப்பைக் குறித்த பயத்தினால் நிறைந்துள்ளது. நியாயப்பிரமாணத்தின் கீழ் தேவனுடைய பிள்ளைகள் தேவனுடைய நீதியுள்ள நியாயத்தீர்ப்பு, குற்ற உணர்வு, மற்றும் அவரை விட்டு பிரிந்திருக்கிறதைக் குறித்தும், தேவனுடைய சிங்காசனத்தை தைரியமாய் நெருங்குவதைக் குறித்த நிச்சயமற்ற தன்மையையும் உணர முடிகிறது.

தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக, நாம் அந்த மலைக்கு வந்து சேரவில்லை. கிறிஸ்துவுடன் ஐக்கியப்பட்ட நாம் அதைக் காட்டிலும் மேன்மையான மலைக்கு வந்து சேர்ந்துள்ளோம் என எபிரேயர் புத்தகத்தின் ஆசிரியர் கூறுகிறார். அதுவே சீயோன் மலை (வசனம் 22ஐ பார்க்கவும்)

சீயோனிலே, தேவன் இன்னமும் அதே தேவன்தான், அவருடைய பரிசுத்தம் பாவத்தை பொறுத்துக் கொள்வதில்லை. ஆனால் எது மாறியிருக்கிறது என்றால், தேவன் இயேசுவின் மூலம் நம்முடைய பாவங்களை ஒழித்து விட்டார். இயேசு புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார்.

எனவே, தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றி வலியுறுத்துவதற்கு இந்த உண்மையானது, எபிரேயர் புத்தகத்தின் ஆசிரியரை ஏவுகிறது.

தேவனுடைய எச்சரிப்புகளுக்கு, செவி கொடுக்கமாட்டோமென்று விலகாதபடி எச்சரிக்கையாயிருக்க வசனம் 25ல் அவர் சொல்லுகிறார். ஏன்? ஏனென்றால் கடைசி நாளில் உண்டாகப் போகிற பூமியசைவிற்கு சீனாய் மலையில் உண்டான பூமியதிர்ச்சி ஒப்பிடத்தக்கதல்ல.

எபிரேயர் புத்தகத்தில் எச்சரிப்புகளுக்கு மேல் எச்சரிப்பாக நமக்கு வருகிறது:

"ஆகையால், நாம் கேட்டவைகளை விட்டுவிலகாதபடிக்கு, அவைகளை மிகுந்த ஜாக்கிரதையாய்க் கவனிக்கவேண்டும்" (எபி 2:1)

"சகோதரரே, ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள்" (எபி 3:12)

"ஒருதரம் பிரகாசிப்பிக்கப்பட்டும், பரமஈவை ருசிபார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும், தேவனுடைய நல்வார்த்தையையும் இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசிபார்த்தும், மறுதலித்துப்போனவர்கள், தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறபடியால், மனந்திரும்புதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாதகாரியம்" (எபி 6:4-6)

"சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொருபலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்." (எபி 10:26-27)

தேவன் நம்மை பரலோகத்திலிருந்து எச்சரித்திருக்கிறார். விசுவாசிகளே, செவி கொடுப்போம்!

நாம் எச்சரிப்புகளுக்கு செவி கொடுத்தால் அசைவில்லாத ராஜ்யத்தைப் பற்றிக் கொள்வோம்.

அசைவில்லாத ராஜ்யத்தைப் பெற்றிருக்கிற நாம் எப்பொழுதும் தேவனுக்கு நன்றி செலுத்தி, நம்மைக் காத்துக்கொள்ளும்படி "பயத்தோடும் பக்தியோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்து கிருபையைப் பற்றிக்கொள்ளக்கடவோம். நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறாரே" (12:28-29)

இந்த அசைவில்லாத ராஜ்யத்தைக் குறித்த மிகப்பெரிய சத்தியம் நம்முடைய ஆத்துமாவுக்குள் ஊடுருவட்டும், அப்பொழுது சூழ்நிலைகளால் நாம் அதிர்ச்சியடைந்தாலும், நாம் அவைகளால் அசையாமல் தொடர்ந்து அசைவில்லாத ராஜ்யத்தின் ஸ்தானாபதிகளாய் இருப்போம். நம்மைச் சுற்றியுள்ள காரியங்கள் அசைந்து, உடைந்து சிதைந்து போனாலும் நாம் ஸ்திரத்தன்மையுடன் இருப்போம் - இது நமக்குள் இருக்கிற ஏதாவதொரு காரியத்தினால் அல்ல, தேவனுடைய வாக்குதத்தம் மற்றும் நம்பிக்கையினால் நமக்குள் ஏற்பட்டுள்ள அசையாத நம்பிக்கையினால்.



# அசைவில்லாத ராஜ்யம்

போதகர். சாமுவேல் ஆங்
பொதுச் செயலாளர், NECF

இயேசுவின் முதலாவது வருகையில் தேவனுடைய ராஜ்யம் துவங்கப்பட்டது மற்றும் அவர் மீண்டும் வரும்போது எல்லாவற்றையும் பரிகரிக்கும்படி நிலைத்திருக்கும் ஒரே ராஜ்யம் அதுதான் (எபி 9:28). அவருடைய வருகையில், வானத்தையும் பூமியையும் அசைப்பதாக அவர் கொடுத்த வாக்குறுதியை அவர் நிறைவேற்றுவார். இது நடைபெற்றவுடன், அசைவில்லாதவைகள் மாத்திரமே நிலைத்திருக்கும் (எபி 12:26-27)

இந்த உலகத்தின் ராஜ்யங்கள் மற்றும் பொருளாதாரங்கள் அசைவுறுகிறது. யுத்தத்தினாலோ, வியாதியினாலோ, கொள்ளை நோயினாலோ, துப்பாக்கிச் சூடுதலினாலோ, ஊழலினாலோ அல்லது வறுமையினாலோ தேசங்கள் தங்களால் கட்டுப்படுத்த முடியாத காரியங்களால் தூக்கி வீசப்படுகிறது. நம்பிக்கையின்மையும் நிலையற்ற தன்மையும் வேகமாக வளர்ந்து வருகிற உலகம் இது.

ஜனங்கள் தங்கள் அடையாளத்தை அறிவதில் போராடிக் கொண்டிருந்து, இப்படிப்பட்ட நிலையற்ற தன்மை மற்றும் சவாலான சூழ்நிலைகளை அனுசரித்து செல்வதில் கடினப்படுகிறார்கள். கிறிஸ்தவர்கள் இதற்கு விதிவிலக்கல்ல. கடைசி கால தீர்க்கதரிசனங்கள், அவைகள் உண்மையோ அல்லது பொய்யோ, அடிக்கடி நம்முடைய விசுவாசத்தை பெலவீனப்படுத்தவே செய்கிறது.

நாம் அசைவில்லாத ஒரு ராஜ்யத்தைப் பெறுகிறோம் என எபிரேயர் புத்தகத்தின் ஆசிரியர் நினைவுபடுத்துகிறார். அதின் அர்த்தம் என்னவென்றால் தேவனுடைய ராஜ்யமானது மாற்றத்திற்கோ அல்லது ஸ்திரமற்ற தன்மைக்கோ உட்பட்டதல்ல. அது இவ்வுலக ராஜ்யங்களைப் போலல்ல, அவைகள் எழுவதும் வீழ்வதும் ஆட்சியாளர்களின் விருப்பங்களுக்குட்பட்டும் மற்றும் வரலாற்றின் அலைகளால் அடிபட்டும் உள்ளவைகள். தேவனுடைய ராஜ்யமோ மாறாதது மற்றும் அசையாதது, ஏனென்றால் அது என்ன நடந்தாலும் நிலைத்திருக்கக் கூடியது. அப்படியானால் அதின் அர்த்தம் என்ன?

முதலாவது, நாம் தேவனுடைய ஆட்சியில் நம்பிக்கை வைக்க முடியும் என்பது அதின் அர்த்தம். தேவன் தம்முடைய எண்ணத்தை மாற்றிக் கொள்வார் என்றோ, அவருடைய திட்டங்கள் தோல்வியடையுமென்றோ நாம் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. அவருடைய ராஜ்யம் நிலையானது அது போலவே அவருடைய வாக்குதத்தங்களும். இது நம்முடைய விசுவாசத்துக்கு உறுதியான அடித்தளத்தை அமைக்கிறது. அவர் சகலத்தையும் தன் கட்டுப்பாட்டில் வைத்துள்ளார் மற்றும் அவருடைய ராஜ்யம் நிலைத்திருக்கும் என்பதை அறிகிற நாம் அவரில் நம்பிக்கை வைக்க முடியும். நீதி, அன்பு மற்றும் சமாதானத்துக்காக நாம் பாடுபடலாம். எல்லாவற்றிலும் தேவனுடைய சித்தத்தை நாம் தேடலாம். பயத்துடனும் பக்தியுடனும் நாம் தேவனை ஆராதித்து, அவருக்கு நன்றி செலுத்தலாம்.

அடுத்ததாக, தேவனுடைய ராஜ்யம் நமக்கு நம்பிக்கையை கொடுக்கிறது. குழப்பமும் நிலையற்ற தன்மையும் நிறைந்த இவ்வுலகத்திலே, தேவனுடைய ராஜ்யமானது அசைவில்லாதது என்பதை அறிகிற நாம் ஆறுதலடையலாம். தேவனுடைய ராஜ்யத்தை தெளிவாக உணர்கிற, சகலமும் புதிதாகிற, தேவன் நம் எல்லாருடைய கண்களிலிருந்தும் கண்ணீரைத் துடைக்கிற நாளை நாம் எதிர்பார்க்கலாம். உபத்திரவங்கள் மற்றும் பாடுகள் மத்தியிலும் பொறுமையுடன் காத்திருக்க இந்த நம்பிக்கை நமக்கு பெலன் தருகிறது.

கடைசியாக, தேவனுடைய ராஜ்யத்தின் ஸ்திரத்தன்மையானது, உண்மையுள்ள வாழ்க்கை வாழ நம்மை அழைக்கிறது மற்றும் நம்மை மற்றவர்களுக்கு நற்செய்தி அறிவிக்கும்படி நம்மை உந்த வேண்டும் ஏனென்றால் அவர்கள் இதை அறிய வேண்டுமென்று நாம் விரும்புகிறோம். தேவனுடைய ராஜ்யத்தின் ஒரு அங்கமாயிருப்பதினால் கிடைக்கும் சமாதானம், சந்தோஷம் மற்றும் நம்பிக்கையை அவர்கள் அனுபவிக்க வேண்டுமென்று நாம் விரும்புகிறோம். நாம் அறிவிக்கிற செய்தியானது ஒரு அருமையான கருத்தோ அல்லது ஆறுதலான எண்ணமோ அல்ல மாறாக அது வாழ்வை மறுரூபமாக்கக் கூடியது என்பதை அறிந்து நம்முடைய விசுவாசத்தைப் பகிர்வதில் நாம் தைரியத்தோடிருப்போம்.

எங்களுடைய ஜெபமானது, நீங்கள் இந்த தியானப்பகுதிக்கு செவிகொடுத்து இயேசுவினிடத்தில் பெற்றுக்கொள்ள வேண்டும் மற்றும் மாறாத இரட்சகரின் அழைப்புக்கு செவிகொடுத்து முழுமையாக ஒப்புக்கொடுக்க வேண்டும். தேவனுடைய பரிசுத்தம் வெளிப்படுகிற வரைக்கும் இயேசு எப்படி இலவசமாய் தன்னை கொடுத்தாரோ அதேபோல நாமும் அவரை ஆராதிக்கவும் ஊழியம் செய்யவும் நம்மை ஒப்புக்கொடுப்போம்.
இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர் என்பதை நினைவில் கொள்ளுங்கள் (எபி 13:8)



# ஒரு உறுதியான மறுசீரமைக்கப்பட்ட ஆவிக்குரிய வாழ்க்கைமுறை

ரெவ். லூய் கோக் கிம்
சேர்மன் NECF ஜெப கமிஷன்



வெளிப்புறமாக மாத்திரம் இருக்கிற ஆவிக்குரிய வாழ்க்கை என்பது கிறிஸ்தவத்திலும் உலகத்திலும் இருக்கிற வாழ்க்கையாகும், உள்ளான ஆவிக்குரிய வாழ்க்கை இல்லாத பட்சத்தில் தேவனுடைய பிரசன்னமும் அங்கு இல்லாமல் போகிறது. எல்லாமே குறைவுபட்டு வெறும் வெளிப்புறமான சடங்குகளாகவும் பழக்கங்களாகவும் மாறிவிடுகிறது. அதற்கு ஒரு வடிவம் இருந்தாலும், அது ஆவிக்குரிய உணர்வு மற்றும் தேவனை அறிகிற உள்ளான வாழ்க்கையல்ல. எனவே, இப்படிப்பட்ட வாழ்க்கையானது ஜனங்களை தேவனைப் பிரியப்படுத்துவதற்கு பதிலாக மனுஷனைப் பிரியப்படுத்துவதற்கு நேராக நடத்துகிறது. இப்படி ஆவிக்குரிய உற்சாகம் மற்றும் உண்மைத்தன்மை இல்லாதது அவர்கள் வாழ்வில் ஆவிக்குரிய வெறுமையையும் வெற்றிடத்தையும் காண்பிக்கிறது. நாம் நம்மையே ஏமாற்றிக்கொண்டு ஆவிக்குரிய அலட்சியத்தில் வாழ்கிறோம். தாக்குதல் ஏற்படக்கூடிய சூழ்நிலையில் இது அசையக்கூடிய அடித்தளமாக ஆகிவிடும்.

அசையாத அடித்தளத்தை உருவாக்குவது எப்படி? அதற்கு இரண்டு நடைமுறை வழிகள் உள்ளன. இந்த 40 நாட்கள் உபவாசம் மற்றும் ஜெபத்தில், உங்களுடைய தனிப்பட்ட ஆவிக்குரிய பிரயாணத்தில் தேவனுடைய பிரசன்னத்தை அனுபவிக்க முயலுங்கள், மற்றும் தொடர்ந்து அதையே உங்கள் வாழ்க்கைமுறையாக மாற்றிக் கொள்ளுங்கள்.

**a)** "அமைதியின் மூலம்": ஆவிக்குரிய வாழ்க்கைமுறை என்பது, தேவனுக்கு முன்பாக நடக்கக்கூடிய, தேவனுடைய வார்த்தையை தினமும் ஒழுங்காக வாசிக்கிற வாழ்க்கையாகும் (ஒரு நாளைக்கு 3 அதிகாரங்கள்). அது ஒரு வேலையல்ல. நம்முடைய உள்ளான நடக்கையிலே தேவனை அறிந்து கொள்வதற்கான தாகமும், நல்ல மற்றும் மோசமான நேரங்களில் அமைதியுடன் இருந்து பரிசுத்த ஆவியானவர் பேசுவதற்கு இடமளிப்பதாகும். இது அசைவில்லாத ராஜ்ய வாழ்க்கையை தேவனுக்கு முன்பாக வாழ்ந்து காண்பிப்பதாகும். அமைதியுடன் அவரைத் தேடும்போது பரலோகப்பிதா நம்மை சந்திக்கிறார்.

**b)** "தேவனுக்கு கீழ்ப்படிந்து இணங்குவதில்":ஆவிக்குரியவராக இருப்பதென்பது தேவனோடுள்ள உறவில் சரியாகவும் நெருக்கமாகவும் வாழ்வதாகும். இருதயத்தில் மாற்றம் இல்லாமல் வெளிப்புறமான சடங்குகளை அனுசரிப்பதில் அர்த்தமில்லை. ஆவிக்குரிய முதிர்ச்சியின் அடையாளமாவது வெளிப்புறமான பழக்கமல்ல மாறாக அசையக்கூடிய சூழ்நிலைகள் மத்தியில் வலிமையான மற்றும் அசையாத விசுவாசத்துடன் இருக்கும்படியான உள்ளான மனநிலையாகும்.

இந்த 40 நாட்கள் உபவாசம் மற்றும் ஜெபத்தில் நீங்கள் இந்த மூன்று நடைமுறை காரியங்களை செய்ய முடியும்.

- **நம் நோக்கங்களை சோதித்துப் பார்த்தல்** – மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை மற்றும் ஜீவனத்தின் பெருமை போன்றவைகள் மாம்சத்தின் மோசமான விருப்பங்களாகும். மேற்கண்ட காரியங்களால் உங்கள் வாழ்க்கை அசையும்போது பரிசுத்த ஆவியானவருக்கு செவிகொடுக்க கவனமாயிருங்கள்.

- **கிரியை செய்வதை நேசித்தல்** - நாம் அங்கீகாரத்துக்காகவோ, புகழ்ச்சிக்காகவோ அல்லது மனுஷ தயவுக்காகவோ கிரியை செய்ய விரும்பினால், அது நாம் நின்று ஒரு விசை நம்முடைய ஆவியை நிதானிக்க வேண்டிய நேரமாகும். யாரை நாம் பிரியப்படுத்த முயலுகிறோம்?

- **அபாய எச்சரிக்கைகள்** - மன்னியாத இருதயத்துடனும் உலக இன்பங்களில் கட்டப்பட்டிருக்கிற வாழ்க்கையைக் குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள். நித்திய பாதுகாப்புக்கு பதிலாக தற்காலிக காரியங்களை நாம் தேர்ந்தெடுக்கிறோமா? பாவம் மனிதர்களை காயப்படுத்தும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

உங்களுடைய வாழ்வில் நிஜமான எஜமான் யார்? அவருக்கு நீங்கள் முழு விசுவாசமாய் இருப்பீர்களா? அசைவில்லாத அஸ்திபாரத்தின் மேல் உங்களுடைய உள்ளான வாழ்வை கட்டியெழுப்புங்கள்.





# NECFன் பொது நிதிக்கு உதவுங்கள்

போதகர். சாமுவேல் ஆங்
பொதுச் செயலாளர், NECF

கர்த்தர் சிறந்தவரும் வல்லவருமானவர், அவருடைய கிருபை என்றுமுள்ளது நாம் கர்த்தருடைய நன்மையையும் போஷிப்பையும் ஒவ்வொரு வருடமும் பார்த்திருக்கிறோம் ஆனால் அதை ஒருபோதும் சாதாரணமாக எடுத்துக் கொள்ளக்கூடாது. நம்முடைய வருடாந்திர முக்கிய நிகழ்வாகிய 40 நாள் உவாசம் மற்றும் ஜெபத்திற்கு தாங்கள் கொடுக்கிற உதாரத்துவமான காணிக்கை மற்றும் ஒத்துழைப்பிற்கு நாங்கள் நன்றி சொல்ல இந்த கடிதம் எங்களுக்கு சிறந்த வாய்ப்பாகும் .

நோய் தொற்றுக் காலம் ஆரம்பித்த 2020லிருந்து, இப்படிப்பட்ட தியானப் புத்தகங்களால் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிற நீங்கள் தேவனுடைய ராஜ்யத்தில் விதைப்பதற்கு நாங்கள் கதவுகளை திறந்திருக்கிறோம். கடந்த நான்கு வருடங்களில் தங்களுடைய உதாரத்துவமான காணிக்கைகளுக்காகவும் ஜெப நிகழ்ச்சிகளில் தாங்கள் பங்கு பெறுகிறதினாலும் கர்த்தரை துதிக்கிறோம்.

உள்ளூர் சபைகள் மூலம் தேசத்தை கட்டியெழுப்புவதே எப்பொழுதும் **NECF**ன் குறிக்கோள் ஆகும். சபை கட்டிடம் அல்ல, ஆனால் தாகத்துடனும் மனதுருக்கத்துடனும் சபைகளுக்காகவும் தேசத்துக்காகவும் மன்றாடுகிற தேவனால் அழைக்கப்பட்ட ஜனங்களே சபை. உங்களோடு கூட, தேவனுடைய வேலை பெருக வேண்டுமென்றும் கனி கொடுக்க வேண்டுமென்றும் உதாரத்துவமாய் கொடுத்த முகம் தெரியாத நன்கொடையாளர்கள் அநேகம்.

அச்சிடுவதற்கும் தபாலில் அனுப்புவதற்குமான செலவுகள் கடந்த வருடங்களில் குறிப்பிடத்தக்க அளவுக்கு அதிகரித்தாலும், நாமெல்லாரும் தேவனுடைய ஆசீர்வாதங்களை ஒருமிக்க அறுவடை செய்வதற்காகவே இந்தக் கையேட்டின் விலையை உயர்த்த வேண்டாமென **NECF** முடிவெடுத்துள்ளது.

இந்த 2024ம் வருடத்தின் கருப்பொருளாகிய "அசைவில்லாத ராஜ்யம்", மெய்யாகவே நாம் ஒவ்வொருவரும் பூமிக்கு உப்பாகவும் உலகத்துக்கு வெளிச்சமாகவும் இருக்க வேண்டுமென எதிர்பார்க்கிறது. இதையே இயேசு மத் 5:16ல், "இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது" என வலியுறுத்துகிறார்.

இந்த சவாலான கருப்பொருள், விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவருமாகிய ஆண்டவராகிய இயேசுவின் மேல் நம் கண்களைப் பதித்திருக்க வேண்டுமென எதிர்பார்க்கிறது. இந்த உலகத்தின் காரியங்களால் நாம் கவனம் சிதறாமல் நமக்கு முன்பாக நியமிக்கப்பட்டிருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடுவோம்.

இந்த வருட நிகழ்ச்சியின் மூலம் நீங்கள் அபரிமிதமாக ஆசீர்வதிக்கப்பட வேண்டுமென்றும் மலேசிய தேசத்தின் மேல் தேவனுடைய கரம் இருப்பதை கண்டு சாட்சியிட வேண்டுமென்றும் நாங்கள் ஜெபிக்கிறோம்.

நீங்கள் பொது நிதிக்கு கொடுக்க விரும்பினால், நீங்கள் அதை கீழ்க்கண்ட விதத்தில் செய்யலாம்

> NECFன் பொது நிதி வங்கி கணக்கிற்கு நேரடியாக பணப் பரிமாற்றம் செய்ய:

வங்கி: **Public Bank**

வங்கி கணக்கின் பெயர்: **National Evangelical Christian Fellowship AC3**

வங்கி கணக்கு எண்: **3218284529**

> இந்தப் புத்தகத்தில் உள்ள **Touch' n Go barcode**ஐ ஸ்கேன் செய்து, **NECF** இணைய தளம், முகநூல் பக்கங்கள், செயலி போன்றவை மூலமும் நிதி அனுப்பலாம்

நீங்கள் நன்கொடை அனுப்பிய ரசீதை **prayer@necf.org.my** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும். நீங்கள் இணைய வழியாக நன்கொடை அளித்தால் அல்லது பணமாகவோ காசோலையாகவோ நன்கொடை அளித்தால் உங்கள் கோரிக்கையின் பேரில் மாத்திரமே ரசீது வழங்கப்படும்.

நாள் 1-5

# அசைவில்லாத ராஜ்யம்

எபிரெயர் 12:26-29

# நாள் 1 ▪ *புதன் 7, ஆகஸ்ட் 2024*

# அசையக்கூடிய உலகில் சோதிக்கப்பட்ட விசுவாசம்

நாம் "அசைவுறுகிற உலகில்" வாழ்கிறோம், இங்கே ஜனங்கள் பொதுவாக வேதனையுடன் கூடிய நெருக்கடிகள் மூலம்தான் தங்களின் சுயரூபத்தை அறிந்து கொள்ளுகிறார்கள். நம்முடைய உலகம் நிலை தடுமாறியுள்ளதும் பாதிக்கப்படக் கூடியதுமாக இருக்கிறதும் அல்லாமல் பாதுகாப்பு எந்நேரத்திலும் நீக்கப்படக்கூடியதாக உள்ளது. எதிர்காலம் எப்படி இருக்கும்? வரப்போகிற வாரங்களில், மாதங்களில் அல்லது நாட்களில் பொருளாதார மற்றும் அரசியல் சூழ்நிலைகள் எப்படி இருக்கும் என்று நமக்குத் தெரியாது. ஆனால் இக்காலம்தான் நம்முடைய உள்ளான மனுஷனில் உள்ள "தீமை" அல்லது பெலவீனங்கள் சோதிக்கப்படும் என்பதை அறிவோம்.

அப்படியானால் இவ்வுலகத்தின் ஆபத்தான மற்றும் சதியான சூழ்நிலைகளுக்கு எதிராக, நம்முடைய தடுமாறக்கூடிய உள்ளான மனுஷனை எப்படி அணுகி நாம் மேற்கொள்ள முடியும்? "ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருக்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம். அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்" என எபி 12:1-2ல் நினைவூட்டப்படுகிறோம்.

ஆவிக்குரிய மனுஷனை கட்டியெழுப்புவதில் நம்முடைய உள்ளான மனுஷனின் ஒத்துழைப்பை நாடும்போது, அது கீழ்க்கண்ட காரியங்களில் நன்றாக கவனம் செலுத்தும்:-

> பாடுகளையும் அவமானத்தையும் சிலுவையில் சகித்த இயேசுவை நோக்கிப் பார்ப்பதில் உள்ள மகிழ்ச்சி. நமக்கு தனிப்பட்ட பிரச்சனைகள், பொருளாதார நெருக்கடிகள் அல்லது பெலவீனங்கள் இருந்தபோதிலும், ஒவ்வொரு பாரமும் பாவமும் உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையை பாதிக்க இடமளிக்காதீர்கள். தேவனை அறிவதின் மூலமாக சமாதானத்தையும் மகிழ்ச்சியையும் தேடுங்கள்.

> பரிசுத்த ஆவியானவருடன் ஐக்கியப்பட்டு ஆராதனை செய்வதின் மூலமாகவும், தேவனுடைய வார்த்தையை ஒழுங்காக வாசிப்பதன் மூலமாகவும் அவைகளை மேற்கொள்ளுங்கள். பரிசுத்த ஆவியானவர் நம்முடைய பெலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். (ரோமர் 8:26 பார்க்க)

நம்முடைய ஆவிக்குரிய பயணத்தில் உள்ளான மனுஷனுக்குள் ஒழுங்கைக் கொண்டு வரும்படியாக நாடுதல், தடுமாறக்கூடிய இவ்வுலகில் விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவருமாகிய தேவனை அறிவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## இன்றைக்கான ஜெபம்:

>> பரலோகப் பிதாவே, எங்களுடைய விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவரும் நீர்தான். அசையக்கூடிய இவ்வுலகில் உம்மில் நாங்கள் கொண்டுள்ள விசுவாசமானது ஆபத்தும் சடிதியுமான சூழ்நிலைகளால் சோதிக்கப்படும் என்பதை உணருகிறேன். என்னுடைய ஆவிக்குரிய வாழ்க்கையை வேதாகமத்தின் அடிப்படையிலான விசுவாசம் என்கிற அஸ்திபாரத்தினால் கட்டும்படி ஒருமுகப்படுத்த நான் ஒப்புக்கொடுக்க உதவி செய்யும், அப்பொழுது உம் மீதுள்ள என் விசுவாசத்தை எதுவும் அசைக்காது. இயேசுவின் நாமத்தில். ஆமென்

>> யாங் டி பெர்துவான் அகோங் ஆகிய சுல்தான் இப்ராகிம் இப்னி அல்மரும் சுல்தான் இஸ்கன்டருக்கு தேவன் நல்ல ஆரோக்கியத்தை தரும்படியாகவும், அவர் தனது விருப்பப்படி முடிவெடுக்கும் அதிகாரத்தை ஞானத்துடனும் தெய்வ பயத்துடனும் பயன்படுத்தும்படியும் ஜெபியுங்கள்.

>> சபையானது இயேசு கிறிஸ்துவை தனது சரீரமாகிய சபைக்கு தலையாக கனப்படுத்தும்படியும் மற்றும் பிதாவின் சித்தப்படி தேவ ஆவியானவர் கிரியை செய்யும்போது சபையானது அதை அனுமதிக்கும்படியும் ஜெபியுங்கள்.

# நாள் 2 ▪ *வியாழன் 8, ஆகஸ்ட் 2024*

# உங்களுடைய தனிப்பட்ட வாழ்க்கையை உன்னிப்பாக கண்காணித்தல்

நாம் ஒரு செயலற்ற ஆவியைக் கொண்டிருந்தால், அது மெய்யான ஆவிக்குரிய வாழ்க்கையை மாசுபடுத்தி, மதவாத வடிவத்தையும் மற்றும் உலகப்பிரகாரமான பண ஆசையுள்ள சிந்தையையும் அணிந்து கொள்ளும். அது பெரும்பாலும் சிற்றின்ப, அகம்பாவமுள்ள, பேராசையுள்ள மற்றும் இச்சிக்கிற ஆசைகளால் மூடப்பட்டிருக்கும். எதிர்காலத்தில் வரப்போகும் நியாயத்தீர்ப்பை பரிகாசம் செய்து, இப்பொழுது இருக்கிறது போலத்தான் வருங்காலத்திலும் இருக்கும் என்பது போல நம்முடைய வாழ்க்கையை வாழலாம். இப்படியிருக்கிறபடியால், வெளிப்புறமான ஆராதனை சடங்குகள், புகழ், வசதி, அங்கீகாரம் மற்றும் ஏற்றுக்கொள்ளுதலை எதிர்பார்க்கிற இவ்வுலகில் நாம் எப்படி நடந்துகொள்ளுகிறோம் மற்றும் வாழ்கிறோம் என்பதில் கவனமாக இருக்க வேண்டும். இவைகளெல்லாம் நம்மை அறியாமல் சிக்க வைக்கக்கூடிய அசையக்கூடிய காரியங்களாகும்.

நாம் எப்படி அசைக்கப்படாதவர்களாக இருப்பது என்பதை கற்றுக்கொடுக்க தேவன் இப்படிப்பட்ட அனுபவங்களை சில நேரங்களில் அனுமதிக்கிறார். நம்முடைய வாழ்க்கையை சுத்தம் பண்ணவும், மதவாதக் குப்பைகள் மற்றும் உலகப்பிரகாரமான மனநிலையிலிருந்து நம்மை விடுவிக்கவும் அவரை அனுமதிப்போம்.

> நம்முடைய ஆவிக்குரிய இருதயத்தில் அதிருப்தி, குழப்பங்கள் மற்றும் வெறுமையை சந்திக்கும்போது தேவனை அறிவதற்கான தாகத்தை அடைய நாடுவோம். "ஆகையால், பரிசுத்தஆவியானவர் சொல்லுகிறபடியே: இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், வனாந்தரத்திலே கோபமூட்டினபோதும், சோதனைநாளிலும் நடந்ததுபோல, உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள்." (எபி 3:7-8)

> வேதாகமத்திலிருந்து பதிலைப் பெற்றுக்கொள்ள தேவனுடன் போராடுவோம், அதற்காக நாம் ஆராதனை, ஜெபம் மற்றும் பரிசுத்த ஆவியானவரால் போதிக்கப்படுகிற வாழ்க்கையுடன் கூடிய ஜெப பலிபீடத்தை கொண்டுள்ள வாழ்க்கைமுறையை உண்டாக்கிக் கொள்ள வேண்டும்.

## இன்றைக்கான ஜெபம்:

>> எங்களை நேசிக்கிற பரலோகப் பிதாவே, உம்மை சரியாக அறிந்து கொள்வதற்கென்று முறைப்படி வேதாகமத்தை வாசிப்பதில் நான் ஒழுங்கற்று இருந்ததால் என்னை மன்னியும். கர்த்தாவே, உம்முடைய வார்த்தையின் மூலமாகவும் பரிசுத்த ஆவியானவரின் உதவியின் மூலமாகவும் உம்மை புரிந்து கொள்ளும்படியான ஒரு வாழ்க்கை முறையை உருவாக்கிக் கொள்ள இன்றிலிருந்து எனக்கு உதவி செய்யும். இயேசுவின் நாமத்தில், ஆமென்

>> ஒன்பது மாநிலங்களின் சுல்தான்கள் மற்றும் நான்கு மாநிலங்களின் ஆளுநர்களைக் கொண்ட ஆட்சியாளர்களின் கூட்டமைப்பு சுயாதீன அமைப்பாக இருக்கும்படியும் மற்றும் அவர்கள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட அலசியலமைப்பு செயல்பாடுகளை ஞானத்துடன் கையாளும்படியும் ஜெபியுங்கள்.

>> ஒவ்வொரு சபையிலும் உள்ள சபை கவுன்சில் மற்றும் சபைக் கமிட்டியில் சேவை செய்யும் ஆண்களும் பெண்களும் நேர்மையுடன் செயல்படுகிற ஜனங்களாக இருக்கும்படியும் தங்கள் விருப்பத்தின்படி முடிவெடுக்கும் அதிகாரத்தை ஞானத்துடன் பயன்படுத்தி தேவனுடைய ராஜ்யம் பூமியில் வளரவும் விரிவடையவும் பயன்படுத்த ஜெபியுங்கள்.

# நாள் 3 ▪ *வெள்ளி 9, ஆகஸ்ட் 2024*

# தவறான காரியங்கள் மேல் கவனம் செலுத்துதல் Vs அசையாததால் உந்தப்படும் வாழ்க்கைமுறை

எபி 12:;26 “அவருடைய சத்தம் அப்பொழுது பூமியை அசையப்பண்ணிற்று; இன்னும் ஒருதரம் நான் பூமியை மாத்திரமல்ல, வானத்தையும் அசையப்பண்ணுவேன் என்று இப்பொழுது வாக்குத்தத்தஞ் செய்திருக்கிறார்”

“இன்னும் ஒருதரம்” என்ற வார்த்தைகள் அசையக்கூடியது அகற்றப்படும் என்பதைக் காட்டுகிறது - அதாவது சிருஷ்டிக்கப்பட்டவைகள் - எனவே அசையாதது நிலைத்திருக்கும்.

மேற்கண்ட வசனத்தை இன்றும் தொடர்ந்து தியானிக்க இருப்பதால், நம்முடைய அந்தரங்க வாழ்க்கையில் எவைகள் அசைக்கப்பட்டு நீக்கப்பட முடியும் என்ற கேள்வியை நம்மை நாம் கேட்க வேண்டும்.

1 யோவான் 2:15-17ல் இவ்வாறு நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது, “உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை. ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள். உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்”

தவறானதும் நம்முடைய வாழ்விற்கு மதிப்பை சேர்க்காததுமான இந்த மூன்று மாம்சீக காரியங்களுக்கு நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டும்:

> மாம்சத்தின் இச்சை - உதாரணமாக, நம் சுயப்பெருமை அல்லது மாம்சத்தை போஷிக்கும்படி நம்முடைய திராணிக்கு மிஞ்சி பொருட்களை வாங்குதல்.

> கண்களின் இச்சை - உதாரணமாக, இணையவழியாக ஆபாசப்படங்கள் பார்த்தல், இணையவழி விளையாட்டுகள் அல்லது சூதாட்டம்

> ஜீவனத்தின் பெருமை - உதாரணமாக, மற்றவர்களை ஈர்ப்பதற்காகவே வாழுதல், குறிப்பாக சமூக வலைதளங்களில்

தேவன் நமக்காக வைத்துள்ள பரிபூரண ஜீவனை நாம் அனுபவியாதபடி, நம்மை சிக்க வைக்க சாத்தான் பயன்படுத்தும் தூண்டில்கள் இவை என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட தவறான காரியங்கள் நம்முடைய நேரத்தை செலவழிக்கிறது மாத்திரமல்லாது நம்மை குற்ற உணர்வு, மன உளைச்சல் மற்றும் மன அழுத்தம் போன்ற எதிர்மறையான எண்ணங்கள் மற்றும் உணர்வுகளுக்கு நேராக நடத்துகிறது.

தவறான காரியங்கள் மேல் கவனம் செலுத்துவதற்கு பதிலாக, நம்முடைய "அசையாத உள்ளான வாழ்க்கையில்" கவனம் செலுத்துவோம். நீதியில் பெருகுதல், அறிவு, இச்சையடக்கம், பொறுமை, தேவபக்தி, சகோதர சிநேகம் மற்றும் சுயநலமற்ற அன்பு போன்றவைகளை அடைய நாம் விடாமுயற்சி எடுக்கும்படி கிறிஸ்தவ வாழ்க்கை எதிர்பார்க்கிறது.

நாம் சிக்கியிருந்தால், நம்முடைய வாழ்க்கையில் நாம் அனுமதித்த காரியங்களுக்காக மனந்திரும்பி, பரிசுத்த ஆவியானவர் நம்மை விடுதலையாக்கும்படி கேட்க வேண்டும்.

## இன்றைக்கான ஜெபம்:

>> அன்புள்ள தேவனே, நீர் எனக்காக திட்டம் பண்ணியிருக்கிற பரிபூரண ஜீவனை நான் வாழாதபடி என்னை சிக்க வைக்க சாத்தான் பயன்படுத்துகிற தவறான காரியங்களை எனக்கு வெளிப்படுத்தினபடியால் உமக்கு நன்றி. அவன் என்னை சிக்க வைக்க நான் இடம் கொடுத்ததற்காக என்னை மன்னியும். பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத்தின எனக்குள்ளிருந்த பாவ பழக்கங்களிலிருந்து மனந்திரும்புகிறேன். ஒவ்வொரு நாளும் சரியானதை தேர்ந்தெடுக்க உதவி செய்யும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற நாமத்தினால் ஜெபிக்கிறேன். ஆமென்.

>> நம்முடைய பிரதம மந்திரியாகிய டத்தோ ஸ்ரீ அன்வர் இப்ராஹிம் அவர்கள் மலேசியாவை சீர்திருத்தத்துக்கு நேராக நடத்திச் செல்கிற அளவுக்கு திறனையும் தைரியத்தையும் பெற்றிருக்கும்படி ஜெபியுங்கள். அதிகாரத்தை மற்றவர்கள் எதிர்பார்க்கிறதற்கு மத்தியில் ஒரு சமநிலையை ஏற்படுத்துவதிலும் தன்னுடைய அமைச்சரவையில் நம்பிக்கை மற்றும் ஒத்துழைப்பை ஒரு கலாச்சாரமாக உருவாக்குவதிலும் அவர் ஞானத்துடன் செயல்படும்படி ஜெபியுங்கள்.

>> உங்களுடைய தலைமைப் போதகர், சிறந்த விசுவாச வீரர் அல்லது வீராங்கனையாகவும் பொறுப்புள்ளவராகவும் இருக்கும்படியும், தெளிவான தரிசனம் மற்றும் உறுதியான திட்டங்கள் மூலம் தன்னுடைய போதகர்கள் குழுவை பயன்படுத்தி சபையிலும் வெளியிலும் தேவன் கொடுத்த வேலையை நிறைவேற்றும்படியும் ஜெபியுங்கள்.

# நாள் 4 ▪ *சனி 10, ஆகஸ்ட் 2024*

# வசனத்தைக் கேட்கிறவர்களாக மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாக இருங்கள்

தேவனுடைய அசையாத ராஜ்யத்தில் உள்ள காரியங்களுக்கு நேராக நாம் முன்னேறிச் செல்லாதபடி, நம்மைத் தடுத்து சிக்க வைக்கிற தவறான காரியங்களைக் குறித்து நேற்றைக்குப் பார்த்தோம்.

நாம் மனந்திரும்பியிருக்கலாம், தேவனும் நம்மை மன்னித்திருக்கலாம், ஆனால் சத்துரு மறுபடியும் திரும்பி வரலாம் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

அவன் மறுபடி வராதபடி எப்படி தவிர்க்கலாம்?

நாம் தினசரி தொடர்ச்சியாக செய்வதை மாற்றியமைக்க வேண்டும், அது நமக்கு வழக்கமாகவும் பிற்பாடு தேவனைப் பிரியப்படுத்துகிற ஒரு வாழ்க்கை முறையாகவும் மாற வேண்டும்.

கீழ்க்கண்டவற்றை நாம் செய்ய வேண்டும்:

> நம்மை தேவனுடைய வார்த்தையால் நிரப்ப வேண்டும். இயேசு சாத்தானால் சோதிக்கப்படும்போது நமக்கு இதை மாதிரியாக செய்து காண்பித்தார். - மத் 4:4 "அவர் பிரதியுத்தரமாக: மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்". நம்முடைய சரீரங்களை எப்படி உணவினால் போஷிக்கிறோமோ அதேபோல "நம்முடைய ஆவியை அவருடைய வார்த்தையினால்" போஷிக்க வேண்டும்.

> தேவன் அவருடைய வார்த்தையில் என்ன கட்டளையிட்டிருக்கிறாரோ அதற்கு கீழ்ப்படியுங்கள். மத் 7:24 சொல்லுகிறது, "ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன்". சங் 119:105 மற்றும் மத் 24:35ம் கூட இதையே சொல்லுகிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள். "வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை"

**குறிப்பு :** இங்கே குறித்திருத்திருக்கிற வேதப்பகுதிகளை மட்டும் ஒவ்வொரு நாளும் வாசியாமல் தேவனை இன்னும் அதிகமாக அறிந்துகொள்ள வருடத்திற்கு ஒரு முறையாவது வேதாகமத்தை முழுமையாக வாசிக்கும்படி நாங்கள் உங்களை உற்சாகப்படுத்துகிறோம். **NECF** இணைய தளத்தில் பதிவிறக்கம் செய்யக்கூடிய தொடர்ச்சியான வேதாகம வாசிப்பு திட்டத்தை பயன்படுத்தலாம் அல்லது **NECF** அலுவலகத்திலும் அதை அச்சிடப்பட்ட தாளாக வாங்கிக் கொள்ளலாம்.

**இன்றைக்கான ஜெபம்:**

>> அன்புள்ள தேவனே, பரலோகப் பிதாவே, எழுதப்பட்ட உம்முடைய வார்த்தைகளுக்காக நன்றி, அவைகள் என் ஆவியை பெலப்படுத்துகிறது. என் வாழ்வின் இருளான நேரங்களில் எனக்கு உதவி செய்கிறது மற்றும் பரிசுத்த ஆவியானவரின் உதவியினால் உம்மை இன்னும் சிறப்பாக அறிந்து கொள்ள உதவி செய்கிறது. இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் நன்றியோடு இந்த ஜெபங்களை எல்லாம் ஏறெடுக்கிறேன். ஆமென.

>> துணைப் பிரதம மந்திரியாகிய டத்தோ ஸ்ரீ டாக்டர். அஹமத் சாஹித் பின் ஹமிதி பதவியில் உள்ள பிரதம மந்திரிக்கு உதவியாக இருக்கும்படியாகவும், தன்னுடைய பணியாகிய நகர்ப்புற மற்றும் மண்டல வளர்ச்சிப்பணிகளை நன்கு செயல்படுத்தும்படியும் ஜெபியுங்கள்.

>> உங்களுடைய தலைமைப் போதகரின் கீழ் செயல்படுகிற உதவி போதகர்கள், துணைப் போதகர்கள் மற்றும் முக்கியத் தலைவர்கள் நல்ல திறம்பட செயல்படுகிற குழுவினர்களாக இருக்கும்படியும் நல்ல கூட்டு முயற்சியுடன் செயல்படும்படியும் ஜெபியுங்கள்.

# நாள் 5 ▪ *ஞாயிறு 11, ஆகஸ்ட் 2024*

# வசனத்தைக் கேட்கிறவர்களாக மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாக இருங்கள்

எபி 12:26-27 அவருடைய சத்தம் அப்பொழுது பூமியை அசையப்பண்ணிற்று; இன்னும் ஒருதரம் நான் பூமியை மாத்திரமல்ல, வானத்தையும் அசையப்பண்ணுவேன் என்று இப்பொழுது வாக்குத்தத்தஞ் செய்திருக்கிறார். இன்னும் ஒருதரம் என்கிற சொல்லானது அசையாதவைகள் நிலைத்திருக்கத்தக்கதாக, அசைவுள்ளவைகள் உண்டாக்கப்பட்டவைகள்போல மாறிப்போம் என்பதைக் குறிக்கிறது

நம்முடைய முற்பிதாக்களின் காலத்தைப் போலல்ல, நாம் சவாலான நாட்களில் வாழ்கிறோம். இந்த தகவல் தொழில்நுட்ப காலத்திலே, மாற்றமானது அதிவேகத்தில் நிகழ்கிறது. செயற்கை நுண்ணறிவும் நம் மத்தியிலே வந்த பிறகு நாம் அதிகமாக கலக்கமடைகிறோம், குழம்புகிறோம் மற்றும் எதிர்காலம் குறிப்பாக வாலிபர்களுக்கும் சிறு பிள்ளைகளுக்கும் எப்படி இருக்கும் என்று கவலைப்படுகிறோம்.

இன்றைக்கு உள்ள இணையவழி டிஜிட்டல் உலகத்திலே, குறிப்பாக ஊடகம் மற்றும் தகவல் தொடர்பு துறையில் கிடைக்கிற அளவற்ற வளங்களும் தகவல்களும் நம்மை திணறடிக்கிறது. சரி எது தவறு எது என்பதை கண்டறிவது மெய்யாகவே சவாலாக மாறி விட்டது.

தேவனுக்கு நன்றி, அவர் நம்மை தனியே விட்டு விடவில்லை. நமக்கு முன்பாக உள்ள நாமறியாத போராட்டங்களை கடந்து செல்ல அவர் தமது பரிசுத்த ஆவியானவரை நமக்கு கொடுத்துள்ளார்.

யோவான் 16:13ல் இந்த வாக்குதத்தம் உள்ளது, "சத்தியஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்"

இப்படிப்பட்ட பிரச்சனைகளால் நாம் அசைவுற வேண்டியதில்லை. நாம் அவருடைய வாக்குதத்தத்தை நம்பலாம். பரிசுத்த ஆவியானவரின் மெல்லிய மென்மையான குரலைக் கேட்கப் பழகி அவரோடு நடக்கப் பழகுங்கள். துதி ஆராதனையில் நேரத்தை செலவிடுவது நல்லது.

## இன்றைக்கான ஜெபம்:

>> என் பரலோகப் பிதாவே, எனக்கு முன்பாக உள்ள பிரச்சனைகளை அறிந்து அவைகளை கடந்து செல்லும்படி பரிசுத்த ஆவியானவரை எனக்கு தந்தபடியால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன். எப்பொழுதெல்லாம் எதிர்காலத்தைக் குறித்து பயந்து கவலைப்படுகிறேனோ, அப்போதெல்லாம் அவைகளை ஜெபத்திலே ஸ்தோத்திரத்தோடு உமக்கு தெரியப்படுத்த உதவி செய்யும். என்னுடைய மாம்சம், உலகம் மற்றும் சாத்தானுடைய சத்தங்களின் மத்தியிலே, பரிசுத்த ஆவியானவரின் மெல்லிய சத்தத்தை கேட்கும்படி உணர்வுடன் இருக்க எனக்கு உதவி செய்யும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ஆமென்

>> துணைப் பிரதம மந்திரியாகிய டத்தோ ஶ்ரீ ஹாஜி ஃபதில்லா பின் ஹாஜி யூசுப் அவர்கள் கிழக்கு மற்றும் மேற்கு மலேசிய விவகாரங்களில் நல்ல மத்தியஸ்தராக செயல்படும்படியும் மற்றும் எரிசக்தி மற்றும் பொதுப் பயன்பாடுகள் அமைச்சகமானது அவரது மேலாண்மையின் கீழ் நன்கு நிர்வகிக்கப்படும்படியும் ஜெபியுங்கள்.

>> உங்கள் சபையிலுள்ள ஊழிய குழுக்களாகிய ஆராதனைக் குழு, ஞாயிறு பள்ளிக் குழு, உபசரிப்பு குழு, செல்குழு போன்றவைகள் மிகுந்த சந்தோஷம், நன்றியுணர்வு, தாழ்மை மற்றும் ஆவியின் இனிமையுடன் ஊழியம் செய்யும்படியும் அவர்கள் மனுஷருக்கு அல்ல தங்களுடைய ராஜாவாகிய இயேசுவுக்கு ஊழியம் செய்கிறார்கள் என்பதை அறிந்து செயல்படும்படியும் ஜெபியுங்கள்.

## நாள் 6-10

# அசைவில்லாத செய்தி

எபிரேயர் 1-2:4

வேதப்பகுதி: எபி 1:1-2

# நாள் 6 ▪ *திங்கள் 12, ஆகஸ்ட் 2024*

# "வெகு காலம் முன்பு" லிருந்து "கடைசி காலங்கள்" வரை

நீங்கள் "வெகு காலம் முன்பு" காலத்தில் அல்லது "கடைசி காலங்கள்" எந்த காலத்தில் வாழ்கிறீர்கள்? உங்களுடைய பதில் நீங்கள் எந்த குரலை இன்று கேட்கிறீர்கள் என்பதை சார்ந்தது. "வெகு காலம் முன்பு" பழைய ஏற்பாட்டில் தேவன் தீர்க்கதரிசிகள் மூலம் தம் ஜனங்களோடு பேசினார். ஆனால் இந்த கடைசி காலத்தில் தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசுவின் மூலம் பேசுகிறார் என எபிரேயர் புத்தகத்தின் ஆசிரியர் கூறுகிறார். கிறிஸ்துவே அசையாததும் இறுதியானதும் பிணைக்கிறதுமான செய்தியாகும்.

மறுபடி பிறந்த ஒவ்வொரு நபரும் தேவன் தனக்கு என்ன சொல்லுகிறார் என்பதை கேட்க விரும்புகிறார் என நான் விசுவாசிக்கிறேன். எண்ணற்ற புத்தகங்கள் இந்த காரியத்தைக் குறித்து எழுதப்பட்டிருக்கிறது. ஒரு போதகராக நம்மிடத்தில் அதிகமாக கேட்கப்படுகிற கேள்வி என்னவென்றால், "தேவனுடைய குரலை நாம் கேட்பதெப்படி?". இயேசுவுடன் துவங்குங்கள்" என்று எபி 1:1-2 நமக்கு நினைவூட்டுகிறது.

இங்கே குறிப்பிடப்படுவது யாதெனில், நாம் நம்மை கிறிஸ்துவின் வாழ்க்கை மற்றும் உபதேசங்களுக்குள் மூழ்க வைக்க வேண்டும் - அவருடைய வழிகளை அறியும்படி அவருடைய வார்த்தையில் நிலைத்திருக்க வேண்டும். இது சாதாரண காரியமாக தோன்றலாம், ஆனால் இதை செய்ய ஆரம்பிக்கும்போதுதான் நம்முடைய காதுகள் எந்த அளவுக்கு வெளிப்புற சத்தங்களால் பாதிக்கப்படக்கூடும் என்பதை அறிய முடியும்.

இன்றைக்கு நம் மத்தியில் நவீன கால "தீர்க்கதரிசிகள்" உள்ளனர் - தங்களுடைய வெளிப்பாடுகளை பேசும் மதத் தலைவர்கள், பேச்சாற்றல் படைத்த மனித உரிமை போராளிகள், திட்டங்களோடு உள்ள அரசியல்வாதிகள் மற்றும் சமூக வலைதளங்களில் உள்ள படைப்பாளிகள். ஒவ்வொருவரும் அவர்களுக்கு நாம் செவிகொடுக்க வேண்டுமென்று நம்மை அழைக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் இப்படிப்பட்ட குரல்கள் ஒலிப்பது அதிகமாகிக் கொண்டிருந்தாலும், நாம் "கடைசி நாட்களில்" வாழ்கிறோம் என்பதை மறக்கக்கூடாது. பிதா நமக்கு சொல்லியிருக்கிறார், "இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவிகொடுங்கள்" (மத் 17:5)

**இன்றைக்கான ஜெபம்:**

>> பரலோகப் பிதாவே, என்னுடைய விசுவாசம் கிறிஸ்துவின் அசைவில்லாத செய்தியின் மேல் கட்டப்படுவதாக. முன்னானவைகளை மறந்து, நமது ஆவிக்குரிய செவிகளை சரி செய்து கொண்டு நல்ல மேய்ப்பருடைய குரலுக்கு செவி கொடுப்பதில் கவனமாய் இருப்போமாக. இந்தக் கடைசி நாட்களில் பகுத்தறியும் திறனைத் தாரும். ஆமென்

>> மதானி கொள்கையின்படி, மலேசியர்கள் ஒருங்கிணைந்த முயற்சிகளாலே தங்கள் தேசத்தை கசிவுகளற்ற தேசமாக மாற்ற விரும்பும்படியும், வளங்கள் நன்றாக நிர்வகிக்கப்பட்டும் பயன்படுத்தப்பட்டும், உண்டாகிற வளர்ச்சிகள் எதிர்கால விரிவாக்கத்திற்கு ஏற்ப நிலைத்தன்மை உடையதாக இருக்கும்படியும் ஜெபியுங்கள்.

>> சபைகளில் நடைபெறும் பயிற்சிகள் மற்றும் நிகழ்ச்சிகள் தற்போதுள்ள தேவையை சந்திக்கிறதற்கும் மேலாக எதிர்கால வளர்ச்சி மற்றும் நிலைத்தன்மையயை கருத்தில் கொண்டு ஏற்படுத்தப்படும்படியாகவும், குறிப்பாக குடும்பங்கள், வாலிபர்கள் மற்றும் சிறுவர்களின் சீஷத்துவத்துக்கு உதவியாயிருக்கும்படியும் ஜெபியுங்கள்.

வேதப்பகுதி: எபி 1:3-4

# நாள் 7 ▪ *செவ்வாய் 13, ஆகஸ்ட் 2024*

# இயேசு யார்?

**இயேசு யார்?**

முதலாவதாக, இயேசு "தேவனுடைய மகிமையின் பிரகாசம்". தேவன் சூரியனுக்கு ஒப்பிடப்படுவாரானால், இயேசு அதிலிருந்து பிரகாசிக்கும் கதிர்களைப் போன்றவர். அதினால் ஒளி வந்தது என்பதை மனதில் வையுங்கள். இயேசு உன்னதத்திலிருந்து வரும் வெளிச்சம் (லூக் 1:78) மற்றும் "இருளில் நடக்கிற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்" (ஏசா 9:2).

இரண்டாவதாக, இயேசு தேவனுடைய தன்மையின் சொரூபமானவர். காணக்கூடாதவர் காணக்கூடியவரானார்: இரகசியம் வெளியரங்கமானது. எனவே, தேவன் எப்படியிருப்பார் என்று குருட்டுத்தனதமாக இனி யூகிக்க வேண்டிய அவசியம் இல்லை. தேவனைப் பற்றிய எண்ணற்ற கேள்விகளுக்கு கிறிஸ்துவுக்குள் பதில் அளிக்கப்பட்டுள்ளது. "ஒரு துயரம் நேரிடும்போது தேவன் எப்படி உணர்வார், நாம் நேசிக்கிற ஒருவர் மரிக்கும்போது? அதைக் குறித்து அக்கறை கொள்வாரா? இயேசு கண்ணீர் விட்டார். கிறிஸ்துவுக்குள் தேவனை நாம் தூரத்தில் உள்ளவராக அல்ல, பிரிந்திருக்கிறவராக அல்ல ஆனால் நேசிக்கிறவராகவும் மற்றும் மனுக்குலத்தின் மீது அக்கறை கொண்டவராகவும் காண்கிறோம்.

**இயேசு என்ன செய்தார்?**

முதலாவதாக, இயேசு நம்முடைய பாவங்களுக்கு சுத்திகரிப்பை உண்டு பண்ணினார். பாவமில்லதவர்தான் இதைச் செய்ய முடியும். ஆனால் அதற்கான விலையாக அவர் தம்முடைய ஜீவனைக் கொடுக்க வேண்டியிருந்தது. அவருடைய கரங்களிலிருந்தும் கால்களிலிருந்தும் வழிந்தோடின இரத்தம் நம்முடைய பாவங்களைக் கழுவினது. முடிந்தது - பாவத்திற்கான தண்டனை முழுமையாக அனுபவிக்கப் பட்டது. கிறிஸ்துவின் நீதியினாலே நாம் இன்றைக்கு பாவம் மன்னிக்கப்பட்டவர்களாக நிற்கிறோம்.

இரண்டாவதாக, இயேசு "தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்தார்". சிலுவையிலறையப்பட்ட கிறிஸ்து உயிர்த்தெழவே அடக்கம் பண்ணப்பட்டார். ஜீவனைக் கொடுக்கிறவருக்கு எதிராக மரணம் நிற்க முடியவில்லை. இரவுக்குப் பின் பகல் வருகிறது. இருளுக்குப் பிறகு வெளிச்சம் வருகிறது. சூரியன் உதயமாகிறதுபோல, கிறிஸ்து உயிர்த்தெழுந்து சகலத்தையும் ஆளுகிறவராக தன் அதிகாரத்தை உரிமையுடன் எடுத்துக்கொண்டார். ஜெயக் கிறிஸ்து பாவம், மரணம் மற்றும் பிசாசின் மேல் வெற்றி கொண்டார்.

நாம் பற்றிக்கொண்டிருக்கிற அசைவில்லாத செய்தி இதுதான்: "கிறிஸ்து மரித்தார், கிறிஸ்து உயிர்த்தார், கிறிஸ்து மீண்டும் வருவார்".

**இன்றைக்கான ஜெபம்:**

>> அன்பான தேவனே, உம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் நீர் உம்மை யார் என்று வெளிப்படுத்தியதற்காக ஸ்தோத்திரம். நானும் வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை வாழும்படியாக, கிறிஸ்துவின் வாழ்க்கை, சிலுவையில் அவருடைய பாவ பரிகார மரணம் மற்றும் அவருடைய உயிர்த்தெழுதலைப் பற்றிய அசைவில்லாத செய்தி என் இருதயத்தில் பதிவதாக. ஆமென்

>> செழிப்பின் ஆவியால் மலேசியர்கள் ஆட்கொள்ளப்படும்படியாகவும், ஏழைகள், தேவையுள்ளோர் மற்றும் ஒதுக்கப்பட்டவர்கள் போன்றோர் பொருளாதார வளர்ச்சிக் கொள்கைகளிலே முன்னுரிமை கொடுக்கப்படும்படியும் அதினால் ஜனங்கள் மத்தியில் உள்ள பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் சரி செய்யப்படும்படியும் ஜெபியுங்கள்.

>> மலேசிய சபைகள் தேவனுடைய வார்த்தையின் மேல் கட்டப்படும்படியாகவும் நாம் கிறிஸ்து என்கிற கண்ணாடியின் மூலமாக மெய்யான செழிப்பை புரிந்து கொள்ளும்படியும் ஜெபியுங்கள்.

வேதப்பகுதி: எபி 1:5-14

# நாள் 8 ▪ *புதன் 14, ஆகஸ்ட் 2024*

# எல்லா தூதர்களுக்கும் மேலாக

தேவ தூதர்கள் - வேதாகமம் முழுக்க வெளிப்பட்டிருக்கிற அதிசயமான படைப்புகள். ஒரு தேவ தூதனால் ஒரே ராத்திரியில் ஒரு சேனையின் 185,000 பேரை அழிக்க முடியும் (2 ராஜா 19:35 பார்க்க). ஒரு தேவதூதன் தேசம் முழுக்க ஒவ்வொரு தலைச்சன்களையும் சங்கரிக்க முடியும் (யாத் 12:29 பார்க்க). தேவ தூதனுடைய பிரசன்னம் எவ்வளவு மகிமையானது என்றால் பரிசுத்தவான்களில் பிரதானமானவர்கள் கூட விழுந்து பணியாமல் இருக்க முடியவில்லை (வெளி 19:10 பார்க்க). தேவதூதர்களின் கிரியை மிகுந்த தாக்கம் ஏற்படுத்தக்கூடியது, அதுவும் ஒரு தேசத்தின் எதிர்காலத்தையே மாற்றக்கூடியது (தானி 10 பார்க்க).

தேவ தூதர்களை அற்பமானவர்களாக கருதக்கூடாது. கிலர் நினைப்பது போல இவைகள் குண்டான உருவத்துடன் கூடிய வசீகரமானவர்கள் அல்ல. தேவனுடைய செய்தியை கொண்டு செல்வதற்காக தேவனால் நியமிக்கப்பட்ட மிகுந்த வல்லமையுள்ளவர்கள் இவர்கள்.

இந்த பணிவிடைக்கார ஆவிகள் தேவனுடைய அக்கினி ஜுவாலைகள் எனப்படுபவர் (எபி 1:8 பார்க்க). ஆனாலும் இந்த எபிரேயர் புத்தகத்தின் ஆசிரியர் எழுதும்போது, கிறிஸ்துவுடன் ஒப்பிடும்போது இந்த அக்கினி ஜுவாலைகள் சூரியனுக்கு முன்பாக மெழுகுவர்த்திகள் போல என்று குறிப்பிடுகிறார். குமாரனுடைய பிரகாசம் எல்லா சிருஷ்டிகளைக் காட்டிலும் ஒப்பிட முடியாத அளவு பிரகாசமாகும்.

பிரதான தூதனாகிய மிகாவேலும் கூட தேவனுடைய அசைவில்லாத செய்தியாகிய " எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும்" செய்தியாகிய இரட்சகர் பிறந்திருக்கிறார் என்ற செய்தியை அறிவிக்கிற தூதுவர்தான் (லூக் 2:10-11). இதற்கு நாம் தகுதியில்லையெனறாலும் இந்த செய்தியைப் பெற்றுக் கொண்டது நாம்தான்.

ஆனால் இது இங்கே முடியவில்லை. உலகத்தின் முடிவில், இரட்சிப்பை சுதந்தரித்துக் கொள்ளப்போகிற நாம் தேவ தூதர்களையும் நியாயந்தீர்ப்போம் என்று வேத வசனம் சொல்லுகிறது (1 கொரி 6:3). இந்த தேவதூதர்கள் எவ்வளவு வல்லமையும் மகியுமானவர்கள் பாருங்கள். நாம் எவ்வளவு சிறியவர்களும் பெலவீனமானவர்களுமாக இருக்கிறோம் என்பதையும் பாருங்கள். கிறிஸ்துவின் அசைவில்லாத செய்தி இல்லையென்றால் இவைகள் எதற்கும் அர்த்தமில்லை. அவருக்குள் பெலவீனன் பெலவானா் ஆகிறார்கள், சாவுக்கேதுவானது சாவாமையுள்ளதாக ஆகிறது, பாவிகள் நீதிமான்களாகிறார்கள் மற்றும் தாழ்மையுள்ளவன் உயர்த்தப்படுகிறான். அதே போலத்தான் நாம் தேவ தூதர்களை நியாயந்தீர்ப்போம். அது நமக்குள் பதியட்டும்.

**இன்றைக்கான ஜெபம்:**

>> அன்பான பிதாவாகிய தேவனே, "மனுஷனை நீர் நினைப்பதற்கும், மனுபுத்திரனை நீர் விசாரிப்பதற்கும் அவன் எம்மாத்திரம்?". எங்களுடைய சிந்தைகள் நீர் எங்கள் மேல் பொழிந்துள்ள அன்பையும் தயவையும் புரிந்துகொள்வதை தொடங்கக்கூட முடியாது. இது எங்களை தாழ்மையுள்ளவர்களாகவும் அதே சமயத்தில் கிறிஸ்துவின் அசைவில்லாத செய்தியில் நம்பிக்கையுள்ளவர்களாகவும் வைத்திருக்கட்டும்.

>> மலேசியர்கள் தங்கள் வாழ்வின் எல்லா நிலைகளிலும் குறிப்பாக தங்களுடைய திறமையின் பகுதிகள் மற்றும் தொழில் போன்றவற்றில் புதுமையை கையாளும்படியும், அதினிமித்தம் ஒரு தேசமாக புதிய கருத்துக்கள், எளிமையாக்கப்பட்ட வழிமுறைகள், சிறப்பான சேவைகள் மற்றும் பொருளின் தரத்தின் மூலமாக வேகமாக வளரும்படியும் ஜெபியுங்கள்.

>> வேகமாக மாற்றங்களை காணும் இந்த நவீன காலத்திலே சபையானது சுவிசேஷம் அறிவிப்பதிலே புதுமையைக் கையாளும்படியும், அதினால் உலகத்தின் தேவைகளுக்கு ஏற்ப அதே சமயத்தில் சுவிசேஷத்தின் எந்தப் பகுதியையும் சமரசம் செய்து கொள்ளாமல் அறிவிக்கும்படியும் ஜெபியுங்கள்.

வேதப்பகுதி: எபி 2:1

# நாள் 9 ▪ *வியாழன் 15, ஆகஸ்ட் 2024*

## கவனியுங்கள்!

தேவ தூதர்கள் - வேதாகமம் முழுக்க வெளிப்பட்டிருக்கிற அதிசயமான படைப்புகள். ஒரு தேவ தூதனால் ஒரே ராத்திரியில் ஒரு சேனையின் 185,000 பேரை அழிக்க முடியும் (2 ராஜா 19:35 பார்க்க). ஒரு தேவதூதன் தேசம் முழுக்க ஒவ்வொரு தலைச்சன்களையும் சங்கரிக்க முடியும் (யாத் 12:29 பார்க்க). தேவ தூதனுடைய பிரசன்னம் எவ்வளவு மகிமையானது என்றால் பரிசுத்தவான்களில் பிரதானமானவர்கள் கூட விழுந்து பணியாமல் இருக்க முடியவில்லை (வெளி 19:10 பார்க்க). தேவதூதர்களின் கிரியை மிகுந்த தாக்கம் ஏற்படுத்தக்கூடியது, அதுவும் ஒரு தேசத்தின் எதிர்காலத்தையே மாற்றக்கூடியது (தானி 10 பார்க்க).

தேவ தூதர்களை அற்பமானவர்களாக கருதக்கூடாது. சிலர் நினைப்பது போல இவைகள் குண்டான உருவத்துடன் கூடிய வசீகரமானவர்கள் அல்ல. தேவனுடைய செய்தியை கொண்டு செல்வதற்காக தேவனால் நியமிக்கப்பட்ட மிகுந்த வல்லமையுள்ளவர்கள் இவர்கள்.

இந்த பணிவிடைக்கார ஆவிகள் தேவனுடைய அக்கினி ஜுவாலைகள் எனப்படுபவர் (எபி 1:8 பார்க்க). ஆனாலும் இந்த எபிரேயர் புத்தகத்தின் ஆசிரியர் எழுதும்போது, கிறிஸ்துவுடன் ஒப்பிடும்போது இந்த அக்கினி ஜுவாலைகள் சூரியனுக்கு முன்பாக மெழுகுவர்த்திகள் போல என்று குறிப்பிடுகிறார். குமாரனுடைய பிரகாசம் எல்லா சிருஷ்டிகளைக் காட்டிலும் ஒப்பிட முடியாத அளவு பிரகாசமாகும்.

பிரதான தூதனாகிய மிகாவேலும் கூட தேவனுடைய அசைவில்லாத செய்தியாகிய " எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும்" செய்தியாகிய இரட்சகர் பிறந்திருக்கிறார் என்ற செய்தியை அறிவிக்கிற தூதுவர்தான் (லூக் 2:10-11). இதற்கு நாம் தகுதியில்லையென்றாலும் இந்த செய்தியைப் பெற்றுக் கொண்டது நாம்தான்.

ஆனால் இது இங்கே முடியவில்லை. உலகத்தின் முடிவில், இரட்சிப்பை சுதந்தரித்துக் கொள்ளப்போகிற நாம் தேவ தூதர்களையும் நியாயந்தீர்ப்போம் என்று வேத வசனம் சொல்லுகிறது (1 கொரி 6:3). இந்த தேவதூதர்கள் எவ்வளவு வல்லமையும் மகியுமானவர்கள் பாருங்கள். நாம் எவ்வளவு சிறியவர்களும் பெலவீனமானவர்களுமாக இருக்கிறோம் என்பதையும் பாருங்கள். கிறிஸ்துவின் அசைவில்லாத செய்தி இல்லையென்றால் இவைகள் எதற்கும் அர்த்தமில்லை. அவருக்குள் பெலவீனன் பெலவானாய் ஆகிறார்கள், சாவுக்கேதுவானது சாவாமையுள்ளதாக ஆகிறது, பாவிகள் நீதிமான்களாகிறார்கள் மற்றும் தாழ்மையுள்ளவன் உயர்த்தப்படுகிறான். அதே போலத்தான் நாம் தேவ தூதர்களை நியாயந்தீர்ப்போம். அது நமக்குள் பதியட்டும்.

**இன்றைக்கான ஜெபம்:**

>> அன்பான பரலோகப் பிதாவே, நாங்கள் வழிவிலகிச் செல்ல ஏதுவாயிருந்தாலும் உம்முடன் நெருங்கி வரும்படி நீர் எங்களை அழைத்திருக்கிறீர். எங்களுடைய கரங்களை சுத்திகரியும், இருதயங்களை சுத்தமாக்கும் மற்றும் எங்கள் இருமனதான தன்மையை மன்னியும். உம்முடைய பிரசன்னத்தில் எங்களை தாழ்த்துகிறோம். எங்களுடைய கண்கள் உம்மீதே நோக்கமாயிருக்கட்டும். ஆமென்

>> இன ரீதியான வேறுபாடுகள் இருந்தாலும் மலேசியர்கள் மற்றவர்களை மதிக்கிற கலாச்சாரத்தைப் பின்பற்றும்படியும், பேச்சினாலும், நடக்கையினாலும் மற்றும் குணாதிசயத்தினாலும் ஒருவரையொருவர் கனப்படுத்தும்படி ஜெபியுங்கள்.

>> சபைகளும் கிறிஸ்தவ ஸ்தாபனங்களும் மற்றவர்களுக்கு மரியாதையும் கனமும் கொடுக்கிற கலாச்சாரத்தை உருவாக்கி, போட்டி உணர்வோ, ஒப்பீடோ அல்லது குற்றம் பிடித்தலோ இல்லாமல், ஒவ்வொருவரும் அவரவருக்கு தேவனால் கொடுக்கப்பட்ட வேலையை செய்ய அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பதை அறிந்து செயல்படும்படி ஜெபியுங்கள்.

வேதப்பகுதி: எபி 2:2-4

# நாள் 10 ▪ *வெள்ளி 16, ஆகஸ்ட் 2024*

# மீண்டும் பிரகடனம் பண்ணுங்கள்

"தூதர்களால் சொல்லப்பட்ட வசனத்தைப்" பற்றி எபி 2:2 சொல்லுகிறது. சில வேத வல்லுநர்கள் இது பழைய ஏற்பாட்டின் முதல் ஐந்து புத்தகங்களாகிய தோராவைக் குறிப்பிடுவதாக நம்புகின்றனர். எபிரேயப் பாரம்பரியமானது, இந்த ஐந்தாகமங்களும் சீனாய் மலையில் மோசேக்கு தூதர்களால் வழங்கப்பட்டது என்கிறது. இதன் செய்தியானது நம்பக்கூடியதென நிரூபனமாயுள்ளது. தோராவில் எழுதப்பட்டுள்ள கீழ்ப்படிதலுக்கான ஆசீர்வாதங்கள் மற்றும் கீழ்ப்படியாமைக்கான தண்டனைகள் இஸ்ரவேல் ஜனங்களுக்கு நிறைவேறியுள்ளது. வாக்குதத்தம் பண்ணப்பட்ட தேசம் அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருந்தாலும் கீழ்ப்படியாமையினால் அதை அவர்கள் இழந்தார்கள். அவர்கள் தங்கள் சுதந்தரவீதத்தை இழந்தார்கள். அவர்களுக்கு நியாயமான தண்டனை கிடைத்தது.

"ஆனால் அவர்களுக்கு நடந்தது போதும்" என எபிரேயர் புத்தகத்தின் ஆசிரியர் கூறுவதாக தெரிகிறது. இப்பொழுது வாசிக்கிறவர் மேல் அந்த வெளிச்சம் வீசுகிறது. அவர்களுக்கு கொடுக்கப்பட்ட செய்தியைக் காட்டிலும் மேன்மையான செய்தி நமக்கு கொடுக்கப்பட்டுள்ளது. அச்செய்தியை தூதர்கள் அல்ல, மாம்சத்தில் அவதரித்த கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே நமக்கு அறிவித்திருக்கிறார். நம்முடைய கீழ்ப்படியாமையின் மத்தியிலும் கிறிஸ்து நமக்காக மரித்தார் என்கிற மன்னிப்பின் செய்தியே அது. அவரை விசுவாசிக்கிற எவருக்கும் நித்திய ஜீவன் உண்டாகும் என்கிற இரட்சிப்பின் செய்தி. அவரோடுகூட பாடுகளை சகிக்கிற யாவரும் அழியாத சுதந்தரத்தை அடைவார்கள் என்கிற நம்பிக்கையின் செய்தி அது. இஸ்ரவேல் ஜனங்கள் நினைப்பதற்கும் கற்பனை செய்வதற்கும் மேலானது அது.

எனவே, இங்கே உக்கிராணத்துவத்தின் கோட்பாடு செயல்பட ஆரம்பிக்கிறது. நம்முடைய ஆண்டவராகிய இயேசு சொன்னார், "எவனிடத்தில் அதிகங் கொடுக்கப்படுகிறதோ அவனிடத்தில் அதிகங் கேட்கப்படும்" ( லூக் 12:48 ). அப்படியானால் நம்மிடத்தில் என்ன எதிர்பார்க்கப்படுகிறது? இந்த செய்தியை நாம் இன்னொரு முறை தைரியத்தோடு வார்த்தையினாலும் கிரியையினாலும் அறிவிக்க வேண்டும் என நான் நம்புகிறேன். எப்படி? எபி 2:4 இதற்கான குறிப்பை தருகிறது. இந்த அசைவில்லாத செய்தியைக் குறித்து சாட்சியிடுவதில் பரிசுத்த ஆவியானவரின் முக்கிய பங்கை இவ்வசனம் சொல்லுகிறது. ஆதியிலிருந்தது போலவே, இறுதியிலும் இருப்பதாக. பரிசுத்த ஆவியானவரே! வாரும்.

## இன்றைக்கான ஜெபம்:

>> "வாரும், பரிசுத்த ஆவியானவரே, உம்முடைய உண்மையுள்ள ஜனங்களின் இருதயங்களை நிரப்பி, உம்முடைய அன்பின் அக்கினியை தூண்டி விடும். நாங்கள் உம்மால் பெலப்படுத்தப்பட்டு உம்முடைய அசைவில்லாத செய்தியை எங்கள் பட்டணங்களிலும், தேசத்திலும் இவ்வுலகத்தின் தேசங்களிலும் அறிவிப்போமாக. ஆமென்.

>> மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் இடையேயும், மக்கள் குழுக்களுக்கும் இனங்களுக்கும் இடையேயும் நம்பிக்கையானது மதானி முயற்சிகளால் படிப்படியாக பழைய நிலைக்கு திரும்பும்படியும் அதினால் மலேசியர்களுக்கு மத்தியில் நல்ல ஒத்துழைப்பு உண்டாகும்படியும் ஜெபியுங்கள்.

>> பிரச்சனைக்குரிய மற்றும் சவாலான காலங்களில் மலேசிய சபைகளின் நம்பிக்கையானது விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவருமானவர் மேல் அசைவில்லாமல் இருக்கும்படியும் ஜெபியுங்கள்.

# நாள் 11-15

# அசைவில்லாத உறவு

எபிரெயர் 2:5-3:19

வேதப்பகுதி: எபி 2:5-9

# நாள் 11 ▪ *சனி 17, ஆகஸ்ட் 2024*

# நம் நினைவாக

தேவனுடைய இருதயத்தில் மனுக்குலம் ஒரு விசேஷித்த இடத்தைப் பிடித்துள்ளது. தூதர்களுடன் ஒப்பிடும்போது, மனுக்குலமானது வடிவத்திலும் செயல்பாட்டிலும் அநேக விதங்களில் குறைவுபட்டதுதான். ஆனாலும் தேவன், இந்தப் பூமியை தூதர்களுக்கு கீழ்ப்படுத்தாமல், மனுக்குலத்துக்கு கீழ்ப்படுத்தியிருக்கிறார்.

பின்னர், இயேசுவுக்குள் ஒரு உதாரணத்தையும் கொடுத்தார். நம்மை மறக்கவோ அல்லது கைவிடவோ இல்லை என்பதை வெளிப்படுத்தவே இயேசு மனிதனாய் அவதரித்தார். அவருடைய பாடுகள் மற்றும் மரணத்தின் மூலமாக நாம் மீடகப்படுவதற்காவே இயேசு மனிதனாக மாறினார். நம்முடைய குறைவுகள் மற்றும் தோல்விகள் இருந்தாலும் நாம் அவரோடுகூட வரப்போகிற உலகை ஆளுகை செய்யும்படி உயர்த்தப்பட முடியும் என்பதை வெளிப்படுத்தவே, இயேசு ஒரு மனிதனாக மகிமையினாலும் கனத்தினாலும் முடி சூட்டப்பட்டார்.

தூதர்களுக்கு எவ்வளவு பொறாமையாக இருந்திருக்கும். உலகத்தை ஆளுகை செய்வதற்கு அழைக்கப்படுவதற்கு பதிலாக, இரட்சிப்பை சுதந்தரிக்கப்போகிற நமக்கு பணிவிடை செய்யும்படி அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் (எபி 1:14). நாம் எவ்வளவு சந்தோஷத்துடனும் நன்றியுடனும் இருக்க வேண்டும். நம்முடைய கீழ்ப்படியாமை மற்றும் பாவங்கள் இருந்தாலும், தேவன் எப்பொழுதும் நம்மை நினைவில் கொண்டிருக்கிறார். எந்த அளவுக்கு என்றால் நாம் இரட்சிக்கப்படும்படிக்கு அவருடைய ஒரே பேரான குமாரனை நமக்காக தியாகம் செய்கிற அளவுக்கு. ஏசாயா தீர்க்கதரிசி சொல்கிறார், "ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை"

**இன்றைக்கான ஜெபம்:**

>> "வாரும், பரிசுத்த ஆவியானவரே, உம்முடைய உண்மையுள்ள ஜனங்களின் இருதயங்களை நிரப்பி, உம்முடைய அன்பின் அக்கினியை தூண்டி விடும். நாங்கள் உம்மால் பெலப்படுத்தப்பட்டு உம்முடைய அசைவில்லாத செய்தியை எங்கள் பட்டணங்களிலும், தேசத்திலும் இவ்வுலகத்தின் தேசங்களிலும் அறிவிப்போமாக. ஆமென்.

>> மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் இடையேயும், மக்கள் குழுக்களுக்கும் இனங்களுக்கும் இடையேயும் நம்பிக்கையானது மதானி முயற்சிகளால் படிப்படியாக பழைய நிலைக்கு திரும்பும்படியும் அதினால் மலேசியர்களுக்கு மத்தியில் நல்ல ஒத்துழைப்பு உண்டாகும்படியும் ஜெபியுங்கள்.

>> பிரச்சனைக்குரிய மற்றும் சவாலான காலங்களில் மலேசிய சபைகளின் நம்பிக்கையானது விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவருமானவர் மேல் அசைவில்லாமல் இருக்கும்படியும் ஜெபியுங்கள்.

வேதப்பகுதி: எபி 2:10-18

# நாள் 12 ▪ *ஞாயிற்று 18, ஆகஸ்ட் 2024*

# நம்மை சகோதரர் என்றழைக்க வெட்கப்படவில்லை

மனுக்குலமாகிய நம்மை நித்திய ஆண்டவரும் இரட்சகருமானவர் சொந்தங்களாக ஏற்றுக்கொள்வது எத்தனை பாக்கியம் மற்றும் கனம். அவர் நித்தியமான, ஒப்பற்ற மற்றும் நிகரற்ற தேவன். ஆனாலும் விழுந்துபோன மற்றும் பெலவீனமான மனிதர்களாகிய நம்மில் ஒருவரைப்போல எண்ணப்படுவதை அவர் தெரிந்துகொண்டார். நம்மை சகோதரர் என்று அழைக்கப்படுவதற்கும் மேலாக, அவர் மாம்சத்தில் அவதரித்து, தம்முடைய மகிமையை விட்டு, மனுஷ சாயலாகி மனுஷர் மத்தியில் வாசம் பண்ணினார். அவர் மனுஷ சாயலானபோது, நம்மில் ஒருவராகவும் நம்மைப் போலும் மாறினார்.

அந்தப் பாதையை அவர் தெரிந்துகொண்டது, எவ்வளவு தாழ்மையானதும் தியகமுமான காரியம்! அவர் மெய்யான சகோதரன் என்பதை நிரூபிக்கவும் செய்தார். யார் மெய்யான சகோதரன்? துன்ப வேளையில் சகோதரரோடு கூட நின்று தாங்குபவனே மெய்யான சகோதரன். நீதி 17:17ல் சாலமோன் எழுதுகிறார், "சிநேகிதன் எல்லாக் காலத்திலும் சிநேகிப்பான்; இடுக்கணில் உதவவே சகோதரன் பிறந்திருக்கிறான்". இதன் எளிமையான அர்த்தம் என்னவென்றால் ஒரு மனிதன் தன்னுடைய சகோதரனுடைய துன்ப காலத்தில் அவனுக்காக நிற்கும்போதே அவன் மெய்யான சகோதரன் என நிரூபிக்கிறான்.

இதைத்தான் இயேசு நமக்காக செய்தார். மனுக்குலம் விரக்தியான நிலையில் இருந்தபோது, இயேசு தம்முடைய மகிமையைத் துறந்து, தம்முடைய ஜீவனைத் தந்து அவர்கள் விடுதலையாகும்படியாக அவர்களை மீட்க வந்தார். இதுதான் சகோதரத்துவத்தின் உச்சகட்டம் - அன்பினிமித்தம் தன் சகோதரருக்காக ஜீவனைக் கொடுப்பது. அதுதான் அவருடைய அன்பின் ஆழம் மற்றும் தம்முடைய சகோதரரிடத்தில் தான் வெளிப்படுத்தும் உறவு.

### இன்றைக்கான ஜெபம்:

>> ஆண்டவராகிய இயேசுவே, பிதாவாகிய தேவனுடைய சிங்காசனத்துக்கு முன்பாக நாங்கள் உம்முடைய சகோதரர் மற்றும் சகோதரிகள் என்று கருதப்படுவதை அறிவது ஆச்சர்யம். உம்முடைய பிட்கப்பட்ட சரீரத்தின் மூலமாக தேவனை நாங்கள் நிந்தை மற்றும் குற்ற உணர்வு இன்றியும் அதோடுகூட சந்தோஷம் மற்றும் சமாதானத்துடனும் அணுக முடிகிறதற்காக உமக்கு ஸ்தோத்திரம். இந்தக் கிருபை உம்மால் நேசிக்கப்படுகிற அனைவருக்கும் அருளப்படுவதாக. ஆமென்.

>> நம்முடைய பிள்ளைகளுக்கு வித்தியாசப்பட்ட பாடத்திட்டங்களை கொடுக்கிற அரசாங்க, தனியார், சர்வதேச மற்றும் வீட்டுப்பள்ளிகளுக்காக ஜெபியுங்கள். வலிமையான குணம், நல்ல பண்பு மற்றும் சிறந்த அறிவுத்திறன் ஆகியவற்றை உருவாக்கும் சூழலில் நமது குழந்தைகள் வளர்க்கப்பட்டு ஊட்டமளிக்கப்படும்படியாக ஜெபியுங்கள்.

>> சபைகளால் நடத்தப்படும் கல்வி மையங்களில் சீஷர்களை உருவாக்க வேண்டும் என்கிற அழைப்புக்கேற்ப செயல்பட, போதுமான அளவுக்கு அர்ப்பணிப்புள்ள மற்றும் வேதாகமத்தை போதிக்கும் ஆசிரியர்கள் இருக்கும்படியாக ஜெபியுங்கள். அவர்களுடைய தாக்கம் வகுப்பறைகளுக்கு அப்பாற்பட்டு மாணவர்களுடைய வாழ்வன் எல்லாப் பகுதிகளிலும் இருக்கும்படியாக ஜெபியுங்கள்.

வேதப்பகுதி: எபி 3:1-6

# நாள் 13 ▪ *திங்கள் 19, ஆகஸ்ட் 2024*

# உண்மையுள்ளவர்

ஒரு நபரின் நற்பெயரும் குணாதிசயமும் அவருடைய முற்காலத்திய சாதனை மற்றும் சீரான செயல்பாட்டின் அடிப்படையில் பெறப்படுகிறது. ஒருவருடைய நம்பகத் தன்மையையும் சார்புத்தன்மையையும் அளவிடக்கூடிய கருவி இது.

"உண்மையும் சத்தியமுமுள்ளவர் என வெளி 19:11ல் இயேசு அழைக்கப்படுகிறார். எபி 3:1-2ன் படி இதை அவர் பிதாவுக்கு முழுமையாக கீழ்ப்படிந்ததன் மூலம் சம்பாதித்தார். பிதாவின் சித்தத்துக்காகவும் மனுக்குலத்தின் மீதுள்ள அன்புக்காகவும் தம்முடைய ஜீவனை சிலுவையில் ஒப்புக்கொடுத்ததின் மூலமாக தம்முடைய உண்மையை அவர் நிரூபித்தார். கெத்சமனே தோட்டத்தில் அவர் சிலுவைப் பாடுகளையும் மரணத்தையும் விட்டு விலகுவதை தேர்ந்தெடுத்திருக்க முடியுமானாலும், அவர் மரணபரியந்தம் உண்மையுள்ளவராகவும் கீழ்ப்படிகிறவராகவும் இருப்பதை தேர்ந்தெடுத்தார். மரணம் கூட பிதாவின் சித்தத்தை அவர் நிறைவேற்றுவதை விட்டு விலகும்படி அவரை திசைதிருப்ப முடியவில்லை.

இப்படிப்பட்ட ஆண்டவர் மற்றும் இரட்சகரைத்தான் நாம் விசுவாசிக்கிறோம் மற்றும் பின்பற்றுகிறோம். அவருடைய தீர்மானத்தையும் உறுதியையும் ஒன்றும் அசைக்க முடியவில்லை. அவர் எதைச் சொன்னாரோ, அதை செய்வார். அவர் எதை வாக்கு பண்ணினாரோ, அதை நிறைவேற்றுவார். "பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல; மனம்மாற அவர் ஒரு மனுபுத்திரனும் அல்ல; அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரா? அவர் வசனித்தும் நிறைவேற்றாதிருப்பாரா?" ( எண் 23:19 ). நம்மேல் அவர் காண்பிக்கிற நிரூபிக்கப்பட்ட உண்மை மற்றும் பராமரிப்பின் நிமித்தமாக, நமக்கு சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கும் என்கிற நிச்சயத்தோடும் சமாதானத்தோடும் வாழ முடியும். எனவே நம்மைச் சுற்றி நடக்கும் குழப்பங்களால் நாம் அசையாதபடி, நம்மை அழைத்தவர் கடைசிவரை நடத்துவார் என்கிற நிச்சயத்தோடு இருப்போமாக, ஏனென்றால் அவர் உண்மையுள்ளவர்!

## இன்றைக்கான ஜெபம்:

>> ஆண்டவராகிய இயேசுவே, நீர் பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை கவனமாய் பின்பற்றினீர் மற்றும் எங்களை உம்முடைய அடிச்சுவடுகளை பின்பற்றச் சொல்லியிருக்கிறீர். எங்களுடைய சிலுவையை உண்மையுள்ளவர்களாய் சுமக்கவும், நீர் எங்களை நம்பிக் கொடுத்துள்ள பொறுப்புகளை நிறைவேற்றவும் எங்களுக்கு உதவி செய்யும். ஆமென்

>> எதிர்கால வளர்ச்சிக்காக நிதி அமைச்சகமானது நல்ல, வழிமுறையுள்ள, அடையக்கூடிய மற்றும் நிலைத்தன்மையுள்ள நிதிக் கொள்கைகளை உருவாக்கும்படியும் மற்றும் அவர்கள் பொதுமக்களின் நிதியை வெளிப்படைத் தன்மையுடனும், திறமையாகவும் திறம்படவும் நிர்வகிக்கும்படி ஜெபியுங்கள்.

>> கிறிஸ்தவர்களும் சபைகளும் உண்மையுள்ள உக்கிராணக்காரர்களாகவும் தேவனுடைய பொருளாளர்களாகவும் இருக்கும்படியும், சபைகள் எவ்வளவு சிறியதாக இருந்தாலும் ஒன்றிலும் குறைவுபட்டுப் போகாதபடி ஜெபியுங்கள். சபையின் கணக்குகளில் முரண்பாடுகளோ முறைகேடுகளோ இருக்கக்கூடாது என ஜெபியுங்கள் அப்பொழுதுதான் நாம் உலகத்தில் ஜீவனுள்ள சாட்சிகளாக இருக்க முடியும்.

வேதப்பகுதி: எபி 3:7-19

# நாள் 14

*செவ்வாய் 20, ஆகஸ்ட் 2024*

# பெரும் துயரம்

கிறிஸ்துவுக்குள் நமக்கு கிடைத்த இந்த உறவு அற்புதமானது. சிருஷ்டிப்பு தொடங்கி தேவனுடைய நித்திய திட்டம் வரை, மனுக்குலத்துக்கு அவருடைய சிந்தையிலும் திட்டத்திலும் முக்கியமான ஸ்தானமும் பங்கும் கொடுக்கப்பட்டுள்ளது. நாம் இதற்கு தகுதியில்லாதவர்களாக இருந்தாலும் நமக்கு கொடுக்கப்பட்ட கனத்தையும் பாக்கியத்தையும் பாருங்கள். இதைத்தான் வேதம் "கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே, தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியம்" என்று விவரிக்கிறது (எபே 2:6). இது நம்மை ஆழமான நன்றியினாலும் மகிழ்ச்சியினாலும் நிரப்ப வேண்டும். வருத்தப்படும் விதமாக ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் அத்தனை பேரும் நன்றியுள்ளவர்கள் அல்ல.

எபிரேயர் புத்தகத்தின் ஆசிரியர் அவிசுவாசம் மற்றும் பின்வாங்கி போகுதல் ஆகியவற்றைக் குறித்து எச்சரிக்கிறார். இஸ்ரவேல் ஜனங்களுக்கு அடிமைத்தனத்திலிருந்தும் பார்வோனின் அதிகாரத்திலிருந்தும் மிகப்பெரிய விடுதலையை தந்திருந்தும், தம்முடைய தயவையும் பராமரிப்பையும் காண்பிக்க அநேக கிரியைகளை செய்திருந்தும் வனாந்தரத்திலே இஸ்ரவேல் ஜனங்கள் செய்ததுபோல அவிசுவாசம், முறுமுறுப்பு, தேவனைக் குறை சொல்லுதல் போன்ற காரியங்களை செய்ததுபோல நாமும் அடிச்சுவடுகளை பின்பற்றாதபடி எபிரேயர் புத்தகத்தின் ஆசிரியர் நம்மை எச்சரிக்கிறார். இது அவர்களை வாக்குதத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் பிரவேசிக்க முடியாதபடி தடை செய்தது. என்ன ஒரு பெரும் துயரம். நாம் இஸ்ரவேல் ஜனங்கள் செய்த தவறுகளிலிருந்து கற்றுக்கொண்டு கர்த்தர் நமக்கு செய்த யாவற்றையும் நாம் நினைத்து அவருக்கு நன்றி உள்ளவர்களாக இருப்போம்.

**இன்றைக்கான ஜெபம்:**

>> ஆண்டவராகிய இயேசுவே, எங்களை தேவனோடு ஒப்புரவாக்கும்படி, எங்கள் ஒவ்வொருவருக்காகவும் நீர் மிகப்பெரிய விலைக்கிரயத்தை செலுத்தியிருக்கிறீர். எங்களைக் குறித்த உம்முடைய இருதயத்தை நாங்கள் எப்பொழுதும் நினைவுபடுத்திக் கொள்ள எங்களுக்கு உதவி செய்யும், அப்பொழுது நாங்கள் வழிவிலகிச் செல்லவோ தடுமாறவோ அல்லது தோல்வியடையவோ மாட்டோம். நாங்கள் விழுந்து போகும்போதெல்லாம் எங்களை மீட்டுக்கொள்ளக்கூடிய உம்முடைய வழிநடத்துதல் மற்றும் வல்லமையில் நாங்கள் நம்பிக்கையாயிருப்பதினாலே, உம்முடைய கரத்திலே வைத்து எங்களை பாதுகாத்துக்கொள்ளும். ஆமென்

>> சுகாதார அமைச்சகமானது புதுமையான வழிகளைப் பயன்படுத்தி சுகாதாரத்தை குறித்த விழிப்புணர்வை சமூக ஊடகங்கள் மூலமாகவும் நிகழ்ச்சிகள் மூலமாகவும் மலேசியர்கள் மத்தியில் ஏற்படுத்தும்படி ஜெபியுங்கள். மருத்துவப் பராமரிப்பின் அதிகரித்து வரும் தேவைகளுக்காக மருத்துவ சேவை அமைப்பில் சீர்திருத்தம் உண்டாகும்படி ஜெபியுங்கள்.

>> தேவனுடைய ஆலயமாகிய சரீரத்தை கிறிஸ்தவர்கள் நன்கு பராமரிக்கும்படி ஜெபியுங்கள். விசேஷமாக போதகர்கள் அவர்களுடைய ஆவிக்குரிய ஆரோக்கியம் மாத்திரமல்ல, அவர்களின் சரீரம் மற்றும் மனதின் ஆரோக்கியத்திலும் கவனம் செலுத்த ஜெபியுங்கள்.

வேதப்பகுதி: எபி 3:7-19

# நாள் 15 ▪ புதன் 21, ஆகஸ்ட் 2024

# முடிவு பரியந்தம் நிலைத்திருத்தல்

வாக்குப்பண்ணப்பட்ட தேசத்தை சுதந்தரிக்க அழைக்கப்பட்டிருந்தும் அந்த பாக்கியத்தைப் பெற்றிருந்தும், எகிப்திலிருந்து புறப்பட்ட அனைவரும், யோசுவா மற்றும் காலேபைத் தவிர, வனாந்தரத்தில் மடிந்தார்கள். இஸ்ரவேலர்கள் கடைசிவரை தங்கள் விசுவாசத்தை காத்துக்கொள்ளாதபடியினாலும், பாவத்தின் வஞ்சனையினிமித்தம் கடினப்பட்டு, அவிசுவாசத்துக்கு பொல்லாத இருதயத்தில் இடங்கொடுத்து ஜீவனுள்ள தேவனை விட்டு விலகி தங்கள் சுதந்தரத்தை இழந்தார்கள் (எபி 3:12-14 பார்க்க).

எபிரேயர் புத்தகத்தின் ஆசிரியர் இவைகளைக் குறிப்பிடுகிறார் ஏனென்றால், இவர் காலத்தில் வாழ்ந்த எபிரேய விசுவாசிகளும், அவர்கள் செய்த அதே தவறாகிய தங்கள் விசுவாசத்தை விட்டு விலகி, பழைய யூதப் பாரம்பரியங்களுக்கு திரும்பிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் சிலுவையின் பூரணமான கிரியையை சந்தேகப்பட்டு மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படியான நீதியைத் தேடினதால் தங்கள் இரட்சிப்பை இழந்துபோகும் அபாயத்துக்கு உள்ளானார்கள், ஆனால் அந்தப் பிரமாணம் நிழல் மாத்திரமே தவிர நிஜமல்ல.

நம்முடைய விசுவாசத்தில் முடிவுபரியந்தம் நிலைத்திருந்தால் இரட்சிப்பு நிச்சயம். ஆனால் அவருக்கு நம் முதுகைக் காட்டி, நம்முடைய விசுவாசத்தை விட்டுவிட்டால் இரட்சிப்பை இழக்க நேரிடும். எனவே, இந்த இரட்சிப்பை காத்துக்கொண்டு, கிறிஸ்துவுடன் நித்தியத்தில் பிரவேசிக்க நாம் விரும்பினால், முடிவுபரியந்தம் இந்த விசுவாசத்தை காத்துக் கொள்ள வேண்டும். ஒருவேளை, நாம் விசுவாசத்தை விட்டு விலகியிருந்தால், நம்மை இரட்சித்துக் கொள்வதற்கான வழி, மனந்திரும்பி அவரிடத்தில் வருவதுதான். மனந்திரும்பி தம்மிடத்தில் வருகிற ஒருவரையும் அவர் புறம்பே தள்ளுவதில்லை, ஏனென்றால் அவர் உண்மையுள்ளவர். நம்முடைய கர்த்தர் எவ்வளவு இரக்கமுள்ளவர் மற்றும் நல்லவர் பாருங்கள்!

## இன்றைக்கான ஜெபம்:

>> ஆண்டவராகிய இயேசுவே, எங்கள் பெலவீனத்தை நாங்கள் கண்ணோக்கும்போது, உம்முடைய பரிபூரணத்தை நோக்கிப் பார்க்கிறோம். உம்முடைய உயிர்த்தெழுந்த வல்லமையினாலும் எங்களைப் புதுப்பிக்கிற ஆவியின் அன்பினாலும் எங்களை நாளுக்கு நாள் நீர் மறுரூபமாக்குகிறதை அறிந்திருக்கிறோம். எங்களுடைய கடைசி மூச்சு வரை உம்முடைய நாமத்தை நாங்கள் பற்றிக்கொண்டு இருக்கும்படியாக சோதனைகள் மற்றும் பாடுகள் மத்தியில் எங்களை நடத்தும். ஆமென்

>> கிராமப்புறங்களில் விவசாயம் செய்கிறவர்களுடைய வறுமை சம்பந்தப்பட்ட பிரச்சனைகளாகிய வேலை செய்வதற்கான ஆட்கள் பற்றாக்குறை, குறைவான மகசூல் மற்றும் தரம் போன்றவை விவசாயம் மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சகத்தால் சரியாக கையாளப்படும்படி ஜெபியுங்கள்.

>> விவசாயம் சம்பந்தப்பட்ட திட்டங்களில் ஈடுபட்டிருக்கிற அநேக சபைகள் மற்றும் கிறிஸ்தவ நிறுவனங்களுக்கு தேவன் ஞானத்தைத் தரும்படியாக ஜெபியுங்கள். அதில் கிடைத்த அனுபவம் மற்றும் திறனைக் கொண்டு அவைகள் விவசாயம் மற்றும் உணவுத்துறையில் தேசிய வளர்ச்சிக்கு தங்கள் பங்களிப்பை செய்யும்படியாக ஜெபியுங்கள்.

## நாள் 16-20

# அசைவில்லாத நடை

எபிரெயர் 4 & 5

வேதப்பகுதி: எபி 3:7-19

# நாள் 16 ▪ *வியாளன் 22, ஆகஸ்ட் 2024*

# பின்வாங்கிப் போகாதீர்கள்

"சரி, நான் 7 மணிக்குள் அங்கு இருப்பேன்" என்று சபைக்குச் செல்ல ஒரு வாகனத்தை பிடிக்க சென்ற ஒரு வாலிபன் சொன்னான். ஆனால் வருத்தப்படும் விதமாக அவன் வந்து சேரவில்லை. சபையின் வாகனம் அந்த வாலிபனுக்கு கொடுத்த நேரத்தை விட கூடுதலாக காத்திருந்தும்கூட மற்ற பயணிகளை வேறு இடங்களிலிருந்து ஏற்றச்செல்ல வேண்டியிருந்ததால் அந்த வாலிபன் இல்லாமல் வாகனம் புறப்பட்டுச் சென்றது.

இன்றைக்கான வேத வாசிப்பின் முதல் வசனமே, 7 மணிக்கு முன்பாக வருவேன் என வாக்கு கொடுத்து அதை தவறவிட்ட வாலிபனைப் போல நாமும் பின்வாங்கிப் போகாமல் இருக்கும்படி நம்மை எச்சரிக்கிறது. நாமும் கூட அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசியாமல் அதைத் தவறவிட வாய்ப்புள்ளது. வாக்குப் பண்ணப்பட்ட தேசம் அல்லது இளைப்பாறுகிற ஸ்தலத்துக்கு கொண்டுபோய் சேர்ப்பதாக தேவன் மோசேயின் மூலமாக இஸ்ரவேலருக்கு வாக்கு பண்ணினார் (வசனம் 3). ஆனால் இந்த நற்செய்தி அவர்களுக்கு சந்தோஷத்தைக் கொடுக்கவில்லை, ஏனென்றால் அவர்கள் விசுவாசம் அவர்கள் கேட்ட செய்திக்கு ஏற்றாற்போல இல்லை. எபி 4:2 சொல்லுகிறது, "கேட்டவர்கள் விசுவாசமில்லாமல் கேட்டபடியினால், அவர்கள் கேட்ட வசனம் அவர்களுக்குப் பிரயோஜனப்படவில்லை"

இஸ்ரவேலரின் அவிசுவாசம் அநேக சூழ்நிலைகளில் அவர்கள் முறுமுறுப்பின் மூலம் தெளிவாக வெளிப்பட்டது. பார்வோனின் சேனை சூழ்ந்தபோது அவர்கள் மோசேயிடம் முறுமுறுத்தார்கள் (யாத் 14:11-12 பார்க்க). மாரா என்கிற இடத்தில் அவர்கள் கசப்பான நீரைக் குறித்து முறுமுறுத்தார்கள் (யாத் 15:22-24 பார்க்க). சீனாய் வனாந்தரத்தில் ஆகாரம் குறைவுபட்டபோது, அவர்கள் எகிப்தின் பதார்த்தங்களுக்காக ஏங்கினார்கள் (யாத் 16:2-3 பார்க்க). ரெவிதீமிலே அவர்களுக்கு தண்ணீர் இல்லாதபோதுஇ அவர்கள் மறுபடியும் முறுமுறுத்தார்கள் (யாத் 17:1-4 பார்க்க). இதன் விளைவாக அவர்கள் வாக்குப்பண்ணப்பட்ட தேசத்தில் பிரவேசிக்க முடியாமல் போயிற்று.

வாழ்க்கை எப்பொழுதுமே சுலபமாகவும் அழகாகவும் இருப்பதில்லை. சவால்களும் சூழ்நிலைகளும் நாம் முறுமுறுக்கும்படி நம்மை சோதிக்கின்றன, ஆனால் நாம் நம்முடைய சமாதானப் பிரபுவாகிய இயேசுவுடன் நடக்கும்போது நாம் நிலைத்திருப்போம். நம்முடைய விசுவாசமானது உலகத்தின் மேல் வேரூன்றாமல் இயேசுவின் மேல் வேரூன்றும்போது அது அசையாது. அவருடைய இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கிற வாக்குதத்தமாக இருந்தாலும், முறுமுறுத்தலும் அவிசுவாசமும் நம்மைப் பின்வாங்கிப் போனவர்களாக மாற்றிவிடும்.

## இன்றைக்கான ஜெபம்:

>> கர்த்தராகிய இயேசுவே, இந்த உலகத்தின் மேலல்ல, உம்மீதே எங்கள் இருதயங்களையும் விசுவாசத்தையும் நோக்கமாயிருக்கும்படி ஒழுங்குபடுத்தும். பிரச்சனைகளும் சவால்களும் எழும்பும்போது, முறுமுறுப்பதற்குப் பதிலாக நன்றியுள்ளவர்களாக இருக்க எங்களுக்கு உதவி செய்யும். சூழ்நிலைகள் மற்றும் இந்த உலகம் கொடுக்கிற சோதனையான வாய்ப்புகள் மேல் அல்ல, உம்மீதே எங்கள் விசுவாசம் உறுதியாக இருக்கட்டும். ஆமென்.

>> பொருளாதார அமைச்சகம் பொருளாதார வளர்ச்சியை உயர்த்துவதற்கும், எதிர்காலத்தில் ஏற்படுகிற எதிர்பாராத பொருளாதார நெருக்கடிகளை சமாளிப்பதற்கான கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கும் ஜெபியுங்கள்.

>> தசமபாகம் மற்றும் காணிக்கைகளில் சரிவை சந்திக்கிற சபைகள் வேறு வழிகளைக் கண்டறிந்து சபை கட்டிட வாடகை, இதர செலவுகள் மற்றும் சம்பளங்கள் போன்றவற்றை சமாளிக்கவும், சபை அங்கத்தினர்களும் உண்மையுள்ளவர்களாக கொடுக்கும்படி தேவன் அவர்களைத் தொடும்படியாகவும் ஜெபியுங்கள்.

வேதப்பகுதி: எபி 4:7-12

# நாள் 17 ▪ *வெள்ளி 23, ஆகஸ்ட் 2024*

# ஓய்வு நாள்: தேவனுடைய இளைப்பாறுதலின் படம்

இன்றைக்கான வேத வசனங்கள் ஓய்வு நாளைக் குறித்த கோட்பாடுகளை விவாதிக்கிறது, ஆனால் அவைகளை வாராந்திர ஓய்வுநாளாக அல்ல, தேவன் மேல் வைக்கும் விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலினால் உண்டாகும் ஆழமான இளைப்பாறுதலின் அடையாளமாக விவரிக்கிறது.

சீர்திருத்த திருச்சபையின் புகழ்பெற்ற இறையியலாளராக கருதப்பட்ட ஜான் கால்வின், பழைய ஏற்பாட்டில் கடைப்பிடிக்கப்பட்ட ஓய்வுநாள் கிறிஸ்துவுக்குள் நிறைவேறினது என்றும், கிறிஸ்தவர்கள் இனி ஓய்வுநாளைக் கடைப்பிடிக்க வேண்டிய அவசியமில்லை என்றும் வாதிடுகிறார். மத் 12:8 சொல்லுகிறது, "மனுஷகுமாரன் ஓய்வுநாளுக்கும் ஆண்டவராய் இருக்கிறார்". கிறிஸ்துவே பூரணமான ஓய்வுநாள் என்றும், ஒருவர் கிறிஸ்துவின் மேல் விசுவாசம் வைக்கும்போது அவர் மெய்யான இளைப்பாறுதலில் பிரவேசிக்கிறார் என்றும் கால்வின் போதித்தார்.

தேவன் ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தது போல, நாமும் அவர் தருகிற இளைப்பாறுதலில் பிரவேசிக்க வேண்டுமென்று விரும்புகிறார். ஏன்? அவருக்கு ஓய்வு தேவைப்படுவதினால் அல்ல, இந்த உலகப்பிரமாரமான பரபரப்புகளை எல்லாம் விட்டு, அவர் ஆயத்தம் பண்ணின இளைப்பாறுதலில் பிரவேசிக்க நமக்கு முன் மாதிரியை வைத்ததினால். வேலை ஒருபோதும் முடிவதில்லை ஆனால் வேலையின் மத்தியில் ஓய்வு இல்லாவிட்டால் நம்முடைய சரீரங்கள் கெட்டுப்போய் விடும் என்பதினால். உங்களுடைய குடும்பத்துடன் சேர்ந்து ஓய்ந்திருக்க நேரத்தை ஒதுக்குங்கள் மற்றும் தேவனுடைய பிரசன்னத்தில் உங்கள் ஓய்வுநாளை செலவிடுங்கள் அப்பொழுது மோசேயினால் நடத்தப்பட்ட இஸ்ரவேலர்கள் கீழ்ப்படியாமையில் விழுந்ததுபோல நாம் விழ மாட்டோம்.

நம்முடைய கிரியைகளை முடித்து தேவனுடைய பிரசன்னத்துக்குள் வந்து, தேவனுடைய இளைப்பாறுதலில் பிரவேசிக்கும் பழக்கத்தை நாம் உண்டாக்கிக் கொள்வோமானால், நம்முடைய விசுவாசப் பயணம் அசைவில்லாததாக - அசைவில்லா நடையாக இருக்குமென நம்புகிறேன். தேவனுடைய வாத்தையதகிய ஆவியின் பட்டயம்தான் நம்முடைய விசுவாசப் பயணத்தை நடத்துகிறது. விசுவாசம் மற்றும் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவதன் மூலமாக ஒரு ஆழமான இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்க பிரயாசப்படுங்கள், அதற்கு ஜனங்களுடைய இருதயத்தை ஆராய்ந்து அதின் எண்ணங்களை அறிந்து கொள்கிற சக்தியுண்டு.

### இன்றைக்கான ஜெபம்:

>> கர்த்தராகிய இயேசுவே, உம்முடைய இளைப்பாறுதலின் அர்த்தத்தை மெய்யாகவே புரிந்து கொள்ள உதவி செய்யும். எங்களுடைய கிரியைகளை உமக்கு ஒப்புக்கொடுக்கும்போது, உம்முடைய வார்த்தைக்கு கீழ்ப்படியவும் நீர் வாக்குப்பண்ணின இளைப்பாறுதலை அடையவும் எங்களுக்கு அருள் செய்யும். சவால்களை நாம் சந்திக்கும்போது, உமக்கு நன்றி செலுத்தவும் உம்மில் நிலைத்திருக்கவும் உதவி செய்யும். ஆமென்

>> கிராமப்புற மற்றும் ஊரக வளர்ச்சித்துறையானது கிராமப்புறங்களில் போதுமான வசதிகள் மற்றும் கட்டமைப்பை ஏற்படுத்தி அதின் மூலம் அங்கு வாழ்கிற சமுதாயத்தின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும்படி ஜெபியுங்கள்.

>> கிராமப்புற சமுதாயங்களிலே உள்ள சபைகள் மற்றவர்களை சந்திக்கும்படியான சுவிசேஷ வேலைக்காக பாலங்களை கட்டியெழுப்பும்படியும் மற்றும் அவர்கள் சிறுவர் மற்றும் வாலிபர் மத்தியில் சீஷர்களை உருவாக்குவதில் வலிமையாக இருக்கும்படியும் ஜெபியுங்கள். அவர்கள் பொருளாதாரத்திலே தன்னிறைவை அடையும்படி ஜெபியுங்கள்.

வேதப்பகுதி: எபி 4:13-16

# நாள் 18 ▪ *சனி 24, ஆகஸ்ட் 2024*

# தேவனுக்கு முன்பாக மறைவானது ஒன்றுமில்லை

தேவனுக்கு முன்பாக மறைவானது ஒன்றுமில்லை என்பதை இந்த வசனங்கள் நினைப்பூட்டுகிறது. நம்முடைய எண்ணங்கள், உணர்வுகள் மற்றும் செயல்கள் தேவனுக்கு முன்பாக வெளியரங்கமாயிருக்கின்றன. சகலமும் அவருக்கு முன்பாக வெளியரங்கமாயிருக்கின்றது என்பதை அங்கீகரித்து, கீழ்ப்படிதலோடும் நேர்மையோடும் வாழும்படியான ஒரு அழைப்பு அது.

ஆனாலும், தேவன் எல்லா இடத்திலும் வியாபித்திருக்கிறார் என்கிற உண்மை நம்முடைய தினசரி நடக்கையில் தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதை உணரத் தவறிவிடுகிறோம். நம்முடைய பிரதான ஆசாரியராகிய இயேசு, பரலோகத்தில் இருந்தாலும் இந்தப் பூமியில் நாம் அனுபவிக்கிற பெலவீனங்கள் மற்றும் சோதனைகளை அவர் புரிந்து கொள்கிறார் என்பதை நாம் உணர வேண்டும். நம்மைப் போலவே அவர் இந்த உலகத்தில் சோதிக்கப்பட்டார் (வசனம் 15 பார்க்க). எனவே நம்முடைய பிரதான ஆசாரியராகிய இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தில் உறுதியாயிருங்கள். அவர் நமக்கு மன்னிப்பையும், தேறுதலையும் மற்றும் நிச்சயத்தையும் தருவார்.

நம்முடைய விசுவாசம் என்கிற சத்தியத்தை மாற்றாமல் அல்லது குறைக்காமல் அப்படியே அறிக்கை செய்வதே நம்முடைய சவால். அதுவே நம்முடைய வாழ்வின் உறுதியான அடித்தளம் மற்றும் அது நம்மை தேவனுக்கு கீழ்ப்படியும்படி நடத்துகிறது (வசனம் 14 பார்க்க)

தைரியமாய் அவருடைய கிருபாசனத்தை நெருங்குங்கள். அவருடைய கிருபாசனத்தண்டைக்கு தைரியமாய் சேரும்படி நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். இங்கே தைரியம் என்று குறிப்பிடப்படுவதின் பொருள் விசுவாசமாகும் ஏனென்றால் விசுவாசமுள்ளவர் நிச்சயமாக தைரியத்தை உடையவராக இருப்பார். எபிரேயர் புத்தகத்தின் 11ம் அதிகாரம் முழுக்க, எப்படி விசுவாச வீரர்கள் கடினமான மற்றும் அசாத்தியமான சூழ்நிலைகளை சந்தித்து அதை விசுவாசத்தினால் ஜெயித்தார்கள் என்பதை அறியலாம். நீங்களும் நானும்கூட அதே காரியத்தை விசுவாசத்தினால் செய்ய முடியும். விசுவாசத்துடன் கிருபாசனத்தை நெருங்குங்கள், அங்கே நமது பிரதான ஆசாரியர் அமர்ந்திருக்கிறார் மற்றும் அங்கிருந்துதான் நாம் அசைவில்லாத விசுவாச வாழ்க்கை வாழ இரக்கத்தை பெற்றுக் கொள்கிறோம் (வசனம் 16 பார்க்க).

## இன்றைக்கான ஜெபம்:

>> ஆண்டவராகிய இயேசுவே, எங்களுடைய பிரதான ஆசாரியராகிய உமக்கு முன்பாக நாங்கள் உண்மையுள்ளவர்களாக வாழ எங்களுக்கு போதித்தருளும். நாங்கள் மனந்திரும்பி தேவனுடைய சிங்காசனத்துக்கு முன்பாக வருகிற வேளையிலே, பரிசுத்த ஆவியானவர் எங்கள் விசுவாசத்தை பெலப்படுத்தும்படியாகவும் நாங்கள் உண்மையுள்ளவர்களாய் நிலைத்திருக்கவும் உதவும்படி ஜெபிக்கிறோம். உம்மிடம் பாதுகாப்பை காண்கிற எங்கள் மேல் உம்முடைய கிருபை பெருகுவதாக. ஆமென்

>> மலேசியா டிஜிட்டல் மயமாக்கல் மூலமாக எல்லாத் துறைகளிலும் டிஜிட்டல் மயத்தை கொண்டுவர முயற்சி எடுப்பதால், குறிப்பாக கல்வித் துறையிலே ஏற்படுத்தும் மாற்றத்துக்காக ஆகிற செலவுகளை குறைப்பதில் அரசாங்கம் திறம்பட செயல்படும்படியாக ஜெபியுங்கள்.

>> இந்த டிஜிட்டல் யுகத்திலே, சுவிசேஷத்தை திறம்பட அறிவிப்பதற்காக மலேசிய சபைகள் தொழில்நுட்பத்தை அதிகபட்சம் பயன்படுத்திக் கொள்ளும்படி ஜெபியுங்கள்.

வேதப்பகுதி: எபி 5:1-7

# நாள் 19 ▪ *ஞாயிறு 25, ஆகஸ்ட் 2024*

# இயேசு கிறிஸ்து, மேன்மையான பிரதான ஆசாரியர்

இந்த வேதப்குதியானது பழைய ஏற்பாட்டில் பிரதான ஆசாரியனுடைய பணியை புரிந்து கொள்ளும்படியும் அதை புதிய ஏற்பாட்டின் நித்திய பிரதான ஆசாரியராகிய கிறிஸ்துவுடன் ஒப்பிடவும் நம்மை அழைக்கிறது. பிரதான ஆசாரியன் மனுஷருக்கும் தேவனுக்கும் இடையே மத்தியஸ்தராக செயல்பட்டார் மற்றும் அவர் மனுஷரால் தேர்ந்தெடுக்கப்பட்டவரும் பெலவீனங்கள் உடையவருமாயிருந்தார். மற்றொருபுறம், பூரண பிரதான ஆசாரியராகிய கிறிஸ்து தன்னைத்தான் உயர்த்தாமல் தேவனிடத்திலிருந்து இந்த பட்டத்தை பெற்றார்.

மனுஷரில் நியமிக்கப்படுகிற பிரதான ஆசாரியன் தன்னுடைய பாவத்தையும் மற்றவர்களுடைய பாவத்தையும் நிவர்த்தி செய்ய போதுமானவராக இல்லை, எனவே மேன்மையான ஒரு பிரதான ஆசாரியன் தேவைப்பட்டார். அந்தத் தேவையை பூர்த்தி செய்யக்கூடியவர் கிறிஸ்து. அவர் நம்முடைய பெலவீனங்களை புரிந்துகொள்வது மாத்திரமல்ல, தம்முடைய நீதியினாலும் சிலுவையின் மீது பெற்ற வெற்றியினாலும் மரணத்தை ஜெயித்தார்.

நித்திய பிரதான ஆசாரியராகிய கிறிஸ்துவின் பணியானது எப்படி நம்மில் ஆவிக்குரிய விதத்தில் தாக்கம் ஏற்படுத்தி நம்மை கிறிஸ்துவைப்போல் மாறச் செய்கிறது என்பதை நாம் ஆராய்வோம். நித்திய பிரதான ஆசாரியராகிய இயேசு நம்மை நாம் இரட்சித்துக்கொள்ள முடியாது என்பதற்கும், அவர் மூலமாக மாத்திரமே நாம் பாவத்திலிருந்தும் மரணத்திலிருந்தும் இரட்சிக்கப்படுகிறோம் என்பதற்கும் நினைப்பூட்டுதலாக இருக்கிறார். அசைவில்லாமல் நாம் நடக்கிறோம் என்பதினால் வாழ்வில் சவால்களும் பாடுகளும் இருக்காது என்பது அர்த்தமல்ல, மாறாக நம்முடைய அழுகையையும் ஜெபத்தையும் எப்பொழுதும் கேட்கிற இயேசு நம்முடைய பிரதான ஆசாரியராக இருக்கிறார் என்பதே அதன் பொருள் ( வசனம் 7 பார்க்க ). தேவனுடைய பிள்ளைகளாகிய நமக்கு பாவம் தொடமுடியாதபடி எதிர்ப்பு சக்தி கொடுக்கப்படவில்லை மாறாக பரிபூரண கிருபையினால் காக்கப்படுகிறோம். இந்த உலகத்தில் என்னால் தனித்து வாழ முடியாது என்பதை உணரும்போது, தேவனுடன் நெருங்கி வந்து அவருடைய பூரணத்தை அனுபவிக்கும்படி நாம் அழைக்கப்படுகிறோம்.

**இன்றைக்கான ஜெபம்:**

>> ஆண்டவராகிய இயேசுவே, எங்களுடைய பிரதான ஆசாரியராக ஆனதற்காக உமக்கு நன்றி. உம்மை இன்னும் ஏற்றுக்கொள்ளாதவர்களை உம் மூலமாக கிருபையின் இரட்சிப்பை அடையும்படி உம்மிடத்தில் ஒப்புக்கொடுக்கிறோம். எங்களுக்கும் குறிப்பாக அநேக ஊழியங்களை செய்கிறவர்களுக்கும் பெலத்தையும், ஆறுதலையும் அசைவில்லாத விசுவாசத்தையும் தருவீராக.

>> பெண்கள், குடும்பம் மற்றும் சமுதாய வளர்ச்சிக்கான அமைச்சகத்தின் மூலம் அளிக்கப்படுகிற உதவி மற்றும் நலத்திட்ட சேவைகள் சமுதாயத்தில் பாதிக்கப்பட்ட சமூகத்தினராகிய சிறுவர்கள், ஊனமுற்றோர், முதியோர்கள், ஆதரவற்றவர்கள், சமூகத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் இயற்கை பேரிடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் கிடைக்கும்படி ஜெபியுங்கள்.

>> பின்தங்கிய சமூகத்தினர் மத்தியில் ஊழியம் செய்கிற மலேசிய சபைகள் அவர்களுடைய சவால்களை மேற்கொள்ளுகிற அளவுக்கு, நன்கு தேர்ந்தவர்களாகவும், அந்த சமுதாயத்தினரை தன்னிறைவு அடைந்தவர்களாக மாற்றக்கூடியவர்களாகவும் ஜெபியுங்கள்.

வேதப்பகுதி: எபி 5:8-14

# நாள் 20 ▪ *திங்கள் 26, ஆகஸ்ட் 2024*

# கீழ்ப்படிதலை கற்றுக்கொள்ளுதல்

எபி 5:8ல் "கீழ்ப்படிதலை கற்றுக்கொண்டு" என்றிருப்பதினால் இயேசு தேவனுக்கு கீழ்ப்படிவதில் அல்லது இணங்குவதில் குறைவுபட்டிருந்தார் என்பது அர்த்தமல்ல. இந்த இடத்தில் கற்றுக்கொண்டு என்பது அதிகமாக இயேசுவினுடைய மனுஷீக அனுபவத்தையும் இரட்சகராக இந்தப் பூமியில் அவருடைய பாடுகளையும் குறிப்பிடுகிறது.

மாம்சத்தில் அவதரித்த தேவனாக இயேசு மனுஷ வாழ்க்கையை அதின் எல்லாப் பாடுகளோடும் அனுபவிப்பதை தேர்ந்தெடுத்தார். இந்த அனுபவங்கள் மூலமாக, மனித வாழ்க்கையின் எல்லாப் பகுதிகளையும் அவர் கடந்துபோனார். சோதனைகளையும் பாடுகளையும் மனிதர்களைப் போல அனுபவித்தார். இது அறிவையோ கீழ்ப்படிதலையோ கற்றுக்கொள்ளுகிற வழிமுறை அல்ல, மாறாக அவருடைய மனித அனுபவத்தின் ஒரு பகுதி இது.

இன்று நமக்கு எப்படி? அநேக வேளைகளில் பலவித சவால்கள், சோதனைகள் மற்றும் பாடுகள் நம்மை கீழ்ப்படியாதவர்களாகவும் உண்மையில்லாதவர்களாகவும் மாற்றி விடுகிறது. வார்த்தையின் உபதேசங்களுக்கும் தேவனுடைய சித்தத்துக்கும் நாம் கீழ்ப்படிய தவறுகிறோம். எனவே இந்த உலகத்தின் இச்சைகளின் நிமித்தம் நாம் தேவனுக்கு உண்மையில்லாதவர்களாக மாறிவிடுகிறோம். பலமான ஆகாரம் விசுவாசத்தில் முதிர்ச்சியுள்ளவர்களுக்கே என்று அதினால்தான் எபிரேயர் புத்தக ஆசிரியர் கூறுகிறார். ஆவிக்குரிய முதிர்ச்சியுள்ள ஒரு மனிதன்தான் தொடர்ந்து கீழ்ப்படிதலையும் உண்மையையும் கற்றுக்கொள்வார்.

இந்த 2024வரை எத்தனை வருடங்கள் நாம் கிறிஸ்தவர்களாக இருந்திருக்கிறோம் என்பதை எண்ணி ஆராய்வோம். நாம் ஆவிக்குரிய விதத்தில் உட்கொள்ளுவது பாலா அல்லது பலமான ஆகாரமா? காலத்தைப் பார்த்தால் நாம் இந்நேரம் போதகர்களாக அல்லது புதிய கிறிஸ்தவர்களுக்கு ஆவிக்குரிய உதாரணமாக இருந்திருக்க வேண்டும். ஆனாலும் வார்த்தைக்கும் தேவனுடைய சித்தத்துக்கும் நாம் கீழ்ப்படிதலையும் உண்மையையும் காண்பிக்க தவறும்போது, நாம் முதிர்ச்சியற்ற குழந்தைக் கிறிஸ்தவர்களாகவே இருப்போம். நம்முடைய வாழ்வின் அனுபவங்கள் மூலமாக நாம் எப்படி கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிதலில் தொடர்ந்து வளர முடியும் என்பதை நாம் சிந்திப்போம்.

போதிக்கிறதிலும் ஆவிக்குரிய போதகங்களை பெற்றுக்கொள்வதிலும் நம்முடைய பங்கை நாம் ஆராய்ந்து, நாம் எப்படி ஒருவரையொருவர் கட்டியெழுப்பி ஒருவரையொருவர் பெலப்படுத்தலாம் என்பதை மேலும் ஆராய்வோம்.

### இன்றைக்கான ஜெபம்:

>> ஆண்டவராகிய இயேசுவே, இன்றைக்கான உம்முடைய வார்த்தைக்காக நன்றி. கீழ்ப்படிதலில் நாங்கள் பெலமாய் வளரவும், பரிசுத்த ஆவியானவர் மூலமாக ஆழமான ஆவிக்குரிய சத்தியங்களை புரிந்து கொள்ளவும் உதவி செய்யும். இந்த வாஞ்சை விசுவாசிகளாகிய எங்களுடைய விசுவாசத்தில் முதிர்ச்சியடையவும் உம்முடனான நடக்கையில் அசைவில்லாமல் நடக்கவும் எங்களுக்கு உதவட்டும் என்று ஜெபிக்கிறோம். ஆமென்

>> இயற்கை வளங்கள் மற்றும் நிலைத்தன்மை அமைச்சகமானது நம்முடைய சுற்றுச்சூழலை வளர்ச்சிப் பணிகள் மூலமாக பாதுகாக்க விரும்புவதால் அதின் பங்குதாரர்கள் மூலம் நல்ல உதவி கிடைக்கும்படி ஜெபியுங்கள்.

>> பூமியில் தேவனுடைய பிரதிநிதிகளாக சபையானது சரியான நெறிமுறை மதிப்புகளை வழங்க கற்றுக்கொள்ளவும் சுற்றுச்சூழலைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அதினால் தற்போதுள்ள மற்றும் எதிர்கால சந்ததியினர் சுற்றுச்சூழல் பாதுகாப்பை தினமும் கடைப்பிடிக்கும்படியும் ஜெபியுங்கள்.

## நாள் 21-25

# அசைவில்லாத நம்பிக்கை

எபிரெயர் 6 & 7

# நாள் 21 ▪ *செவ்வாய் 27, ஆகஸ்ட் 2024*

# இயேசுவில் வளரும்படியான நம்பிக்கை

"ஆகையால், கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லிய மூல உபதேச வசனங்களை நாம்விட்டு, செத்த கிரியைகளுக்கு நீங்கலாகும் மனந்திரும்புதல், தேவன்பேரில் வைக்கும் விசுவாசம், ஸ்நானங்களுக்கடுத்த உபதேசம், கைகளை வைக்குதல், மரித்தோரின் உயிர்த்தெழுதல், நித்திய நியாயத்தீர்ப்பு என்பவைகளாகிய அஸ்திபாரத்தை மறுபடியும் போடாமல், பூரணராகும்படி கடந்துபோவோமாக. தேவனுக்குச் சித்தமானால் இப்படியே செய்வோம்." (எபி 6:1-3).

அநேக விசுவாசிகள் அடிப்படை உபதேசங்களிலேயே இருப்பதால் கிறிஸ்துவுக்குள் வளர்வதில்லை. உண்மையில் நாம் கற்றுக்கொள்வதற்கு அநேக காரியங்களுண்டு, மற்றும் அந்த வழிமுறையில் வளர அநேக நாட்கள் செல்லும். இயேசுவை நாம் ஆழமாக அறிவதன் மூலமாகவே நாம் மகிமையின் மேல் மகிமையடைய முடியும் மற்றும் வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை வாழ முடியும்.

தேவன் நமக்குத் துணையாளராக பரிசுத்த ஆவியானவரை கொடுத்துள்ளார். நமக்குப் போதிப்பதும், வெளிப்பாடுகளைத் தருவதும், வழி நடத்துவதும் மற்றும் பாவத்தை உணர்த்துவதும்கூட பரிசுத்த ஆவியானவரின் கிரியைகளாகும். ஆவியில் நாம் வளரும்போது கர்த்தருக்குரியது எது என்றும் அல்லாதது எது என்று அறிவோம். நம்மை மேலான உயரங்களுக்கு கொண்டு செல்ல பரிசுத்த ஆவியானவரால் ஆகும் மற்றும் அவருடைய வரங்களாகிய பகுத்தறிதல், ஞானம் மற்றும் புத்தியின் மூலம் நாம் அஸ்திபார உபதேசங்களைக் கடந்து மேலான சத்தியங்களுக்குள் வளர முடியும்.

அவரே திராட்சச்செடி மற்றும் நாம் கொடிகள் என யோவான் 15:1-5ல் இயேசு சொல்லுகிறார். நம்முடைய கனி கொடுக்கிற தன்மை அவரில் நிலைத்திருப்பதை பொறுத்திருக்கிறது. அதிக கனி கொடுக்கும்படி அவர் நம்மை சுத்தம் பண்ணுகிறார். ஒரு இளம் மரமானது முதிர்ச்சியடைகிற வரை கனி கொடுக்க முடியாது.

யோவான் 14:12ல் இயேசு சொன்னார், "மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்". அவருக்குள் நாம் முதிர்ச்சியடைகிற வரைக்கும் பெரிய காரியங்களைச் செய்யவோ அவருடைய அழைப்பை நிறைவேற்றவோ முடியாது.

பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வாசம் பண்ணுவதன் மூலமாக நாம் முதிர்ச்சியடைந்தால், பாவத்தினால் நாம் விழுந்து போக மாட்டோம்.

### இன்றைக்கான ஜெபம்:

>> அன்புள்ள பரலோகப் பிதாவே, நீர் திராட்சத் தோட்டக்காரர், இயேசு திராட்சச்செடி மற்றும் நாங்கள் கொடிகள். கிறிஸ்துவுக்குள் எங்களுக்கு நீர் கொடுத்த வாழ்வு தரும் அனுபவங்களுக்காக உமக்கு நன்றி. நாங்கள் கிறிஸ்துவுக்குள் நிலைத்திருக்கையில் அவருடைய வார்த்தையும் ஆவியும் ஒவ்வொரு நாளும் எங்களை பெலப்படுத்தட்டும், அப்பொழுது நாங்கள் தொடர்ந்து வளர்ந்து செழித்து உமது நாம மகிமைக்காக பலன் தருவோம். இயேசுவின் நாமத்தில், ஆமென்!

>> உள்ளூர் அரசாங்க அமைச்சகத்தின் தலைமைத்துவத்தின் கீழ், நகர்ப்புற வீட்டு வசதி மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சனைகளான மக்கள் தொகை அடர்த்தி போன்றவை சரியாக கையாளப்பட்டு அதின் மூலம் நகர்ப்புறங்களில் நல்ல வாழ்க்கைத்தரம் உண்டாக வேண்டுமென்றும் ஜெபியுங்கள்.

>> நகர்ப்புற சபைகள் மற்றும் அவைகளின் சமுதாயங்களுக்கு இடையே நல்ல இணைப்பு கட்டியெழுப்பப்பட வேண்டுமென்று ஜெபியுங்கள். உள்ளூர் சபைகளானது ஜனங்களை சந்திக்கும் வேலையை செய்கிறபடியால் சமுதாயத்தோடு நல்ல இணைப்பில் இருக்கும்படியும் ஜெபியுங்கள்.

# நாள் 22 ▪ *புதன் 28, ஆகஸ்ட் 2024*

# இரட்சிப்போடு சுதந்தரபாகமும் சேர்ந்து வருகிறது

பிரிமானவர்களே, நாங்கள் இப்படிச் சொன்னாலும், நன்மையானவைகளும் இரட்சிப்புக்குரியவைகளுமான காரியங்கள் உங்களிடத்தில் உண்டாயிருக்கிறதென்று நம்பியிருக்கிறோம். ஏனென்றால், உங்கள் கிரியையையும், நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியுஞ்செய்ததினாலும் செய்து வருகிறதினாலும் தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்துவிடுகிறதற்குத் தேவன் அநீதியுள்ளவரல்லவே. நீங்கள் அசதியாயிராமல், வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களை விசுவாசத்தினாலும் நீடிய பொறுமையினாலும் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களைப் பின்பற்றுகிறவர்களாயிருந்து, உங்களுக்கு நம்பிக்கையின் பூரண நிச்சயமுண்டாகும்படி நீங்கள் யாவரும் முடிவுபரியந்தம் அப்படியே ஜாக்கிரதையைக் காண்பிக்கவேண்டுமென்று ஆசையாயிருக்கிறோம் (எபி 6:9-12).

கிறிஸ்து இயேசுவுக்குள்ளான இரட்சிப்பு தேவனுடனான நம்முடைய உறவை சரி செய்திருப்பதினால், அவரை நாம் இப்பொழுது அப்பா, பிதாவே என்றழைக்க முடியும், நாம் தேவனுடைய பிள்ளைகள் என்று ரோமர் 8:16 சொல்லுகிறது. வசனம் 17 சொல்லுகிறது, "நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே; கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்."

எபே 2:10 சொல்லுகிறது, "ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்". நாம் நற்கிரியைகள் செய்து அவர் நாமத்திற்காக பிரயாசப்படுவோம் ஏனென்றால் இரட்சிப்புக்குப் பின் இது தேவ திட்டத்தின் ஒரு பகுதியாயிருக்கிறது. தேவனை நேசிப்பதும் மற்றவர்களை நேசிப்பதும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான நமது புதிய இயல்புடன் சேர்ந்ததாயிருக்கிறது.

தேவன் நீதியுள்ளவராயிருக்கிறபடியால் நம்முடைய நற்கிரியைகள், அன்பு மற்றும் அவருடைய ராஜ்யத்திற்காக நாம் பட்ட பிரயாசங்களை நினைவுகூருகிறார். ஏற்ற காலத்தில் அவருடைய வாக்குதத்தங்களை நாம் சுதந்தரிக்கும்படி தொடர்ந்து நாம் பொறுமையுடன் காத்திருப்போம். நம்பிக்கையினாலே நாம் காத்திருக்கிறோம், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது. ரோமர் 5:5 சொல்லுகிறது, "மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்தஆவியினாலே தேவஅன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது".

## இன்றைக்கான ஜெபம்:

>> அன்புள்ள பரலோகப் பிதாவே, உம்முடைய குமாரனாகிய இயேசுவின் கிரியைகளோடு ஒப்பிடும்போது, எங்களுடைய கிரியைகள் ஒன்றுமில்லாதிருந்தும் அவைகளை நீர் நினைவில் வைத்திருப்பதற்காக நன்றி. நீர் எங்களை பெலப்படுத்தியுள்ளதால் நாங்கள் நற்கிரியைகள் செய்ய முடியும், மற்றும் உமக்கு கீழ்ப்படிகிறவர்களுக்கு நீர் ஆயத்தம் பண்ணியிருக்கிற ராஜ்யத்தை சுதந்தரிக்கிற நாளை நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம், பிதாவே ஆமென்!

>> இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தால் வாலிபர்களை உருவாக்கவும் விளையாட்டு கலாச்சாரத்தை உருவாக்கவும் ஏற்படுத்தப்பட்டிருக்கிற சீர்திருத்தங்கள் தொடர்ந்து முன்னேற்றப் பாதையில் செல்லவும் அன்பின் ஆவி, சிறப்புத்தன்மை மற்றும் ஒற்றுமை போன்றவை மலேசிய இளைஞர்கள் மத்தியில் வலுவாக கட்டியெழுப்பப்படும்படி ஜெபியுங்கள்.

>> நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களிலுள்ள சபைகள் வாலிபர் சமுதாயத்தை சந்திக்கும்போது அதில் புதுமையை கையாளும்படியும், அவர்கள் வாலிபர்களுக்காக ஏற்படுத்தும் நிகழ்ச்சிகள் அவர்களை கவரும்படி இருக்க வேண்டுமென்றும், அதே சமயம் இயேசுவுக்குள் சத்தியத்தில் நடத்த வேண்டுமென்றும் ஜெபியுங்கள்.

# நாள் 23 ▪ *வியாழன் 29, ஆகஸ்ட் 2024*

# தேவனுடைய அசைக்க முடியா வாக்குதத்தங்கள்

ஆபிரகாமுக்குத் தேவன் வாக்குத்தத்தம்பண்ணினபோது, ஆணையிடும்படி தம்மிலும் பெரியவர் ஒருவருமில்லாதபடியினாலே தமதுபேரிலே தானே ஆணையிட்டு: நிச்சயமாக நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன்னைப் பெருகவே பெருகப்பண்ணுவேன் என்றார். அந்தப்படியே, அவன் பொறுமையாய்க் காத்திருந்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெற்றான். (எபி 6:13-15)

தேவன் தம்முடைய இயல்பின்படி பொய்யுரையாதவர் மற்றும் தம்முடைய வார்த்தையில் உண்மையுள்ளவர். அவர் ஆபிரகாமை ஆசீர்வதிப்பதாகவும் அவனுடைய சந்ததியை பெருகப் பண்ணுவதாகவும் வாக்குப்பண்ணினார். தம்முடைய வாக்குறுதியை உறுதிப்படுத்தும்படி அவர் தம்மைப் பார்க்கிலும் பெரியவர் யாருமில்லாதபடியால் தன் பேரிலேயே ஆணையிட்டார். இந்த வாக்குறுதி முத்திரையிடப்பட்டது மற்றும் உத்தரவாதம் அளிக்கப்பட்டது. எனவே தேவன் எப்படியும் அதை நிறைவேற்றுவார். எண் 23:19-20 சொல்லுகிறது, "பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல; மனம்மாற அவர் ஒரு மனுபுத்திரனும் அல்ல; அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரா? அவர் வசனித்தும் நிறைவேற்றாதிருப்பாரா?. இதோ, ஆசீர்வதிக்கக் கட்டளைபெற்றேன்; அவர் ஆசீர்வதிக்கிறார், அதை நான் திருப்பக்கூடாது". தேவனுடைய ஆசீர்வாதங்கள் திருப்ப முடியாதவைகள், அதேபோல்தான் அவருடைய வாக்குதத்தங்களும்.

வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா முற்பிதாக்கள், இஸ்ரவேல் தேசம் மற்றும் தேவ மனுஷர்களுடைய வாழ்க்கையனைத்தும் தேவனுடைய வாக்குதத்தங்களை மையமாகக் கொண்டவை. தேவனுடைய அசைக்க முடியா வாக்குதத்தங்கள் அநேகருடைய வாழ்க்கையை மாற்றியுள்ளது மற்றும் அநேகருடைய வாழ்க்கையை நம்முடைய வாழ்க்கையையும் சேர்த்து மாற்றிக் கொண்டிருக்கிறது.

தினமும் அவருடைய முகத்தைத் தேடுகிற, அவருடைய குரலைக் கேட்கிற மற்றும் அவருடைய வார்த்தையை வாசிக்கிற நம் ஒவ்வொருவருக்கும் தேவனிடத்தில் அநேக வாக்குதத்தங்கள் உண்டு. எரே 29:11ல் தேவன் பாபிலோனுக்கு சிறைப்பட்டுப் போயிருந்த இஸ்ரவேலருக்கு தேவன் வாக்குப் பண்ணினார், அவர்கள் 70 வருடங்கள் காத்திருந்து பிறகு அதை நிறைவேறப் பெற்றார்கள்.

நமக்கு, நம்முடைய குடும்பங்களுக்கு மற்றும் சபைக்கு தேவன் கொடுத்த நம்பிக்கையின் வாக்குதத்தங்கள் அவருடைய நேரத்தில் நிறைவேறும். நாம் தனிப்பட்ட விதத்திலோ, குழுவாகவோ வாக்குதத்தங்களை பற்றிக் கொள்வோம், "உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார்" (1 தெச 5:24).

## இன்றைக்கான ஜெபம்:

>> அன்புள்ள பரலோகப் பிதாவே, கிறிஸ்து இயேசுவுக்குள் உம்முடைய நல்ல வாக்குதத்தங்களுக்காக நன்றி செலுத்துகிறோம். நமக்கு நம்பிக்கையும் எதிர்காலமும் உண்டு என்கிற நம்பிக்கையும் மற்றும் இந்த வாழ்க்கையில் எல்லாத் தடைகளின் மத்தியிலும் நாம் முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாக இருக்கிறோம். உம்முடைய தவறாத வாக்குதத்தங்களை நம்புகிறோம். இயேசுவின் நாமத்தில், ஆமென்

>> பிரதம மந்திரியின் அமைச்சகத்தின் கீழ் உள்ள சட்ட விவகாரப் பிரிவு தனது மூன்று முக்கிய நோக்கங்களாகிய அநேக மக்களை திவால் நிலையிலிருந்து வெளியே கொண்டுவருதல், சட்ட உதவி சேவைகளை பெலப்படுத்துதல் மற்றும் பணமோசடி செய்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றை அடைய ஜெபியுங்கள்.

>> கிறிஸ்தவ வழக்கறிஞர்கள் மற்றும் சட்ட ஊழியர்கள் ஏழைகளுக்காகவும் அப்பாவிகளுக்காகவும் வாதாடும்போது தேசத்தின் சட்டங்களையும் வேதாகமத்தின் ஆவிக்குரிய சட்டங்களையும் காத்து நடக்கவும் தேவனுடைய நீதியையும் சட்டங்களையும் பூமியல் செயல்படுத்தவும் ஜெபியுங்கள்

# நாள் 24 ▪ *வெள்ளி 30, ஆகஸ்ட் 2024*

# கிறிஸ்துவின் மேல் நங்கூரமிடப்பட்டது

அந்த நம்பிக்கை நமக்கு நிலையும் உறுதியும் திரைக்குள்ளாகப் போகிறதுமான ஆத்தும நங்கூரமாயிருக்கிறது. நமக்கு முன்னோடினவராகிய இயேசு மெல்கிசேதேக்கின் முறைமையின்படி நித்திய பிரதான ஆசாரியராய் நமக்காக அந்தத் திரைக்குள் பிரவேசித்திருக்கிறார். (எபி 6:19-20)

இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள நம் நம்பிக்கை நிலையானதும் உறுதியானதுமாயிருக்கிறது என தேவனுடைய வார்த்தை நமக்கு சொல்லுகிறது. நம்முடைய ஆத்தும நங்கூரம் அதுதான். தேவனுடைய இயல்பு ஒரு போதும் மாறாது மற்றும் அவருடைய வாக்குதத்தங்கள் மாறாதவைகள் என்கிற நம்பிக்கையின் அஸ்திபாரத்தின் மேல் இது கட்டப்பட்டுள்ளது.

வாழ்க்கையின் சூறாவளிகள், சோதனைகள் மற்றும் எதிர்பாராத நிகழ்வுகள் நம்முடைய ஆத்துமாக்களை கிறிஸ்துவை விட்டும் அவருடைய திட்டங்களை விட்டும் நாம் வழி விலகுவதற்கு நம்மை ஏவலாம். 1 தெச 5:23ல், பவுல் தனது நிருபத்தில் இப்படி எழுதுகிறார், "உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக". சங் 23:3 சொல்லுகிறது, "அவர் என் ஆத்துமாவைத் தேற்றி, தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார்". நம்முடைய ஆத்துமாக்கள் எப்பொழுதும் கிறிஸ்து இயேசுவின் மேலுள்ள நம்பிக்கையின் மேல் நங்கூரமிடப்பட்டிருக்க வேண்டும், அப்பொழுது நாம் வீழ்ந்து போக மாட்டோம். எப்படி ஒரு கப்பலின் நங்கூரம் அது அசையாதபடி பாதுகாக்கிறதோ, அதே போல நம்முடைய ஆத்துமாக்களும் அவர்மேல் உறுதியாக நங்கூரமிடப்பட வேண்டும். நம்முடைய பெலம் அவரிடத்திலிருந்து வருமானால் வாழ்க்கையின் சூறாவளிகள் நம்மைத் தாக்கினாலும் நாம் சமாதானமாக இருக்க முடியும்.

மெல்கிசேதேக்கின் முறைமையின் படியான பிரதான ஆசாரியராக இயேசு நமக்காக மகா பரிசுத்த ஸ்தலத்தில் நுழைந்து பாவப் பரிகாரம் செய்தபடியால் இயேசுவின் மேல் வைக்கும் நம்பிக்கை உறுதியானதும் பாதுகாப்பானதுமாகும்.

நம்முடைய ஆத்துமாக்கள் இயேசு கிறிஸ்துவின் மேல் உறுதியாக நங்கூரமிடப்பட்டுள்ளதா என்பதை நாம் இன்றைக்கு ஆராய்ந்து பார்ப்போம்.

நீங்கள் ஒருவேளை வாழ்க்கையின் பிரச்சனைகளால் விரக்தியாயிருப்பீர்கள் என்றால் மனந்தளராதீர்கள். உங்கள் ஆவி, ஆத்துமா சரீரத்தை நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மேல் உள்ள நம்பிக்கையில் நிலைப்படுத்துங்கள்.

### இன்றைக்கான ஜெபம்:

>> அன்புள்ள பரலோகப் பிதாவே, இந்த உலகத்தில் எல்லாம் வேகமாக மாறிக் கொண்டிருந்தாலும், உம்முடைய குமாரானுடைய கிரியைகள் மற்றும் வாக்குதத்தத்தில் நாங்கள் பாதுகாப்பை உணர்கிறோம். ஜீவனைக் கொடுக்கிற இயேசு கிறிஸ்துவின் மேல், நம்முடைய வாழ்வின் நங்கூரம் இருந்தால் நாம் உறுதியாகவும் அசைவில்லாமலும் இருப்போம். எங்கள் விசுவாசத்தின் முன்னோடியாயிருக்கிற உம்முடைய குமாரனுக்காக நாங்கள் உம்மைத் துதிக்கிறோம் மற்றும் நன்றி செலுத்துகிறோம். அவருடைய விலையேறப்பெற்ற நாமத்தில், நாங்கள் நம்பிக்கையாயிருக்கிறோம். ஆமென்.

>> ஊதிய உயர்வுக் கொள்கையை செயல்படுத்துவதிலும், மலேசியர்களின் வேலைத்திறனை அதிகப்படுத்துவதிலும், வேலை வாய்ப்புகளை அதிகப்படுத்துவதிலும், தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார நலன்களை மேம்படுத்துவதிலும் மனித வள அமைச்சகம் தனது பங்கை சிறப்பாக நிறைவேற்ற வேண்டுமென்று ஜெபியுங்கள்.

>> மலேசிய சபைகள் தங்கள் மனித வளங்களை நிர்வகிப்பதில் உண்மையோடும் திறமையோடும் இருக்கும்படி ஜெபியுங்கள். ஐந்து வகையான ஊழியங்களும் வரங்களும் முழுமையாக செயல்படுத்தப்பட ஜெபியுங்கள் அப்பொழுது தேவ ஜனங்கள் விசுவாசத்திலும் தேவனுக்கான நற்கிரியைகளிலும் கட்டியெழுப்பப்படுவார்கள்.

# நாள் 25 ▪ *சனி 31, ஆகஸ்ட் 2024*

# நித்திய பிரதான ஆசாரியரின் மன்றாடுதல்

அன்றியும், அவர்கள் மரணத்தினிமித்தம் நிலைத்திருக்கக்கூடாதவர்களானபடியால், ஆசாரியராக்கப்படுகிறவர்கள் அநேகராயிருக்கிறார்கள். இவரோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறபடியினாலே, மாறிப்போகாத ஆசாரியத்துவமுள்ளவராயிருக்கிறார். மேலும், தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல்செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார். (எபி 7:23-25)

எபிரேயர் 7ம் அதிகாரம் முழுக்க இயேசுவின் ஆசாரியத்துவத்தை ஆரோனின் முறைமையின்படியல்லாமல் மெல்கிசேதேக்கின் முறைமையின்படியானது என்று பேசுகிறது. இது அவரை அனுப்பின பிதாவாகிய தேவனின் வாக்குறுதி; ஆசாரியர்கள் ஜனங்களுக்கும் தேவனுக்கும் நடுவான பாலமாக செயல்படுகிறவர்கள், ஆனால் ஒரு பூமிக்குரிய ஆசாரியன் மரிக்கும்போது தனக்காகவும் ஜனங்களுக்காகவும் மிருகங்கள் பலி செலுத்தப்படுவது நிறுத்தப்படுகிறது (23-24 வசனங்கள் பார்க்க). மற்றொருபுறம் இயேசுவோ, எல்லா மனுஷர்களுடைய பாவங்களுக்காகவும், ஒரேயொருமுறை தன்னை பலியாக ஒப்புக்கொடுக்க வேண்டியிருந்தது. அவர் மரித்தார் மற்றும் சதாகாலமும் பிரதான ஆசாரியராக வாழும்படி மீண்டும் உயிர்த்தார். நாம் அவர் மூலமாய் தேவனிடத்துக்கு வந்தால்தான் பாவமன்னிப்புக்கான நிச்சயம் நமக்கு இருக்கும். (யோவான் 14:6 பார்க்க).

விசுவாசிகளாகிய நாம் போதகர்கள், ஜெபக்குழு தலைவர்கள் மற்றும் நண்பர்களிடத்திலிருந்து நம்முடைய எல்லாத் தேவைகளுக்காகவும், ஆரோக்கியத்துக்காகவும், உறவுகளுக்காகவும் மற்றும் அநேக சூழ்நிலைகளுக்காகவும் ஜெபங்களை எதிர்பார்க்கலாம். ஆனால் நம்முடைய சதாகாலமும் ஜீவிக்கிற பிரதான ஆசாரியராகிய இயேசு தொடர்ச்சியாக நம்மை இரட்சிக்கிறார் மற்றும் நமக்காக மன்றாடுகிறார் என்பதை மறந்து விடுகிறோம். யோவான் 17ம் அதிகாரத்தில் இயேசு தம்முடைய சீஷர்களுக்காக ஜெபித்தார் மற்றும் வசனம் 20ல், இன்றைக்கு அவரிடத்தில் வருகிற நம் எல்லாருக்காகவும் ஜெபித்தார்.

நமக்கு நியமிக்கப்பட்டிருக்கிற ஓட்டத்தை நாம் நன்றாக ஓடி முடிக்கும்படியாக, அவரால் மீட்கப்பட்டவர்களாகிய நமக்காக அவர் தொடர்ந்து ஜெபித்துக் கொண்டிருக்கிறார். அவருடைய ஜெபத்தில் நாம் தொடர்ந்து நினைவுகூரப்படுகிறோம் என்பதினால் ஆறுதலடைவோம். சங் 121:3 சொல்லுகிறது, உங்களைக் காக்கிற தேவன் உறங்குவதுமில்லை, தூங்குகிறதுமில்லை. உங்களுடைய சூழ்நிலைகளைப் பார்க்காதீர்கள், அதற்கு பதிலாக பிதாவாகிய தேவனின் வலது பாரிசத்தில் இருக்கிற இயேசு நமக்காக எப்பொழுதும் மன்றாடிக் கொண்டிருக்கிறார் (ரோமர் 8:14 பார்க்க).

### இன்றைக்கான ஜெபம்:

>> அன்புள்ள பரலோகப் பிதாவே, பரிசுத்த ஆவியானவரின் பெலத்தினாலே எங்களுடைய வாழ்வை செறிவூட்டுவீராக. எங்களுடைய பெலவீனங்களுக்காக பரிந்து பேசுகிற அவர் மேல் எங்களுடைய விசுவாசம் என்கிற நங்கூரத்தை வைக்கும்போது, கிறிஸ்து இயேசுவுக்குள் எங்களுக்குள்ள சந்தோஷம், சமாதானம் மற்றும் அன்பை ஒருவரும் கொள்ளையிட முடியாது. இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம். ஆமென்.

>> உயர் கல்வி அமைச்சகம் பொது மக்களின் அபிப்ராயங்கள் மற்றும் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளவும், உயர்கல்வியை தரமாகக் கொடுப்பதிலும் அதை நிலைப்படுத்துவதிலும் ஏற்படுத்த முயற்சி எடுக்கும்போது ஞானத்துடனும் அறிவுடனும் செயல்படும்படி ஜெபியுங்கள்.

>> உயர் கல்வித் துறையில் சபைகளும் கிறிஸ்தவர்களும் அதிக ஈடுபாடு கொள்ளும்படி ஜெபியுங்கள். விசுவாசத்தின் அடிப்படையில் வாழ்கிற சிறந்த கல்வியாளர்களை தேவன் எழுப்பும்படியும், அவர்கள் கல்வித்துறையில் சத்தியத்தின்படி வாழவும் ஜெபியுங்கள்.

## நாள் 26-30

# அசைவில்லாத அன்பு

எபிரெயர் 8 & 9

# நாள் 26 ▪ *ஞாயிறு 01, செப்டம்பர் 2024*

# சிறந்த பிரதான ஆசாரியர்

யூத மதப் பாரம்பரியத்தில், பிரதான ஆசாரியரே (எபிரேயத்தில் கொஹேன் கடோல்) ஜனங்களுக்கும் தேவனுக்கும் நடுவாக மத்தியஸ்தராயிருக்க பொறுப்பை பெற்றவர். இந்த நபர் எருசலேம் தேவாலயத்தின் மகா பரிசுத்த ஸ்தலத்துக்குள் நுழைந்து வருஷந்தோறும் செலுத்தப்படுகிற பலி செலுத்தும் நிகழ்வை தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே செயல்படுத்துகிறவர்.

இயேசு ஒரு புதிய ஒளியை ஜனங்களுக்கு கொண்டு வந்தார். அவருடைய ஆசாரியத்துவம் லேவியருடைய ஆசாரியத்துவத்திலும் வித்தியாசமானது. தேவனுடைய சட்டத்தின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்ய தன்னை ஒரு பரிசுத்தமான மற்றும் பழுதற்ற பலியாக ஒரே ஒரு முறை ஒப்புக்கொடுக்க வேண்டியிருந்தது ( எபி 7:26-27 ). தொடர்ந்து பலி செலுத்துகிற லேவியரின் முறைமையிலான ஆசாரியரரைப் போல அல்லாமல், இயேசு ஒரே தரம் தம்மை பலியாக்கி தம்மூலமாக தேவனிடத்தில் வருகிற எவருக்கும் நித்திய மீட்பை உண்டாக்கினார். அவர் ஆட்டுக்கடா அல்லது காளையின் இரத்தத்தையல்ல, தம்முடைய இரத்தத்தை கொண்டு வந்தார் (எபி 9:12 பார்க்க).

இயேசு மற்ற ஆசாரியர்களைக் காட்டிலும் பெரியவரானபடியால், அவர் மகா பிரதான ஆசாரியர் என அழைக்கப்படுகிறார் (எபி 4:14). நம்முடைய பெலவீனங்களைக் குறித்து பரிதபிக்கிற பரலோகத்திலிருந்து வந்த மகா பிரதான ஆசாரியர் இவர். அவர் நம்மைப் போல எல்லா விதத்திலும் சோதிக்கப்பட்டும் பாவம் செய்யவில்லை (எபி 4:14-15 பார்க்க). நாம் இரக்கத்தைப் பெறவும் ஏற்ற சமயத்தில் சகாயம் செய்யும் கிருபையை அடையவும் அவர் நமக்கு தைரியத்தைத் தருகிறார் (எபி 4:16 பார்க்க). இதுவே அவரது மாபெரும் அன்பு, அவரை விசுவாசிக்கிற அனைவர் மேலும் உள்ள அசையாத அன்பு!

**இன்றைக்கான ஜெபம்:**

>> பரலோகப் பிதாவே, எங்களுடைய பெலவீனங்களை ஆழமாகப் புரிந்துகொள்கிற எங்களுடைய பிரதான ஆசாரியர் இயேசுவுக்காக நன்றி சொல்லுகிறோம். உம்முடைய அசையாத அன்பினாலே, எங்கள் பெலவீனங்கள் மத்தியில் அதிலிருந்து தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவீர் என நாங்கள் நம்புகிறோம். உம்முடைய வார்த்தையினால் ஒவ்வொரு முறையும் எங்களை பெலப்படுத்தும் மற்றும் நாங்கள் பாதிக்கப்படுகிற வேளையிலே உம்முடைய ஆவியினால் பெலப்படுத்தும். இயேசுவின் நாமத்தில், ஆமென்.

>> பிரதம மந்திரியின் துறையின் கீழ் உள்ள மத விவகாரங்களுக்கான துறைகள் மற்றும் நிறுவனங்கள் மிதமான மற்றும் சமநிலையான அணுகுமுறையுடன் பொதுமக்களிடையே மதங்களைப் பற்றிய சிறப்பான புரிந்துகொள்ளுதலை வளர்க்க ஜெபியுங்கள்.

>> மலேசிய சபைகளின் வாழ்க்கை மற்றும் நடைமுறைகள் மதவாதத்துக்குள் விழுந்துவிடக்கூடாது என்றும் நாம் துடிப்பான ஆராதனை செய்து ஆவியில் நிறைந்து வாழ்கிற வாழ்க்கை வாழும்படியும் ஜெபியுங்கள்.

# நாள் 27 ▪ *திங்கள் 02, செப்டம்பர் 2024*

# ஒரே மத்தியஸ்தர்

இயேசு "ஒரே மத்தியஸ்தர்" என குறிப்பிடப்படுகிறார், இது கிரேக்க வார்த்தையாகிய "மீசைட்ஸ்" (எபி 8:6, 9:15) என்ற வார்த்தையிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது. மாம்சத்தில் அவதரித்த இயேசு கிறிஸ்து தேவனுக்கும் மனுஷருக்கும் இடையே ஒரே மத்தியஸ்தராக செயல்படுகிறார்.

இயேசுவை நேசிப்பதென்பது அவருடைய பிதாவை நேசிப்பதாகும், ஏனென்றால் அவரும் பிதாவும் ஒன்றாயிருக்கிறார்கள் (யோவான் 10:30 பார்க்க). அவருடைய அன்புக்கு மாறுத்தரமாக, அவருக்கு நாம் கீழ்ப்படிய கடனாளிகளாயிருக்கிறோம். "நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்" (யோவான் 14:15). அவருடைய சித்தத்தை அன்பு, தாழ்மை மற்றும் ஞானத்துடன் செய்து முடிக்க நமக்கு சமாதானம், சந்தோஷம் பெலன் உண்டாகும்படி நாம் எப்பொழுதும் அவருடைய பிதாவை நோக்கி ஜெபம் பண்ண வேண்டுமென்றும் மற்றும் அவர் மூலமாக நாம் கட்டளைகளுக்கு கீழ்ப்படிய வேண்டுமென்றும் இயேசு விரும்புகிறார்.

மலேசிய காவல் துறையின் குற்றப் புலனாய்வுத் துறை கடந்த ஜனவரி 2023 முதல் செப்டம்பர் 2023 வரை இணையவழி குற்ற வழக்குகள் 23 சதவீதம் கடந்த 2022ம் ஆண்டை விட அதிகரித்துள்ளது என தெரிவித்துள்ளனர். இதில் பாதிக்கப்பட்டவர்கள் வயதானவர்களும் பணி ஓய்வு பெற்றவர்களும் மாத்திரமல்ல, விரிவுரையாளர்களும், ஆசிரியர்களும், பொறியாளர்களும் மற்றும் மருத்துவர்களும் கூட. இந்த ஏய்ப்பு குற்றங்களால் தேசத்திற்கு பொருளாதார நஷ்டம் மாத்திரமல்ல, பாதிக்கப்பட்டவர்களுக்கு மன அழுத்தங்களும் ஒட்டுமொத்த ஆரோக்கிய குறைவும் ஏற்படுகிறது.

விழுந்து போன இவ்வுலகில் அதிகரிக்கும் குற்றங்கள் மற்றும் ஏய்ப்புகள் நிமித்தம், ஜனங்கள் ஒருவர் மேல் ஒருவர் நம்பிக்கை இழக்கிறார்கள் மற்றும் மனநல பிரச்சனைகள் இன்றைக்கு சபையால் கையாள வேண்டிய ஒரு முக்கிய பிரச்சனையாக உள்ளது. ஆனாலும் அதை மேற்கொள்ள நமக்கு விசுவாசம் உண்டு, ஏனெனில் இயேசு ஒருமுறை சொன்னார், "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்" (யோவான் 14:6). அவர் தலையிடுவதன் மூலமாக எந்த பிரச்சனையானாலும் சரியாகி விடும். நாம் சந்திக்கிறது எவ்வளவு தீவிரமான புயலாக இருந்தாலும், அதை மேற்கொள்ளுவதற்கு தேவன் நமக்கு வல்லமையையும் பெலத்தையும் தருவார் (சங் 68:35 பார்க்க).

**இன்றைக்கான ஜெபம்:**

>> ஆண்டவராகிய இயேசுவே, எங்கள் உபத்திரவ காலத்திலே நீர் எங்கள் உண்மையுள்ள மத்தியஸ்தராக இருக்கிறபடியால் உமக்கு நன்றி. எங்களுடைய சூழ்நிலைகளை நாங்கள் கையாள எங்களுக்கு ஞானத்தை அருளுவீராக. எங்கள் இருதயத்தை பேராசைக்கும் எங்கள் சிந்தைகளை வஞ்சகத்துக்கும் விலக்கிக் காத்தருளும். இயேசுவின் நாமத்தில். ஆமென்

>> தொழில் முனைவோர் மற்றும் கூட்டுறவு மேம்பாட்டு அமைச்சகம் (**MECD**) மலேசியாவை ஒரு சிறந்த தொழில் முனைவோர் நாடாக மாற்ற முயலுவதால், ஒருங்கிணைந்த, செழிப்பான மற்றும் கண்ணியமான சூழ்நிலையை உருவாக்க அவர்களுக்கு வழிகளும், திறன்களும், ஞானமும் மற்றும் அறிவும் உண்டாகும்படி ஜெபியுங்கள்.

>> சந்தை வெளிகளில் ஊழியங்களை விரிவாக்க சபை தொடர்ந்து முயலுவதால், சபையானது தொழில் முனைவோர் மனப்பான்மையை கொண்டிருக்க வேண்டுமென்று ஜெபியுங்கள். நமக்கு கொடுக்கப்பட்ட வரங்களையும் அறிவையும் நன்றாக பயன்படுத்திக் கொள்ளுகிற ஜனங்களாக நாம் இருக்கும்படியும், நமக்கு கொடுக்கப்பட்ட வளங்களை அவருடைய மகிமைக்காக பெருக்கிக்கொள்ளும்படி ஜெபியுங்கள்.

# நாள் 28 ▪ *செவ்வாய் 03, செப்டம்பர் 2024*

## ஜீவ பலி

சிலுவையில் இயேசுவின் மரணம் ஒரு கிறிஸ்தவரின் வாழ்க்கையில் பலியிடுதல் என்பதற்கான மெய்யான அர்த்தத்தை தருகிறது. அவருடைய சீஷர்களைப் போலவே, பலியிடுதல் என்பது தேவன் கட்டளையிட்டதை செய்வதாகும், அது நேரத்தையோ, பணத்தையோ அல்லது அவருடைய வேலைக்கான பிரயாசங்களையோ கொடுப்பது. "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்"(மத் 6:33) என்று கர்த்தர் கட்டளையிடுகிறார். தியாகம் செய்வதற்கான நம்முடைய விருப்பமே அவருக்கு நாம் அர்ப்பணித்திருக்கிறோம் என்பதின் அடையாளம்.

இயேசுவின் அன்பே மெய்யான தியாகத்தின் அடிப்படை. இயேசு தம்முடைய ஜீவனைக் கொடுத்து தமது அன்பை வெளிப்படுத்தினார். மற்றவர்களுடைய பிரயோஜனத்திற்காக, மனப்பூர்வமாகவும் நிபந்தனையில்லாமலும் வெளிப்பட்ட இதுவே மெய்யான அன்பு. இது இயேசுவின் கட்டளை. அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்ததுபோல நாமும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென கட்டளையிட்டிருக்கிறார் (யோவான் 13:34-35). அன்பு என்பது வெறும் உணர்வு அல்ல, மற்றவர்கள் மேல் அன்பை வெளிப்படுத்துவதற்கான தீர்மானம்.

நம்மை தேவனுக்கு ஜீவ பலியாக ஒப்புக்கொடுப்பது எப்படி? (ரோமர் 12:1 பார்க்க). கிறிஸ்துவின் அன்பை வாழ்க்கையில் வெளிப்படுத்துவதன் மூலமாக இருளின் மத்தியிலே நாம் வெளிச்சத்தின் பிள்ளைகளாக இருப்போம். ஒவ்வொரு நாளும் மற்றவர்களுக்கு சேவை செய்யவும் வசனத்தை விதைக்கவும் நமக்கு வாய்ப்புள்ளது. சபையானது தனது சௌகரியத்தின் எல்லையை விட்டு எழும்பி தேவையுள்ளவர்களை சந்திப்பது முக்கியம்.

பலதரப்பட்ட கலாச்சாரத்தை உடைய தேசமாகிய நாம், சமாதானப் பிரபுவாகிய இயேசுவைப் போல, நம்முடைய தேசத்தின் ஐக்கியத்தையும் ஒற்றுமையையும் பாதுகாக்க ஜெபிக்க வேண்டும் (ஏசா 9:5 பார்க்க). தேவ ஜனங்களாகிய நாமும் சோதிக்கப்பட்டு, அடிக்கப்பட்டு வெறுக்கப்படுகிறபடியால் நாம் மற்றவர்கள் மேல் கசப்பு, மூர்க்கம் மற்றும் கோபத்தை விட்டொழிக்க வேண்டும் (எபே 4:31-32 பார்க்க).

### இன்றைக்கான ஜெபம்:

>> பரலோகப் பிதாவே, ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க விரும்புகிற இருதயங்கள் எங்களுக்கு இருக்கும்படி போதித்தருளும். சுயத்தை வெறுத்து, மற்றவர்கள் மேல் தியாக அன்பு காணிபித்து, சத்துருக்களையும் நிநேகிக்கிற ஆவியோடுகூட நாங்கள் இயேசுவைப் பின்பற்ற ஜெபிக்கிறோம், அப்படிப்பட்ட அன்புதான் நீர் எங்கள் மேல் காண்பித்த அன்பு. இயேசுவின் நாமத்தில். ஆமென்.

>> தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சகம் மலேசியர்களிடையே ஒற்றுமை உணர்வை வளர்க்க பிரச்சாரங்களை நடத்தும்போது (உதாரணமாக அருகாமையிலுள்ள கண்காணிப்பு பகுதி, தேசியவாத உணர்வு, ஒற்றுமை உணர்வு மற்றும் கருணையுள்ள சமுதாயம் போன்றவை), நாம் அதற்கு நன்கு ஒத்துழைப்பு கொடுத்து, அப்படிக்கட்ட காரியங்களுக்கு தனிப்பட்ட வாழ்விலும் சமுதாயத்திலும் ஒத்துழைப்பு கொடுக்கும்படி ஜெபிப்போம்.

>> மலேசியாவில் உள்ள சபைகள் தேவனுடைய வார்த்தைக்கு செவிகொடுக்கும்படியும் சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமையை காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாக இருக்கும்படியும் ஜெபியுங்கள்.

# நாள் 29 ▪ *புதன் 04, செப்டம்பர் 2024*

# ஒரு புதிய உடன்படிக்கை

தேவன் பெரும்பாலும் தம்முடைய ஜனங்களுடனான உறவை ஒரு திருமணத்துக்கு ஒப்பிட்டுக் காண்பிக்கிறார். தேவன் இஸ்ரவேல் ஜனங்களோடு உறவை ஸ்தாபித்தபோது, அவர்கள் தனக்கு சொந்த சம்பத்தாக இருக்கும்படி விசேஷமாக தேர்ந்தெடுத்தார். இந்த உடன்படிக்கையின் அடிப்படையிலான உறவில் தேவன் தம்முடைய ஜனங்களை ஆசீர்வதிப்பதில் உண்மையாயிருப்பேன் என வாக்குபண்ணியிருந்தார். ஆனாலும் அவர்கள் அவரை விட்டு விலகினார்கள் மற்றும் தொடர்ந்து அவரை மறுதலித்தார்கள்.

எரேமியா புத்தகத்தின் மூன்றாம் அதிகாரத்தில் தேவன் தம்முடைய ஜனங்களை அவர்களுடைய உண்மையில்லா தன்மைக்காக விவாகரத்து செய்தார் என கூறப்பட்டுள்ளது. இங்கே தேவனுடைய அன்பு நிபந்தனையுள்ளது போல தோன்றலாம். அவருக்கு இஸ்ரவேலை விவாகரத்து செய்ய உரிமை இருந்தும் அது அவருடைய இறுதி முடிவாக இருக்கவில்லை. தேவன் இரக்கமுள்ளவராயிருந்தார். அவர்களை அவர் கைவிடவில்லை (ஏசாயா 49:15 பார்க்க). இங்கே ஒரு குழப்பம் இருந்தது. அதற்கான தேவனுடைய தீர்வுதான் மேன்மையான வாக்குத்தத்தங்களையுடைய மேன்மையான உடன்படிக்கை, அதாவது புதிய உடன்படிக்கை.

புதிய உடன்படிக்கையில் நான்கு வாக்குத்தத்தங்கள் உள்ளது. பெலப்படுத்துவதற்கான வாக்குத்தத்தம். தேவன் தம்முடைய பிரமாணங்களை அவர்களுடைய சிந்தையில் வைத்து அவர்களுடைய இருதயங்களில் எழுதினார் (எபி 8:10 பார்க்க). தேவனுடைனான உள்ளான மற்றும் தனிப்பட்ட உறவை ஏற்படுத்தும்படியாக ஒரு உள்ளான மறுரூபம் ஏற்பட்டிருக்க வேண்டும். இரண்டாவதாக அவர் நம்மை விட்டு விலக மாட்டார் என்கிற வாக்குத்தத்தம். மூன்றாவதாக அவரை நாம் தனிப்பட்ட விதத்தில் அறிந்துகொள்வோம் என்கிற வாக்குத்தத்தம். தேவன் நம்முடைய இருதயத்தில் கிரியை செய்து நமக்கு ஒரு புதிய இருதயத்தைக் கொடுத்தால், அவர் யார் என்பதை நாம் அறிந்துகொள்வோம். நான்காவதாக நம்முடைய பாவங்களை மன்னிப்பேன் என்கிற வாக்குத்தத்தம்.

இப்பொழுது நாம் கிறிஸ்துவுக்கு சொந்தம், அதினால் அவரது விலையேறப்பெற்ற அன்பை சாதாரணமாக எடுத்துக்கொள்ளக்கூடாது. இந்தப் புதிய உடன்படிக்கை நாம் ஆண்டவருக்கு அதிகமாக கீழ்ப்படியவும் பாவத்தை இன்னும் வெறுக்கவும் நம்மை நடத்த வேண்டும்.

### இன்றைக்கான ஜெபம்:

>> ஆண்டவராகிய இயேசுவே, உம்முடைய உடன்படிக்கையை உண்மையாய் கைக்கொள்ள எங்களுக்கு போதித்தருளும். உம்முடைய உடன்படிக்கையில் நாங்கள் பெலத்தையும், பாதுகாப்பையும், அன்பையும் மற்றும் இரட்சிப்பின் நிச்சயத்தையும் காண்கிறோம். நீர் எங்களுக்கு வாக்குபண்ணினதற்கு எதிராக சூழ்நிலை இருந்தாலும் உம்முடைய வாக்குத்தத்தங்களை உறுதியாக பற்றிக்கொள்ள எங்களுக்கு பெலன் உண்டாகும்படி விசுவாசத்தை எங்களுக்கு தந்து ஆசீர்வதியும். ஆமென்

>> போக்குவரத்து அமைச்சகமானது நகர்ப்புறங்களில் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்கும், உள்நாட்டுப் பகுதிகளில் போக்குவரத்து கட்டமைப்பை மேம்படுத்தவும் ஜெபியுங்கள்.

>> போக்குவரத்து வசதி இல்லாததால் சபைக்கோ சபை நிகழ்ச்சிகளுக்கோ வர முடியாத ஜனங்களுக்காக ஜெபியுங்கள். இந்தப் பிரச்சனையை மேற்கொள்ள சபைகளுக்கு போதுமான அளவு மனிதவளமும் வளங்களும் இருக்கும்படி ஜெபியுங்கள்.

# நாள் 30 ▪ *செவ்வாய் 03, செப்டம்பர் 2024*

# மெய்யான கூடாரம்

இயேசு கிறிஸ்துவே மெய்யான மற்றும் பூரணமான கூடாரமாயிருக்கிறார் (எபி 9:11 பார்க்க). ஆசரிப்புக் கூடாரத்திலுள்ள அநேக அடையாளங்கள் இயேசு கிறிஸ்துவைப் பற்றிய பழைய ஏற்பாட்டிலுள்ள தீர்க்கதரிசனங்கள் மற்றும் வாக்குதத்தங்களிலிருந்து வருவிக்கப்பட்டது. பழைய ஏற்பாட்டில் ஆசரிப்புக் கூடாரம் இஸ்ரவேல் ஜனங்கள் மத்தியில் தேவனுடைய பிரசன்னத்துக்கு அடையாளமாயிருக்கிறது, ஆனால் புதிய ஏற்பாட்டிலோ, நம்மோடுகூட கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இருக்கிறதற்கு அடையாளமாக இருக்கிறது (மத் 1:23).

ஆசரிப்புக் கூடாரத்தில் கிழக்குப் பகுதியில் தேவனுடைய பிரசன்னத்துக்குள் நுழையும்படியான ஒரேயொரு வாசல் உள்ளது. இது கிறிஸ்து ஒருவரே இரட்சிப்பை அடைவதற்கான வழி என்பதின் அடையாளம். "நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான்" (யோவான் 10:9)

நாம் ஆசரிப்புக்கூடாரத்தைப் பற்றிப் பேசும்போது பரிசுத்தத்தைப் பற்றியும் பேசுகிறோம். அவர் பரிசுத்தராயிருக்கிறதாலே நாமும் பரிசுத்தமாயிருக்க வேண்டுமென்று தேவன் கட்டளையிட்டிருக்கிறார் (1 பேதுரு 1:15-16 பார்க்க). கிரேக்க மொழியில் ஹேகியோஸ் என்று குறிப்பிடப்படுகிற பரிசுத்தம் என்ற வார்த்தைக்கு பிரித்தெடுக்கப்படுதல் என்று அர்த்தம். பாவத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு தேவனுக்காக சுத்திகரிக்கப்படுதல். இது தேவனோடுகூட நிற்பதற்கான தரமும் அவருக்கு ஊழியம் செய்வதற்குமான தகுதியையும் முக்கியத்துப்படுத்துகிறது. தேவனுடைய பிள்ளைகளாக, நம்முடைய வாழ்வில் பரிசுத்தத்தை பயிற்சி செய்து தேவனுடைய பரிசுத்தத்திற்கு மாறுத்தரம் செய்ய வேண்டும். அவருடன் நெருக்கமான உறவை காத்துக்கொண்டு, அவருக்குப் பயந்து அவருக்கு கனத்தை செலுத்த வேண்டும் (எபி 12:28 பார்க்க).

தேவனுடைய வார்த்தையை படிப்பதற்கு நேரம் செலவிட வேண்டும். ஜீவ வார்த்தையானது உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியை படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாக இருக்கிறது (2 தீமோ 3:16-17). நம்முடைய மனதை புதிதாக்கிக் கொள்ளுவதினாலே நாம் தேவனுடைய சித்தத்தை அறிய முடியும்: "தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம்" (ரோமர்12:2). பரிசுத்த ஆவியானவரின் பெலப்படுத்துதல் இல்லாமல் நம்மால் சுயமாக பரிசுத்தத்தில் வாழ முடியாது.

## இன்றைக்கான ஜெபம்:

>> எங்கள் ஆண்டவராகிய இயேசுவே, உம்முடைய பரிசுத்த ஆவியானவராலே எங்களுடைய இருதயங்களை சுத்திகரியும். நாங்கள் ஞானமுள்ளவர்களாகவும் நேர்மையாகவும் நடந்து சோதனையில் விழாமலிருக்கும்படி ஜெபிக்கிறோம். எங்கள் வாழ்விலே ஒரு அற்புதம் நடக்கும்படியாகவும் அதினிமித்தம் இந்தப் பூமியில் பரிசுத்தமாகவும் நீதியாகவும் வாழவும், எங்களை இந்தப் பூமியிலே அப்படி வாழ வைக்கிற தேவனுடைய வல்லமையையும் அன்பையும் குறித்து சாட்சியிடவும் ஜெபிக்கிறோம். ஆமென்

>> சுற்றுலா அமைச்சகம் மலேசியாவை ஒரு பன்முக கலாச்சார நாடாக மேம்படுத்தி நம்முடைய சுற்றுலாத்துறை செழிக்கும்படியாக போட்டி சுற்றுலா சந்தையில் அதன் தனித்துவத்தை உயர்த்திக் காண்பிக்கும்படி ஜெபியுங்கள்.

>> புனித பூமி, பவுலின் மிஷனரிப் பயணம் மற்றும் காமினோ டி சான்டியாகோ போன்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த புனிதத் தலங்களுக்கு கிறிஸ்தவ சுற்றுலாக்களுக்காக ஜெபியுங்கள். இயேசுவும் மற்ற அப்போஸ்தலர்களும் நடந்து சென்ற இடத்தை கிறிஸ்தவர்கள் பார்வையிடும்போதும், அதைக் குறித்து ஆச்சர்யப்படும்போதும் தேவன் அவர்களுக்குள் சுவிசேஷம் மற்றும் மிஷன்களுக்கான அக்கினியை மறுபடி பற்றியெறியச் செய்யும்படி ஜெபியுங்கள்.

# நாள் 31-35

# அசைவில்லாத விசுவாசம்

எபிரெயர் 10 & 11



வேதப்பகுதி: எபி 10:1-25

# நாள் 31 ▪ *வெள்ளி 06, செப்டம்பர் 2024*

# நேர்மையிலும் விசுவாசத்திலும் பொறுமை

இயேசு கிறிஸ்து தம்மை ஒரே தரம் பலியாக்கி பாவங்களுக்கான நித்திய பலியாக மாறினார். அவர் இப்பொழுது தேவனுடைய வலதுபாரிசத்தில் இருக்கிறார், அங்கே தம்முடைய சத்துருக்களை தேவன் அவருக்கு பாதபடியாக்கும் வரை காத்துக்கொண்டிருக்கிறார்.

சில நேரங்களில் ஒருவேளை நம் வாழ்வின் பெலவீனங்கள் நிமித்தமாக, நாம் தேவனைத் தேடுவதற்கு தயங்குகிறோம். அது அப்படியே இருந்தாலும், தேவன் நம்முடைய மீறுதல்களை நினைவுகூர்வதில்லை. உண்மையில் நாம் அவரைத் தேடுவதற்காக ஆவலுடன் காத்துக்கொண்டிருக்கிறார். இயேசுவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலும் அவருடைய தியாகத்தினாலும், அவர் நமக்கு ஒரு புதியதும் ஜீவனுள்ளதுமான வழியை திறந்திருக்கிறார், அது நம்மை தைரியத்துடன் அவருடைய பிரசன்னத்துக்குள் நுழைய உதவுகிறது.

அப்படியானால் நாம் தேவனை நேர்மையான இருதயத்துடனும் முழு நிச்சயத்துடனும் அணுகுவோம். நாம் அறிக்கை செய்கிற விசுவாசத்தில் நாம் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம், ஏனெனில் நமக்கு வாக்குபண்ணினவர் உண்மையுள்ளவர். இக்கட்டான சமயங்களில் நாம் பயப்பட வேண்டியதில்லை, ஏனெனில் நாம் இயேசுவின் மூலம் சத்துருவை மேற்கொள்ள முடியும். கிறிஸ்துவின் நாள் நெருங்குவதால் நாம் இன்னும் அதிகமாக ஒருவரிலொருவர் அக்கறை கொண்டு, அன்பையும் நற்கிரியைகளையும் ஊக்கப்படுத்தி, ஒருவரையொருவர் உற்சாகப்படுத்தி கர்த்தருடனான ஐக்கியத்தை தொடருவோம்.

தேவனுடைய பிள்ளைகளை ஒருவரும் எதிர்த்து நிற்க முடியாது, ஏனென்றால் இயேசு நமக்காக பலியானார். தேவன் தேர்ந்துகொண்டவர்களை யாரும் குற்றப்படுத்த முடியாது, ஏனெனில் தேவன் அவர்களை நீதிமான்களாக்கினார். ஒருவரும் தேவனுடைய பிள்ளைகளை ஆக்கினைக்குள்ளாக தீர்க்க முடியாது, ஏனெனில் இயேசு மீட்பின் வேலையை செய்து முடித்திருக்கிறார். அல்லேலூயா!

### இன்றைக்கான ஜெபம்:

>> அன்புள்ள ஆண்டவரே, நாங்கள் நேர்மையுடனும் விசுவாசத்துடனும் உறுதியாக உம்முடைய முகத்தை தேடுவோமாக. நீர் எங்களை தாங்கி பெலப்படுத்துவீர் என்றும் எந்த சூழ்நிலையிலும் நாங்கள் ஜெயம் பெற எங்களை திராணியுள்ளவர்களாக்குவீர் என்பதை உறுதியாக நம்புகிறோம். ஆமென்!

>> பொது மற்றும் சமூக ஒழுங்கைப் பாதுகாப்பதில் உள்துறை அமைச்சகம் தங்கள் பொறுப்புகளை திறம்பட செயல்படுத்த வேண்டுமென ஜெபியுங்கள். அவர்களுக்கு நம் நாட்டிலுள்ள வெளிநாட்டு பணியாளர்கள் மீது நல்ல கட்டுப்பாடு உண்டாயிருக்கும்படி ஜெபியுங்கள்.

>> கிறிஸ்துவின் சரீரத்தில் காயங்களையும் பிரிவுகளையும் கொண்டு வந்த சபை பிரிவினைகளை தேவன் மன்னிக்கும்படியாக ஜெபியுங்கள். காயப்பட்டவர்கள் மத்தியில் அவர்களுடைய உறவு மற்றும் விசுவாசத்தில் நல்ல ஒப்புரவாகுதல் மற்றும் பழைய நிலைக்குத் திரும்புதல் உண்டாகும்படி ஜெபியுங்கள்.

வேதப்பகுதி: எபி 10:26-39

# நாள் 32 ▪ *சனி 07, செப்டம்பர் 2024*

# "உங்கள் தைரியத்தை விட்டுவிடாதிருங்கள்"

எபிரேயர் புத்தகத்தின் ஆசிரியர் அவர் காலத்தில் வாழ்ந்த சோதனைகளையும் உபத்திரவங்களையும் அனுபவித்த விசுவாசிகளுக்கு "உங்கள் தைரியத்தை விட்டுவிடாதிருங்கள்" என்ற செய்தியை தெரிவிக்கிறார். சோதனைக் காலத்திலே, சிலர் பின்வாங்கிப் போகலாம், சிலர் பெலவீனப்பட்டுப் போகலாம், சிலர் கர்த்தரை நம்பித் திடனாக இருக்கலாம். மற்றவர்களோ உபத்திரப்படுகிறவர்களுடன் சேர்ந்து அவர்களுக்கு மனதுருக்கம் காண்பிக்கலாம். தைரியமாக தேவனைச் சார்ந்து உறுதியான மனதைக் கொண்டிருக்கிறவர்கள் சோதனை, பரிகாசம் மற்றும் மற்றவர்களால் தவறாகப் புரிந்துகொள்ளப்படுதல் போன்றவைகளை சந்திக்க அதிக விலை கொடுக்கும்படியாக அதிக பிரயாசப்பட வேண்டியிருக்கும். இப்படிப்பட்ட விசுவாசிகள் மூலம்தான் தேவன் தம்முடைய அழகான வேலையை செய்து முடிக்கிறார்.

இந்நூற்றாண்டில் வந்த கோவிட்-19 நோய்த்தொற்று நம்மை சோதித்தது. நாம் பாதிக்கப்படாதபடி நம்மை பாதுகாக்க முயற்சி எடுத்தாலும் அதின் மத்தியிலே நாமே முன்வந்து மற்றவர்களுக்கு உதவவும் அல்லது மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கவும் எந்த அளவுக்கு விருப்பமாயிருக்கிறோம்? நம்முடைய பெருமைகளை ஒதுக்கி வைத்து சுவிசேஷத்தை அறிவிக்கும்படி ஜனங்கள் மத்தியிலே களமிறங்கி துணிவு மிக்க இருதயத்தோடு செயல்படுவோமா?

நாம் எழுப்புதலுக்காக ஜெபிக்கிற வேளையிலே, தேவன் தம்முடைய பிள்ளைகள் தைரியத்தோடு சுவிசேஷம் அறிவிக்க வேண்டுமென்று காத்திருக்கிறார். நாம் ஜனங்களை நம்முடைய கண்கள் மூலமாய் அல்ல அவருடைய கண்கள் மூலமாக பார்க்க நமக்கு உதவி செய்வாராக. மற்றவர்களோடு தைரியத்தோடு சுவிசேஷத்தை அறிவிக்க ஒவ்வொரு வாய்ப்புகளையும் நாம் பயன்படுத்திக் கொள்வோமாக. இந்த 40 நாட்கள் உபவாசம் மற்றும் ஜெபத்திலே இதுவரை விசுவாசியாத நண்பர்களை சந்திக்கவும் அவர்களோடு இந்த அற்புதமான சுவிசேஷத்தை பயமின்றி அறிவிக்கவும் செயல்படுவோமாக!. ஒவ்வொருவருக்கும் ஆண்டவர் தேவை என்பதை நினைவில் கொள்ளுங்கள்!

## இன்றைக்கான ஜெபம்:

>> அன்புள்ள ஆண்டவரே, ஜெபத்தோடுகூட உம்முடைய சுவிசேஷத்தையும் அறிவிக்கிற வேலையை அசையாத மற்றும் தைரியமுள்ள இருதயத்தோடு செய்வதற்கு முயற்சி எடுக்க எங்களுக்கு நினைப்பூட்டினபடியால் உமக்கு நன்றி. உறுதியுடன்கூட தைரியமாய் உம்முடைய சுவிசேஷத்தை பிரகடனம் செய்ய எங்களுக்கு உதவி செய்யும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம். ஆமென்!

>> உள்நாட்டு வர்த்தகம் மற்றும் வாழ்க்கைச் செலவுக்கான அமைச்சகம் விலை கட்டுப்பாடு மற்றும் பொருட்கள் கட்டுப்பாடு போன்றவற்றில் நல்ல அறிவையும் திறனையும் பெற்றிருக்க வேண்டுமெனவும், நுகர்வோரின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டு முன்னுரிமை அளிக்கப்படவும் ஜெபியுங்கள்.

>> விசுவாசிகளாகிய அநேக தொழில் முனைவோர் தங்களுடைய தொழில்களை தேவனுக்கும் அவருடைய ராஜ்யத்துக்கும் ஊழியம் செய்கிற வழியாக பார்க்கவும், அவர்கள் ஆத்தும ஆதாயம் மற்றும் சீஷர்களை உருவாக்குதல் போன்றவைகளால் உந்தப்படவும் ஜெபியுங்கள். அவர்களுடைய பொருட்கள் மற்றும் சேவையானது தேவனுடைய சிறப்பு மற்றும் நன்மைக்கு சாட்சியாயிருக்கும்படி ஜெபியுங்கள்.

வேதப்பகுதி: எபி 10:1-25

# நாள் 33 ▪ *ஞாயிறு 08, செப்டம்பர் 2024*

# உலகத்திற்கு ஏற்காத ஜனங்கள்

எபிரேயர் 11ம் அதிகாரமானது விசுவாசத்தினால் நிறைந்த ஜனங்களின் பெயர் பட்டியலைக் கொண்டுள்ளது. அவர்களுடைய ஜீவியம் அவர்களுக்கு உண்டான உணர்த்துதல்களினால் பிரகாசித்தது மற்றும் அவர்களின் வெற்றிகரமான சாட்சிகள் வேதாகம வரலாற்றில் இடம் பெற்றுள்ளது. இதினிமித்தம் நாம் எப்பொழுதும், "விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது" என்பதை நினைவில் கொள்ள வேண்டும் (எபி 11:1).

சில விசுவாச வீரர்களின் வரலாறுகள் நமக்கு பரிச்சயமானதாக இருக்கலாம். நாம் அவர்களையும் அவர்களுடைய குறிப்பிடத்தக்க வாழ்க்கையையும் பாராட்டுகிறோம். எபிரேயர் புத்தகத்தின் ஆசிரியர் கிறிஸ்துவுக்குள்ளான நம்முடைய வாழ்க்கையை நமக்கு முன்பாக பரலோகம் சேர்ந்தவர்கள் நாம் ஓடுகிறதை கவனிக்கிறது போல ஒரு ஓட்டப்பந்தயத்தோடு ஒப்பிடுகிறார். மேகம் போன்ற திரளான சாட்சிகள் நாம் ஓட்டத்தை ஓடி முடித்து பரலோகத்திலுள்ள இலக்கை அடைகிற வரை தொடர்ந்து நமக்கு சாட்சிகளாயிருப்பார்கள்.

விசுவாசத்தினாலே, பாரமான யாவற்றையும் நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட நமக்கு விருப்பமா? விசுவாசத்தினாலே, நமக்கு முன்பாக நியமிக்கப்பட்டிருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடுவோமா? விசுவாசத்தினாலே, தேவனைப் பிரியப்படுத்துகிற இடுக்கமான வழியை தேர்ந்தெடுப்போமா? உலகக் காரியங்களை குப்பையென்றெண்ணி தேவனுடைய சித்தத்துக்கு நம்மை ஒப்புக்கொடுக்க ஆயத்தமா? நாம் ஆர்வத்துடன் தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுகிறோமா?

"உலகத்திற்கு ஏற்காத ஜனங்கள்" என்பது விசுவாச வீரர்களின் பெயர் பட்டியலில் குறிப்பிட்டுள்ளவர்கள் மாத்திரமல்ல, இக்காலத்தில் தங்களுடைய தேவைகளையும் விருப்பங்களையும் ஒதுக்கி வைத்து தேவன் மேல் நோக்கமாகி கிறிஸ்துவுக்கு தங்களை ஒப்புக்கொடுக்கிறவர்களும் ஆவர். நீங்கள் இவர்களில் ஒருவரைப்போல ஆகிறபடியால் நீங்கள் ஆசீர்வதிக்கப்படுவீர்களாக!

### இன்றைக்கான ஜெபம்:

>> அன்புள்ள ஆண்டவரே, எங்கள் வாழ்வில் நீர் இன்னும் அதிகமாய் இருக்கும்படி ஜெபிக்கிறோம். உம்முடைய மகிமையின் ஒரு கணப்பொழுதை நாங்கள் பற்றிக்கொள்ளவோமாக. உம்முடைய அன்பின் பிரகாசம், உம்முடைய தியாக அன்பு, நீர் எங்களை நம்பிக் கொடுத்த சுவிசேஷப்பணி போன்றவையே எங்களுடைய வாழ்க்கையின் நோக்கமும் திட்டமுமாய் மாறுவதாக. உம்முடைய நடத்துதலையும் வழிகாட்டுதலையும் பின்பற்றி நீர் எங்களுக்காக நியமித்த வாழ்க்கையை வாழ்ந்து முடிப்போமாக. இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம். ஆமென்!

>> பாமாயில், ரப்பர், மரம் மற்றும் கோக்கோ போன்ற பொருட்களின் தோட்ட வளர்ச்சியை தோட்டம் மற்றும் பொருட்கள் அமைச்சகம் நன்கு நிர்வகிக்கும்படி ஜெபியுங்கள்.

>> சபையானது பனையைப் போலவும் லீபனோனிலுள்ள கேதுருவைப் போலவும செழிக்கும்படி ஜெபியுங்கள். கர்த்தருடைய வீட்டிலுள்ள விருட்சங்களைப் போல நாமும் செழித்து, கனி கொடுத்து பசுமையாயிருப்போம்.

வேதப்பகுதி: எபி 10:26-39

# நாள் 34 ▪ *திங்கள் 09, செப்டம்பர் 2024*

# விசுவாசத்தின் நிச்சயம்

நாம் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்போம் என்கிற நம்பிக்கைக்கு முன்பாகவே நமக்கு விசுவாசம் தேவை. நாம் வாழ்க்கையில் வளரவும் முன்னேறவும் வேண்டியது அவசியம். பவுல் சொன்னதுபோல நம்முடைய விசுவாசமானது விசுவாசத்திலிருந்து விசுவாசத்துக்காக என்றிருக்க வேண்டும். அதேபோல நம்முடைய வாழ்நாள் முழுக்க எப்படி விசுவாச வாழ்க்கை வாழ வேண்டும் என்கிற பாடத்தை தொடர்ந்து கற்றுக்கொள்ள வேண்டும்.

விசுவாசம் என்பது தேவனால் நமக்கு கொடுக்கப்பட்டுள்ள ஒரு ஆவிக்குரிய ஆற்றல். எப்படி நாம் ஐந்து அறிவினால் காரியங்களை கிரகித்துக் கொள்கிறோமோ, அதேபோல விசுவாசமானது தேவனோடுகூட நாம் தொடர்பு கொள்ளும்படியாக அவரால் கொடுக்கப்பட்டுள்ள ஆவிக்குரிய உறுப்பு. இந்த விசுவாசமானது நம்முடைய ஆவிக்குரிய பிரச்சனைகளை அறிகிற அளவுக்கும் விசுவாசப் பாதையில் தொடர்ந்து பயணிக்கவும், தொடர்ச்சியான பயிற்சியையும் வளர்ச்சியையும் எதிர்பார்க்கிறது.

தேவனுடைய வார்த்தையின் பிரகாசமான ஒளியானது உண்மையில் நம்முடைய விசுவாசத்தை பெலப்படுத்தி அந்தகார இருளில் நாம் தடுமாறாதபடி நம்மை தடுக்கும். இது நம்முடைய விசுவாசமானது சரியாகச் செயல்படும்படி தொடர்ச்சியாக அதை பயிற்சி செய்ய அனுமதிக்கிறது. இந்த உலகமானது நம்மை மயக்குகிற மற்றும் கவர்ந்திழுக்கிற காரியங்களால் நிறைந்துள்ளது. எனவே தேவனுடைய வார்த்தையின் வழிகாட்டுதல் இல்லாமல், எப்படி நமக்கு விடுதலையாக்கப்பட்ட மற்றும் பரிசுத்த ஆவியானவருக்கு கீழ்ப்படிகிற இருதயம் இருக்க முடியும்?

இதை நாம் செயல்படுத்தி உபவாசத்திலும் ஜெபத்திலும் தேவனுக்கு கீழ்ப்படியும்போது, தேவன் நம்முடைய ஆவிக்குரிய தரிசனத்தை விஸ்தாரமாக்கி தேவனுடனான நம்முடைய நடக்கையில் ஒரு புதிய அற்புதத்தை செய்வாராக. தேவன் நமக்காக வைத்திருக்கிற ஆச்சர்யமான சவால்களை ஏற்றுக்கொள்ளும்படி நாம் ஆயத்தப்படுவோமாக.

### இன்றைக்கான ஜெபம்:

>> அன்புள்ள ஆண்டவரே, உம்மடைய வழிகாட்டுதலிலே விசுவாசத்தின்படி நடக்க உதவி செய்யும். உம்முடைய வார்த்தையின் வாக்குதத்தங்கள் மேல் நாங்கள் இழுக்கப்படுவோமாக. விசுவாசத்தினால் சத்துருவின் எல்லா தாக்குதல்களையும் மேற்கொண்டு வெற்றியுள்ள நபராக மாறுவோமாக! இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம். ஆமென்!

>> தொடர்பு அமைச்சகத்தின் கீழ் தகவல்களை வழங்குவதும் பரப்புவதும் பயனுள்ளதாகவும் திருப்திகரமாகவும் இருக்க வேண்டுமென்றும், போலியான மற்றும் மோசடியான செய்திகள் மற்றும் தகவல் தொடர்புகள் கட்டுப்படுத்தப்பட வேண்டுமென்றும் ஜெபியுங்கள்

>> ஒவ்வொரு திருச்சபையும் நற்செய்தி அறிவிக்கும்போது அது தெளிவாகவும், ஏற்ற நேரத்தில் இருக்கும்படியும், பொருத்தமானதாகவும் சமரசமற்றதாகவும் இருக்கும்படியும் ஜெபியுங்கள். அறிவக்கப்படுகிற சுவிசேஷம் அநேகருடைய இருதயங்களையும் சிந்தைகளையும் தொடும்படி ஜெபியுங்கள்

# நாள் 35 ▪ *செவ்வாய் 10, செப்டம்பர் 2024*

வேதப்பகுதி: எபி 11:39-40

# விசுவாச வாக்குதத்தங்கள்

விசுவாசமானது எபி 11:1ல் "நம்பப்படுகிறவைகளின் உறுதி" என்று வரையறுக்கப்படுகிறது. இந்த விசுவாசமானது உலகப்பிரகாரமான நம்பிக்கைகளிலிருந்து வித்தியாசப்பட்டது மற்றும் முன் அதிகாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நம்பிக்கை மற்றும் வாக்குதத்தங்கள் மேல் கட்டப்பட்டுள்ளது. எனவே விசுவாசமானது தேவனிடத்திலிருந்து வருகிறது மற்றும் அவருடைய வார்த்தை மற்றும் வாக்குதத்தங்கள் மேல் ஆழமாக வேர் கொண்டது. இது தேவனுடைய வெளிப்பாடுகள், கட்டளைகள், அழைப்பு மற்றும் வாக்குதத்தங்களோடு தொடங்கி "காணப்படாதவைகளின் நிச்சயத்தினால்" தொடர்கிறது மற்றும் இது நம்முடைய விசுவாசத்தின் வெளிப்பாடாகிய கீழ்ப்படிதல் மற்றும் பொறுமையினால் செயல்படுத்தப்படுகிறது. தேவன் நமக்கு ஜீவனை மாத்திரமல்ல பரிபூரண ஜீவனை வாக்கு பண்ணியிருக்கிறார். இந்தப் பரிபூரண ஜீவனானது முக்கியமாக தேவனிடத்தில் நாம் வைக்கிற விசுவாசத்துடன் பிணைந்துள்ளது.

நம்முடைய விசுவாசமானது "நான் தேவனை விசுவாசிக்கிறேன்" என்பதோடு நின்று விடக்கூடாது மாறாக "தேவன் தம்மைத் தேடுகிறவர்களுக்கு பலன் அளிக்கிறவர்" என்று விசுவாசிக்கிற வரை முன்னேறிச் செல்ல வேண்டும். பவுல் சொன்னார், "தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசுகிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், அவருக்குள் ஆமென் என்றும் இருக்கிறதே" ( 2 கொரி 1:20 ). நீங்கள் தேவனை தேடுகிறீர்களா? அவருடைய வாக்குதத்தங்கள் நிறைவேறும் என்பதில் உங்களுக்கு நிச்சயம் உள்ளதா? நீங்கள் தேவனுடைய வாக்குதத்தங்களுக்கு எந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறீர்கள்? தேவன் பலன் தரத் தவறுவதில்லை என விசுவாசித்து விசுவாச வீரர்கள் அசாதாரண வாழ்க்கை வாழ்ந்தார்கள்,

இன்றைக்கும், தேவன் தாம் பயன்படுத்தக்கூடிய பாத்திரங்களை எதிர்பார்க்கிறார். அவர் நம்முடைய வாழ்க்கையில் நுழைய விரும்புகிறார், அவருடைய வாக்குதத்தங்கள் நம்முடைய வாழ்வில் நிறைவேறுவதை அனுமதித்து தம்முடைய ஆச்சரியமான கிரியைகளை செய்து முடிக்கிறார். இந்த முக்கியமான தருணத்திலே, தேவன் தம்முடைய வல்லமையை விளங்கப் பண்ணும்படியான தேவ ஜனங்களை துரிதமாக எதிர்பார்க்கிறார். நீங்கள் உங்கள் வாழ்க்கையின் உரிமையை தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, இந்த சந்ததிக்கான விசுவாச பாத்திரமாக மாற விருப்பமா?

**இன்றைக்கான ஜெபம்:**

>> ஆண்டவரே, எங்களுடைய புத்திக்கு அப்பாற்பட்ட விசுவாசத்தை எங்களுக்கு தந்தருளும். நாங்கள் தேவனை விசுவாசிக்கிறோம் அதேபோல உம்மைத் தேடுகிறவர்களுக்கு நீர் பலன் அளிக்கிறீர் என்றும் விசுவாசிக்கிறோம். விசுவாசத்தில் பொறுமையோடு காத்திருக்க எங்களை பெலப்படுத்தும் மற்றும் விசுவாச வீரர்களோடு சேர்ந்து எங்களுக்காக ஆயத்தப்பட்டிருக்கிறதை பெற்றுக்கொண்டு பரலோகத்தில் நாங்கள் உம் சமுகத்தில் வந்து நிற்கிற வரைக்கும் உம்மை பிரியப்படுத்த உதவி செய்யும் (வசனம் 40 பார்க்க). இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம். ஆமென்!

>> சர்வதேச வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகமானது முதலீட்டாளர்களுக்கு சாதகமான வணிக சூழலை வழங்குவதற்கும், தற்போதுள்ள முதலீடுகளை தக்க வைத்துக் கொள்வதற்கும், அதோடுகூட தரமான மற்றும் உயர் மதிப்புள்ள வெளிநாட்டு நிறுவனங்களை ஈர்ப்பதற்கும் வெற்றியடைய ஜெபியுங்கள்.

>> ராஜ்யத்தின் தொழிலை செய்கிற சபையாகிய நாம் பூமியிலே நல்ல முதலீட்டாளர்களாக இருக்கும்படியும், எங்கே உதாரத்துவமாக விதைக்க வேண்டும் மற்றும் எங்கே அறுவடை செய்ய வேண்டுமென்று அறிந்திருக்கவும் ஜெபியுங்கள். ஒவ்வொரு சபையும் எங்கே முதலீடு செய்தார்களோ அங்கே வளர்ச்சியையும் பெருக்கத்தையும் அனுபவிக்க ஜெபியுங்கள்.

# நாள் 31-35

# அசைவில்லாத ஊழியங்கள்

எபிரெயர் 12 & 13



வேதப்பகுதி: எபி 12:1-3

# நாள் 36 ▪ *புதன் 11, செப்டம்பர் 2024*

# அசைவில்லாத சாட்சிகள்

அசைவில்லாத ராஜ்யம் என்பது தேவனுடைய ஆளுகையில் உள்ள அசைக்க முடியாத தெய்வீக ராஜ்யமாகும். இந்த ராஜ்யத்தில் எண்ணற்ற சாட்சிகள் வானத்திலுள்ள மேகம் போல நம்மைச் சூழ்ந்துள்ளனர். நாம் இலக்கை நோக்கி முன்னேறிச் செல்ல வேண்டும். யுத்தத்தில் கிறிஸ்துவே நமக்கு படைத் தளபதியாக இருக்கிறார், அவர் நம்மை சரியான பாதையில் நடத்தி வெற்றிக்கு நேராக அழைத்துச் செல்வார். நம்முடைய பங்கு என்னவெனில், நாம் பாரமான யாவற்றையும் உதறித் தள்ளவும், நம்மை பாவத்துக்குள் நடத்தக்கூடிய யாவற்றையும் விட்டு விலகவும் வேண்டும்.

இந்த அசைவில்லா ராஜ்யத்தில், கிறிஸ்து சிலுவையில் பாடுகளை சகித்தார். அவருடைய மீட்பின் வேலை மற்றும் ஊழியத்தின் நிறைவேறுதலுக்கு அடையாளமாக, இப்பொழுது அவர் தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார். இன்னமும் பூமியில் இருக்கிற நாம், அவர் அல்பாவும் ஒமேகாவும், விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவருமாக இருக்கிறபடியால், நமக்காக அவர் ஆயத்தம் பண்ணியிருக்கிற எதிர்காலத்துக்காக காத்துக்கொண்டிருந்து அவரையே நோக்கிப் பார்க்க வேண்டும். தேவனுடைய ராஜ்யத்தில் இருக்கிற நாம் இந்த பூமிக்குரிய காரியங்களை தற்காலிகமானதாகவும் எல்லைக்குட்பட்டதாகவும் கருத வேண்டும். நம்முடைய ஸ்தானத்தைக் குறித்தும், கிறிஸ்துவுக்குள்ளான வாக்குதத்தங்கள் குறித்தும் ஆராய்ந்து, கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவிப்பதற்கு கர்த்தருடைய கிருபையையும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையையும் சார்ந்திருப்போம்.

**இன்றைக்கான ஜெபம்:**

>> ஆண்டவரே, சபையானது உம்முடைய ராஜ்யம் மற்றும் அதின் ஊழியத்தின் முக்கியத்துவத்தை தனிப்பட்ட பொறுப்பாக எடுத்துக்கொள்ளவும் அதின் மூலம் தொடர்ந்து உமக்கு சாட்சிகளாயிருக்கவும் அசைவில்லாத ராஜ்யத்துக்கென ஆர்வமாக ஆத்தும ஆதாயம் செய்யவும் உதவி செய்யவும். சபையை நேர்மறையான சிந்தையினாலும் பொறுமையினாலும் நிரப்பும், அதினிமித்தம் நாங்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்போது ஏற்படும் சவால்களை சந்திக்க முடியும்.

>> பாதுகாப்பு அமைச்சகமானது நாட்டின் பாதுகாப்பை மேம்படுத்தவும், இறையாண்மையுடன் அதின் நலன்களை பாதுகாக்கவும், ராணுவத் தேவைகளை சந்திக்கவும் சிறப்பாக செயல்பட ஜெபியுங்கள்.

>> சபைகள் தங்கள் நேரத்தையும் முயற்சிகளையும் ஜெபத்திலும் மன்றாட்டிலும் பயன்படுத்தி சபையைச் சுற்றிலும் தனி மனிதர்களைச் சுற்றிலும் பாதுகாப்பு வேலியை கட்டியெழுப்ப ஜெபியுங்கள். ஒவ்வொரு சபையும் ஜெபத்தின் வல்லமையால் நிறைந்திருக்கும்படி ஜெபியுங்கள்.

வேதப்பகுதி: எபி 12:22-24

# நாள் 37 ▪ *வியாழன் 12, செப்டம்பர் 2024*

# அசைவில்லாத சீயோன்

சீயோன் மலை என்பது வாசம் பண்ணும் இடம் மற்றும் தேவனுடைய பிரசன்னத்துக்கு அடையாளமாக இருக்கிறது, அதோடுகூட சம்பவிக்கப்போகிற காரியங்களாகிய, தூதா கூட்டத்தினால் நிறைந்த பரலோக நகரத்தையும் குறிக்கிறது. இதுவே இனி வரப்போகிற காலத்தின் அசைவில்லாத ராஜ்யம் மற்றும் இங்கே தேவன் தமது நியாயத்தீர்ப்பை செய்வார். அதே நேரத்தில், இயேசு நமக்கு மத்தியஸ்தராக இருக்கிறபடியால் நீதிமான்களின் ஆத்துமாக்கள் பூரணப்படும். இந்த உடன்படிக்கை காத்தருடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் ஏற்படுத்தப்பட்டது. இந்த விதத்தில் இயேசுவை விசுவாசிக்கிறவர்கள் அசைவில்லாத ராஜ்யமாகிய நித்திய ஜீவனை அடைவார்கள். இந்த ராஜ்யத்தில், கர்த்தர் தம்முடைய ஜனங்களின் இருதயங்களில் ஆளுகை செய்து ஊழியங்களுக்கான வல்லமையையும் தாக்கத்தையும் தருகிறார்.

சீயோன் மலை என்பது இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பாக மனுக்குலத்தோடு கிறிஸ்து இயேசுவினால் ஏற்படுத்தப்பட்ட புதிய உடன்படிக்கையாகும். இந்த வாக்குதத்தமானது நித்திய தேவனுடைய பிரசன்னத்துக்குள் நுழைகிறவர்களுக்கு நித்திய ஜீவனைக் குறித்த நம்பிக்கையை கொடுக்கும்படி கிறிஸ்துவுக்குள் இருக்கிறவர்களுக்கு கொடுக்கப்பட்டது. நாம் எதிர்பார்த்து காத்திருக்கும் என்ன ஒரு அருமையான வாக்குதத்தம் பாருங்கள், ஏனெனில் அங்கே வியாதியில்லை, வேதனையில்லை, துக்கமில்லை, அழுகையில்லை மற்றும் மரணமும் இல்லை. கடந்த கால காரியங்கள் அனைத்தும் வரலாறாக மாறி விடும். இன்றைக்கு உயிரோடிருக்கிற நாம் நமக்கு இரட்சிப்பைத் தந்த தேவனை ஆர்வமாகத் தேடுவோம். இந்த கடைசி காலங்களில், நம்முடைய முழு இருதயத்தோடும் இந்த சுவிசேஷத்தின் வல்லமையை பிரகடனம் பண்ணுவோம். ஏனெனில் கர்த்தராகிய இயேசுவை தங்கள் சொந்த இரட்சகராக விசுவாசிக்கிற யாவரும் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடைவார்கள்.

### இன்றைக்கான ஜெபம்:

>> ஆண்டவரே, அசைவில்லாத ராஜ்யத்துக்காக ஏங்குகிற எங்கள் கண்களைத் திறந்து எங்கள் பார்வையை சீயோன் மலையின் மேல் பதியச் செய்யும். மற்றவர்களை கிறிஸ்துவுக்குள் கொண்டுவர எங்களை பயன்படுத்தி அவர்களும் பரலோக ஆசீர்வாதங்களை எங்களோடு பகிர்ந்துகொள்ளச் செய்யும். இதுவரையிலும் இரட்சிக்கப்படாதிருக்கிற ஜனங்களுக்காக ஊக்கமாக ஜெபிக்கிறோம். அவர்கள் தங்கள் வாழ்நாளில் சுவிசேஷத்தைக் கேட்கவும், இரட்சிப்பின் சந்தோஷத்தை அனுபவிக்கவும் மற்றும் அசைவில்லாத சீயோன் மலையிலே பங்கு பெறவும் உதவி செய்யும்.

>> பணி அமைச்சகமானது மத்திய அரசு சாலைகளின் வளர்ச்சி மற்றும் மேலாண்மையில் சிறந்து விளங்கவும், குறைந்த செலவில் நல்ல தரத்தை அடையவும், தரம் மற்றும் சாதகமான கட்டுமான சூழ்நிலையை ஏற்படுத்தவும் ஜெபியுங்கள்.

>> சபையின் பணிகளானது திடமானதும் நீடித்திருக்கிறதாகவும் மாத்திரமல்லாது, அவரது சுத்திகரிப்பு அக்கினியை தாங்கி, சோதனைகளை சகித்து, இறுதியில் பரலோக வெகுமதிகளை பெறுவதை நோக்கி நடத்தப்படும்படி ஜெபியுங்கள்.

வேதப்பகுதி: எபி 12:25-28

# நாள் 38 ▪ *வெள்ளி 13, செப்டம்பர் 2024*

# அசைவில்லாத நற்செய்தி

சுவிசேஷமானது எல்லா தேசங்களுக்கும் நற்செய்தியாகும், அது கடந்த 2000 வருடங்களாக மனுக்குலத்துக்கு தெளிவாக அறிவிக்கப்பட்டு வருகிறது. வானமும் பூமியும் சிருஷ்டிக்கப்பட்ட நாள் தொடங்கி தேவனுடைய நித்திய வல்லமை, அவருடைய தெய்வீக சுபாவம் போன்றவை தெளிவாய் காணப்பட்டிருக்கிறது. காணப்படாதவராக இருந்தாலும் அவருடைய சுபாவங்கள் சிருஷ்க்கப்பட்டவைகளாலே தெளிவாய் காணப்படும், எனவே அவரை அறியாமலிருப்பதற்கு நாம் போக்கு சொல்ல நமக்கு இடமில்லை. தேவன் தொடர்ச்சியாக இந்த உலகத்தையும் அவருடைய சிருஷ்டிப்பின் ஒழுங்கையும் அசையப் பண்ணுவது மனுக்குலத்துக்கு எச்சரிப்பையும் பாவிகளுக்கு மனந்திரும்பி அவரிடம் வருவதற்கான வாய்ப்பையும் தருவதற்காகவுமே. நாம் நம்முடைய இருதயக்கடினத்திலேயே நிலைத்திருந்து, தேவனுடைய ஆலோசனையை தள்ளி, மனந்திரும்பத் தவறினால் நாம் நிச்சயமாக தேவனுடைய நியாயத்தீர்ப்பை சந்திக்க நேரிடும்.

இரட்சிப்பைப் பெற்ற நாம், அசைவில்லாத ராஜ்யத்தைப் பெற்றதினாலே, நம்முடைய ஸ்தோத்திரத்தை தொடர்ந்து தேவனுக்கு செலுத்தி, பயத்தோடும் பக்தியோடும் தேவனை சேவித்து அவருடைய சித்தத்தை பின்பற்ற வேண்டும். அப்படிச் செய்வதினாலே, அவிசுவாசிகளுக்கு நாம் உத்வேகமாக இருந்து, நித்திய ஜீவனையும் அசைவில்லாத ராஜ்யத்தையும் பெறுவோம் என்ற நம்பிக்கையுடனே அவர்களை சிருஷ்டிகரும் இரட்சகருமாகிய தேவனிடத்தில் நடத்தலாம். இந்தக் கடைசி நாட்களிலே, மனந்திரும்புதல் மற்றும் நீதியைப் பிரசங்கிக்கிறதற்கு மற்ற ஊழியங்களைக் காட்டிலும் முன்னுரிமை கொடுப்போம். நாம் இந்தக் கடைசிகால அறுவடைக்கு ஊழியர்களை உருவாக்கி, பரலோக ராஜ்யத்தின் நற்செய்தியைப் பிரசங்கிக்கும்படியான ஊழியத்துக்கான அழைப்புக்கு குழுவாய் அர்ப்பணிப்போம்.

### இன்றைக்கான ஜெபம்:

>> அன்புள்ள ஆண்டவரே, இருதயக்கடின பாவத்தையும் நித்திய ஜீவனுக்குரிய உம்முடைய வழியை ஏற்றுக்கொள்ள மறுத்து உம்முடைய அழைப்பை அறியாமையினால் நிராகரிக்கிறவர்களுடைய பாவத்தையும் மன்னியும். அவர்களுடைய இருதயத்தை மென்மையாக்கி, அவர்கள் தங்கள் சுயத்தை வெறுக்கவும் உமக்கு முன்பாக தாழ்மையுடன் வரவும் உதவி செய்யும். இந்தக் காலத்திலே நடக்கிற நிகழ்ச்சகளை கவனிக்க உதவி செய்யும். இந்தக் கடினமான மற்றும் பிரச்சனைகள் நிறைந்த சூழ்நிலைகள் மூலமாக இந்த உலகத்தை உம்மிடம் திரும்பும்படியும் பரலோக ராஜ்யத்தின் நற்செய்தியை ஏற்றுக்கொள்ளவும் செய்கிறீர்.

>> வெளிநாட்டு விவகார அமைச்சகமானது இரதரப்பு உறவுகளை தொடர்ந்து மேம்படுத்தவும், பயங்கரவாதத்திற்கு எதிராக விழிப்புடன் இருக்கவும் புலம்பெயர்ந்தோரின் உயிர்கள் ஆபத்தில் இருக்கும்போது பேச்சுவார்த்தையில் தீவிரமாக இருக்கவும் ஜெபியுங்கள்.

>> ஒவ்வொரு திருச்சபையும் அதன் சமுதாயத்துடனும் சுற்றுப்புறத்துடனும் நன்றாகப் பழகவும், அரவணைப்பு, நம்பிக்கை மற்றும் உறவுமுறை ஆதரவை தெரிவிக்கும் கலங்கரை விளக்கமாக செயல்படவும் ஜெபியுங்கள்.

வேதப்பகுதி: எபி 13:5-8

# நாள் 39 ▪ *சனி 14, செப்டம்பர் 2024*

# அசைவில்லா வார்த்தையின் பிரசங்கியார்

இந்த அசைவில்லா ராஜ்யத்திலே, தேவன் தம்முடைய பிள்ளைகளை ஒருபோதும் கைவிடுவதோ அவர்களை விட்டு விலகுவதோ இல்லை என்கிற நித்திய உறுதியை தந்திருக்கிறார். தேவனுடைய ஊழியக்காரர்கள் பொருளாதாரக் குறைவுகளைக் குறித்து கவலைப்படத் தேவையில்லை, மற்றும் அவர்கள் தங்களை பேராசையிலிருந்து காத்துக்கொண்டு, போதுமென்கிற மனதையே அவர்களின் சந்தோஷத்தின் ஊற்றாக காண வேண்டும். கர்த்தருடைய வார்த்தையை பிரசங்கிக்கிறவர்களை பின்பற்றி, அவர்கள் தங்கள் விசுவாசத்தை குணாதிசயத்திலும் நடக்கையிலும் எவ்வாறு காண்பிக்கிறார்கள் என்பதை கவனிக்க வேண்டும். அவர்களுடைய தெய்வீகமான உதாரணங்கள் இன்றைய ஊழியங்களிலும் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதிலும் நடைமுறையில் பின்பற்றப்பட வேண்டும், அப்பொழுது அது வேகமாகப் பரவும்.

குற்றம் சாட்டப்படாத வாழ்க்கையை வாழ்கிற பிரசங்கியார் கேட்பவர்களுக்கு மிகச் சிறந்த உதாரணமாகும். அப்படியானால், பிரசங்கியார்கள் தங்கள் வாழ்க்கையிலிருந்தும் ஊழியத்திலிருந்தும் உதாரணங்களைத் தர தொடர்ச்சியாக கவனத்தோடு இருக்க வேண்டும். சுவிசேஷப்பணி தடைபடாதபடி அவர்கள் பேராசை அல்லது தவறான நோக்கங்களை கொண்டிருக்கக் கூடாது. சுவிசேஷமானது அதை விசுவாசிக்கிற யாவரையும் இரட்சிக்க வல்லமையுள்ளது, எனவே அது நல்ல வழிகள் மூலமாகவும் நம்பத்தகுந்த சாட்சிகள் மூலமாகவும் பரவ வேண்டும். ஏனெனில் நாம் பிரசங்கிப்பது நேற்றும் இன்றும் என்றும் மாறாத இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவை.

**இன்றைக்கான ஜெபம்:**

>> ஆண்டவரே, ஆழமான விசுவாசத்தையும் குற்றமற்ற வாழ்க்கையையும் கொண்டிருக்கிற அநேக பிரசங்கியார்களை உம்முடைய வார்த்தையை பிரசங்கிக்க எழுப்பும். சுவிசேஷம் பூமியின் கடைசி பரியந்தமும் சென்றடையும்படியாக இந்த ஸ்தானாபதிகள் இந்தக் கடைசி நாட்களில் உம்முடைய வார்த்தையை பிரசங்கிக்க தங்களை அர்பணிக்கச் செய்யும். இருந்தவரும் இருக்கிறவரும் வரப்போகிறவருமாகிய மேசியாவாகிய ராஜாவை உம்முடைய சுவிசேஷத்தின் மூலம் இந்த உலகம் அறிந்துகொள்வதாக. உம் மூலமாக மாத்திரமே நாங்கள் இந்த அசைவில்லாத ராஜ்யத்திலே பிரவேசிக்க முடியும்.

>> அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புதுமை அமைச்சகத்தன் முயற்சிகளால் மலேசியா உயர் செயல்திறன் கொண்ட உயர் தொழில்நுட்ப தேசமாக மாறவும் உலக அளவில் போட்டி நிலையை அடையவும் ஜெபியுங்கள்.

>> சபையானது அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புதுமையை நன்றாக பயன்படுத்தி நவீன காலத்திற்கு ஏற்ப செயல்பட்டு, இக்காலத்து தேவைகளை சந்திக்கவும், சுவிசேஷத்தையும் தேவனுடைய ராஜ்யத்தையும் முன்னோக்கி கொண்டு செல்லவும் ஜெபியுங்கள். நம்முடைய பயங்களாலோ தவறான புரிந்து கொள்ளுதலினாலோ நாம் பின்தங்கிவிடாதபடி ஜெபியுங்கள்.

வேதப்பகுதி: எபி 13:14-17

# நாள் 40 ▪ *ஞாயிறு 15, செப்டம்பர் 2024*

# அசைவில்லாத நற்செய்தி

சதா காலமும் நிலைத்திருக்கிற நகரமோ அல்லது வாசஸ்தலமோ எதுவுமில்லை. வரப்போகிற நாட்களிலே பரலோகத்திலிருந்து இரங்கி வரப்போகிற அப்படியொரு பட்டணத்தை எதிர்பார்க்கலாம். அதுவே நம்முடைய நித்திய வாசஸ்தலம் அல்லது வீடாயிருக்கும் மற்றும் தேவன் நியமித்திருக்கிற அசைவில்லாத ராஜ்யம் அதுவே. இந்த வாக்குத்தத்தம் நமக்கு இருக்கிறபடியால், இந்த உலகத்தை நாம் நித்திய கண்ணோட்டம் மற்றும் மதிப்புடனே பார்க்க வேண்டும். நம்முடைய நம்பிக்கையை இந்தப் பூமியிலுள்ள அழிந்துபோகிற மற்றும் கடந்துபோகிற தற்காலிக நகரத்தின் மேல் வைக்காமல், வரப்போகிற நகரத்தை, புதிய எருசலேமை, புதிய வானத்தை மற்றும் புதிய பூமியை எதிர் நோக்க வேண்டும்.

நாம் பூமியில் உள்ளவரை, நம்முடைய துதி பலிகளை தொடர்ந்து செலுத்தி, சுவிசேஷத்தை ஊக்கமாக பிரசங்கித்து, நற்கிரியைகளை அதிகமாக செய்து, சமூக தொண்டுகளை உற்சாகமாக செய்வோமாக. மற்றவர்கள் சுவிசேஷத்தையும் அதின் வல்லமையையும் அறிந்துகொள்ள இவைகள் நல்ல வாய்ப்புகளை வழங்கும். நம்முடைய கிரியைகள் தேவனைப் பிரியப்படுத்தி அவருடைய தெய்வீக சித்தத்துக்கு ஏற்றபடி அமையும்.

இனி வருங்காலத்தில் ஒரு நாள் வரும், அன்றைக்கு நாம் இந்தப் பூமியில் செய்த கிரியைகளைக் குறித்து, குறிப்பாக ஆத்துமாக்களின் இரட்சிப்புக்காக நாம் செய்த கிரியைகளைக் குறித்து கர்த்தருடைய சிங்காசனத்துக்கு முன்பாக கணக்கு ஒப்புவிக்க வேண்டி வரும். நாம் கணக்கொப்புவிக்கும்போது, துக்கமாக அல்ல, சந்தோஷமாக இருப்போமாக. இந்த அசைவில்லாத ராஜ்யத்தை நாம் பெற்றிருக்கிறபடியால், நம்மை தேவனுடைய வழியில் நடத்துகிறவர்களுக்கு முழுமனதுடன் கீழ்ப்படியும்படி ஒப்புக்கொடுப்போமாக.

**இன்றைக்கான ஜெபம்:**

>> ஆண்டவரே, இந்த உலகத்தை நித்திய கண்ணோட்டத்துடன் பார்க்கவும், நித்திய கண்ணோட்டத்துடன் வாழவும், எங்கள் வாழ்க்கை மற்றும் கிரியைகளை சுவிசேஷமானது வழிநடத்த அனுமதிக்கவும் எங்களை பெலப்படுத்தும். எங்களுடைய தினசரி வாழ்க்கையை குறிப்பாக சுவிசேஷத்தை அறிவிக்கும்போது அர்த்தமுள்ளதாகவும், மதிப்புள்ளதாகவும் மாற்றும். அப்பொழுது உமக்கு முன்பாக நாங்கள் கணக்கொப்புவிக்கும்போது நாங்கள் துக்கமாயல்ல சந்தோஷடாக இருப்போம். ஆமென்.

>> கோலாலம்பூர், புத்ரஜெயா மற்றும் லாபுவான் போன்ற பிரதேசங்களை மேற்பார்வையிடும் கூட்டாட்சி பிரதேசங்களின் அமைச்சகமானது, சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியின் மூலமாக அங்குள்ள சமுதாயத்தை மேலும் வளர்ச்சியடையச் செய்யவும் ஜெபியுங்கள்.

>> கூட்டாட்சிப் பிரதேசங்களிலுள்ள சபைகள் தங்களது ஜனங்களை சந்திக்கிற முயற்சியிலே தொடர்ந்து தாக்கத்தை ஏற்படுத்தவும், குறிப்பாக உள்ளூர் மற்றும் வெளிநாட்டு மாணவர்கள் மத்தியிலே ஊழியம் செய்கிறவர்களுக்காக ஜெபியுங்கள்.

# நன்றி நவில்தல்

## முகவுரை

| | |
|---|---|
| அசைவில்லாத ராஜ்யம் நமக்குரியது | ரெவ்.டாக்டர். யூ ஹாங் செங் |
| அசைவில்லாத ராஜ்யம் | போதகர். சாமுவேல் ஆங் |
| ஒரு உறுதியான மறுசீரமைக்கப்பட்ட ஆவிக்குரிய வாழ்க்கைமுறை | ரெவ். லூாய் கோக் கிம் |
| **NECF**ன் பொது நிதிக்கு உதவுங்கள் | போதகர். சாமுவேல் ஆங் |

## தியானம் & ஜெபம்

| | |
|---|---|
| நாள் 1 - 5 அசைவில்லாத ராஜ்யம் | மூப்பர். கூ கே ஹுப்<br>ரெவ். லூாய் கோக் கிம் |
| நாள் 6 - 10 அசைவில்லாத செய்தி | ரெவ். லீ யூ மெங் |
| நாள் 11 - 15 அசைவில்லாத உறவு | ரெவ். ஆன்டி சி |
| நாள் 16 - 20 அசைவில்லாத நடை | ரெவ். ரையன் அஞ்சங்கல் |
| நாள் 21 - 25 அசைவில்லாத நம்பிக்கை | ரெவ். ஜேம்ஸ் தாஸ் |
| நாள் 26 - 30 அசைவில்லாத அன்பு | போதகர். டோரிஸ் மேவென் |
| நாள் 31 - 35 அசைவில்லாத விசுவாசம் | போதகர். கிரேஸ் லீ |
| நாள் 36 - 40 அசைவில்லாத ஊழியம் | ரெவ். பாலஸ் வாங் |


| | |
|---|---|
| மொழி பெயர்ப்பாளர் | போதகர். மேஷாக் |
| பதிப்பாசிரியர் | கிரிஸ் பாலன் |
| பிழை திருத்துபவர் | போதகர். மேஷாக் |
| வடிவமைப்பாளர் & தட்டச்சு செய்பவர் | மா்.'.பி கோ |
| அச்சகம் | அக்கித்தியரா கார்ப்பரேஷன்<br>சென் பெர்ஹாட் |